திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

NOV 1960

சுசீந்திரம் ஸ்ரீதாணுமாலய சுவாமி

மாலை 3] சார்வரி, ஐப்பசி நவம்பர், 1960 [மணி 2

ரதி.

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு.

பொருளடக்கம்

1. பழனி கும்பாபிஷேகமும் மண்டலாபிஷேகமும்
2. திருக்களிற்றுப்படியார்
3. தென்காசி
4. இலஞ்சி
5. மூர்த்திநாயனர்
6. திருக்கயிலாய ஞானவுலா
7. திருப்பைஞ்ஞீலி
8. சுசீந்திரம்
9. கண்ணன்-கோபியர்
10. நவதிருப்பதிஅநுபவம்
11. மலைநாட்டுத்திருப்பதியநுபவம்
12 அறநிலையச் சட்டம்

உள்ளே வண்ணப்படங்கள்—இராஜராஜேசுவரி, சுசீந்திரம் ஆஞ்சநேயர்

—O—

சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

அறநிலையங்களும், மற்ற சந்தாதாரர்களும் 1960 அக்டோபர் முதல் தொடங்கும் மூன்றுவது ஆண்டுக் கையொப்பத் தொகை இதுவரை அனுப்பாதிருந்தால் உடனே அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படு கிறர்கள்.

ஆசிரியர்

திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்,

நுங்கம்பாக்கம் ஹைரோடு,

சென்னை-6

CONNEMARA PUBLIC LIBRARY
NOV 1960

இராஜராஜேசுவரி

CONNEMARA PUBLIC LIBRARY
3 - NOV 1960
MADRAS

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 3] சார்வரி ஐப்பசி-நவம்பர் 1960 [மணி 2

பழநி கும்பாபிஷேகமும் மண்டலாபிஷேகமும்

29-8-60 சோமவாரத்தன்று நடைபெற்ற மகாகும்பாபிஷேக நிகழ்ச்சிகளைப்பற்றி முந்திய இதழில் முக்கிய குறிப்புக்கள் வெளியிடப்பட்டன. அவ்வமயம் யாகசாலையில் கீழே காணும் சமித்துக்கள் உபயோகிக்கப்பெற்றன. கட்டு ஒன்றுக்கு 100 குச்சிகள்.

வரிசைகள்	சமித்து விவரம்	கட்டு
1	வெள்ளெருக்கு குச்சி 9 அங்குலம்	100
2	பலாசு	50
3	கருங்காலி	50
4	நாயுருவி	100
5	அரசு	250
6	மா	1000
7	வில்வம்	25
8	வன்னி	50
9	அத்தி	250
10	ஆல்	250
11	பலா (மரம்)	50
12	புன்னை	50
13	மகிழ் (மரம்)	50
14	மூங்கில் முள் வெட்டியது	200
15	மாதுளை	10
16	மலங்கிழுவை	100
17	வெள்ளறுகு	50
18	அறுகு	50
19	சந்தனக்கட்டை	20
20	இலாமிச்சம் வேர் 6 அங், 25 வேர் கொண்ட	500
21	வெட்டி வேர் 6 அங். நீளம் சிறிய முடி	500
22	செஞ்சந்தனக்கட்டை 6 அங். நீளம்	10
23	அகில் 6 அங். நீளம்	10
24	தேவதாரு ,,	10
25	பாதிரி	10
26	சணபகம்	10
27	அசோகம்	100
28	குங்கிலியம்	100
29	நெல்லி	10
30	மா, விறகு வண்டி 1	
31	அரசு விறகு வண்டி 1 ஒரு அடி நீளம் கைப்பருமன்.	

இத்தனை வகை சமித்துக்கள் இதற்கு முன்பு எந்த கும்பாபிஷேகத்திலும் உபயோகிக்கப்பெற்றது கிடையாதென்று சுமார் 100 கும்பாபிஷேகங்களுக்குமேல் பார்த்து கலந்து கொண்டவர்கள் சொல்லுகிறார்கள். இவற்றை உபயமாக சேகரித்துக்கொடுத்தவர் பொள்ளாச்சி அருகேயுள்ள வேட்டக்காரன்புதூர் திரு. வி. கே. சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்கள். ஒவ்வொரு கட்டிலுமுள்ள குச்சிகள் நன்றாக இழைக்கப்பெற்று பென்சில்கள் போல் வழுவழுப்பாக இருந்தன.

யாக சாலைக்கு வேண்டிய பழவர்க்கங்கள் திரு. குப்புசாமி யென்பவரால் ஏராளமாகச் சேகரித்துக் கொடுக்கப்பெற்றது. யாகசாலையில் கீழ்க்கண்ட பதங்கள் அமைக்கப் பெற்றிருந்தன :—

குக	பதம்	1
சக்தி	,,	8
நாத	,,	16
பிந்து	,,	24
சதாசிவ	,,	32
மகேசுவர	,,	40
சுத்தவித்யா	,,	48
கலா	,,	56
தத்வ	,,	64
புவந	,,	72
மந்த்ர	,,	80
பத	,,	88
வர்ண	,,	96
ருத்ர	,,	104
விஷ்ணு	,,	112

பிரம்ம	,,	120
சுத்தமாயா	,,	128
மிச்ரமாயா	,,	136
கலா	,,	144
காலம்	,,	152
நியதி	,,	160
வித்யா	,,	168
ராக	,,	176
தேவ	,,	184
கண	,,	192
சித்த	,,	200
ஆர்ஷ	,,	208
யக்ஷ	,,	216
கந்தர்வ	,,	224
சுர	,,	232
ரக்ஷா	,,	240
மாகவ	,,	248
		3969

மண்டலாபிஷேகம் 49-ஆம் நாள் 17-10-60 ஐப்பசி விசு சோமவாரத்தன்று பூர்த்தி செய்யப் பெற்றது. கும்பாபிஷேகத்தன்று சென்னை கிடங்குத் தெரு ஜவுளி மொத்த வியாபாரி திரு. அ. ரங்கையச்செட்டி கம்பெனியார் வெகு சிறப்பாக மகா அபிஷேகம் செய்து வைத்தனர். மண்டலாபிஷேக நிறைவு விழாவன்று திருவாரூர் திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார் அவர்கள் சிறந்த முறையில் மகாபிஷேகம் செய்வித்தார்கள். கும்பாபிஷேகத்திலிருந்து மண்டலாபிஷேகப்பூர்த்தி வரையில் யாகசாலை அப்படியே பாதுகாக்கப்பட்டு இருந்தது. இடையில் 29-9-60 ல் சென்னை கவர்னர் தம்பதிகள் திருக்கோயிலுக்குச் சென்று வழிபட்டபோது யாகசாலையையும் திருப்பணி செய்யப்பெற்ற பல பாகங்களையும் கண்டு களித்தார்கள். மண்டலாபிஷேக நிறைவு தினத்தன்று அதே யாக சாலையில் ஸ்நபன கிரியைகள் செய்து மகாபிஷேகத்தோடு 1008 சங்காபிஷேகமும் மிக விமரிசையாகச் செய்யப்பெற்றது. இந்த ஆலயத்தில் 1008 சங்காபிஷேகம் செய்வது இதுவே முதல் தடவையாகும். ஸ்ரீ சண்முகருக்கு 108 சங்காபிஷேகம் செய்யப்பெற்றது. ஆண்டுதோறும் இந்த கும்பாபிஷேக நினைவாக வருஷாபிஷேகம் மகாபிஷேகத்தோடு சங்காபிஷேகமும் சேர்த்துச் செய்ய வேண்டுமென்று தருமகர்த்தக் குழுவினர் திட்டமிட்டிருக்கின்றனர். இந்த கும்பாபிஷேக மண்டலாபிஷேக வைபவங்களை ஆகம விதிப்படி மிகச்சிறந்த முறையில் நடத்தித்தந்த பெருமை சித்தாந்தசரபம் மகாமகோபாத்யாய திரு. ஈசானசிவாசாரியார் அவர்களைச் சார்ந்தது. அவர்களுக்கும் அவர்களுடன் ஒத்துழைத்த திரு. சிவராஜ பண்டிதர், ஏனைய குருக்களமார்களுக்கும், இவ்வைபவத்தில் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை ஊக்கத்துடனும் ஆர்வத்துடனும் சலியாது உழைத்த தருமகர்த்தக்குழுவினருக்கும், நிர்வாக அலுவலர்களுக்கும், ஏனைய சிப்பந்திகளுக்கும், மற்றும் உபயதார்கள் முதலிய அனைவருக்கும் சைவ உலகம் பெரிதும் நன்றி செலுத்தக்கடமைப்பட்டுள்ளது.

கும்பாபிஷேகம் என்பது பெருஞ்சாந்தி, அல்லது பிராயச்சித்தம். அது உள்ளம், உரை, செயல்களால் அறிந்தோ அறியாமலோ செய்யப்பட்ட லோபங்கள் அல்லது குறைபாடுகளின் தீர்வைக் குறித்துச் செய்யப்படும் சேவைகளும் சாந்தியுமாகும். வழிபாடுகளினாலும் விரதம் முதலிய நியமங்களினாலும் தீராதவினைகளும் கும்பாபிஷேகத்தால் தீரும் என்பர் பெரியோர். ஒருவன் செய்த தீவினைக்கு நல்வினையால் தீர்வுண்டென்பதைப் பின்வரும் சிவப்பிரகாசச் செய்யுளால் அறியலாம்.

உற்றதொழி னினிவுரையி லிருவினையு முளவா
மொன்றொன்று லழியாதூ ஞெழிய ரதுன்னின்
மற்றவற்றி னெருவினைக்கோர் வினையால் வீடு
வைதிகசை வம்பகரு மரபி னுற்றுப்
பற்றியது கழியுமிது விலையா லேற்கும்
பான்மையுமாம் பண்ணுது பலிக்கு முன்னஞ்
சொற்றருநூல் வழியின்வரின் மிகுதிசோருஞ்
சேராதங் கதுமேலைத் தொடர்ச்சி யாமே.

—சிவப்பிரகாசம்.

மயிலையில் பூம்பாவையை எலும்பிலிருந்து உயிர்ப்பித்தபோது பாடிய திருப்பதிகத்தில் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளும் கும்பாபிஷேகத்தைப் பெருஞ்சாந்தியென்றே கூறுவதைக் காண்கிறோம்.

"உரிஞ்சாய வாழ்க்கை
யமணுடையைப் போக்கும்
இருஞ்சாக்கியர்க ளெடுத்து
ரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த
கபாலீச்சர மமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணுதே
போதியோ பூம்பாவாய்."

—சம்பந்தர்.

சிதம்பரம்: *அனந்தீசுவரர் கோயிலில் 15-9-60-ல் திரு. எஸ். இரத்தினசாமி செட்டியார் அவர்கள் தலைமையில் ஷெ ஆலய விமானத்திருப்பணி துவக்கிவைக்கப்பட்டது. அத்திருப்பணிக்காக திரு. எஸ். இரத்தினசாமி செட்டியார் அவர்கள் ரூபாய் நூற்று ஒன்று (ரூ. 101) அன்பளிப்பாகக் கொடுத்தார்கள்.*

திருக்களிற்றுப்படியார்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.

(முன் தொடர்ச்சி)

அணைந்தோர்தம் அநுபவம்பற்றி உணரப்படும் முதல்வன் இயல்பு:—

அமுதம் உண்டாரே அதன் சுவையை உணர்ந்தவர் ஆவர்; அதுபோல, அதீத வாழ்விற்போய் அன்று பேரின்பத்தைத் துய்த்த பெருமக்களே இறைவன் வரம்பில் இன்பம் உடைய இன்ப வடிவினன் என்பதையும், ஆண்டு அவன் பேரின்ப சத்தி எனப்படும் பெரியநாயகியோடு உடனாய் நிற்கின்றான் என்பதனையும் தலைப்பட்டுணர்ந்தோர் ஆவர். ஏனைய பெத்தர்கள் அவன் இயல்பைச் சிறிதும் உணரார்.

பேரின்ப மான பிரமக் கிழத்தியுடன்
ஓரின்பத் துள்ளானை உள்ளபடி—பேரின்பம்
கண்டவரே கண்டார்; கடலுயிர்த்த இன்னமுதம்
உண்டவரே உண்டார் சுவை. (எஎ)

பிரமக்கிழத்தி-பெரியநாயகி; ஓர் இன்பத்து உள்ளானை - இன்புறு நிலைக்கண் உள்ளவனை.

இங்ஙனமாயின், முதல்வனும் பெரிய நாய்ச்சியாரும் ஒருவரேயே இருவரோ எனின், பின்வரும் வெண்பாக்களால் விடை கூறுகிறார்:—

முதற்பொருள் அம்மையப்பராய் நிற்குமுறை

வீட்டு நிலையில் முதல்வன் முத்தான்மாக்களால் அனுபவிக்கப்படும் பேரின்பப் பிழம்பாகவும், அவ்வின்பத்தை அவற்றின் உணர்வில் தோற்றுவிக்கும் இன்ப சத்தியாகவும் இருதிறப்பட்டு, அமுதமும் சுவையும் போல, குணகுணியாய் இயைந்து நிற்பன் என்பது முன்னர்க் கூறப்பட்டது. பிறப்பு நிலையினும் அவன், தானும் தன் சத்தியும் என, இருதிறப்பட்டியைந்து நின்றே உலகைத் தொழிற்படுத்துவன் என்பதை ஓர் உவமையால் விளக்குகின்றார் ஆசிரியர்:

நங்கையினால் நாமனைத்தும்
செய்தாற்போல் நாடனைத்தும்
நங்கையினாற் செய்தளிக்கும்
நாயகனும்—நங்கையினும்
நம்பியாய்த் தானடுவே
நாட்டப் பெறுமிது காண்
எம்பெருமா னார்தம்
இயல்பு. (எஅ)

நங்கை முதலாவது நம் கை எனப் பிரியும். ஏனையிரண்டும் பிரியாது நின்று சத்தி எனப் பொருள்படும்.

இடுதல், ஏற்றல் முதலாக நாம் செய்யும் செயல்களை நம் கையையே கருவியாகக் கொண்டு செய்கின்றோம். இதுபோல, முதல்வனும் தனது சத்தியைத் துணைக்காரணமாகக் கொண்டே உலகனைத்தையும் படைத்துக் காத்தருள்வன். மேலும், அவன் தன் சத்தியாகிய நாயகிக்கு நாயகனாய், சத்தியே தனக்குமூர்த்தியாக (வடிவமாக), தான் அதன்முதலாக, உடலின் உயிர்போல, நிற்பன் என்பதும் உண்மை நூல்களால் துணியப்படும். (முதல்வன், அறிவு மாத்திரையாய்த் தன்னியல்பின் நிற்கும் நிலையில் சிவம் எனப் பெயர்பெறுவன் எனவும், புறப்பொருளை நோக்கி அவற்றை உணர்த்தியும் தொழிற்படுத்தியும் நிற்கும் நிலையில் சத்தி எனப் பெயர் பெறுவன் எனவும், ஆதலால் பொருண்மையால் சிவமும் சத்தியும் வேறு அல்ல எனவும் உணர்ந்துகொள்க.)

இதனால், முதல்வன் தானும் தன் சத்தியும், கரணமும் கருத்தாவும், மூர்த்தியும் மூர்த்திமானும், குணமும் குணியும், நாயகியும் நாயகனும் என இருதிறப்பட்டு இயைந்து நின்றே உலகைத் தொழிற்படுத்துவன் என்பது விளக்கப்பட்டது.

"உமையலா துருவம் இல்லை..........ஐயன் ஐயாறனார்க்கே" என்னும் அப்பர் அருள்

மொழி சத்திசத்திமானுக்கு மூர்த்தியாதலை விளக்கும்.

பொன்னின் மாற்று எனப்படும் நிறம் பொற்கட்டியிலும், அதனால் ஆகிய அணியிலும் வேறுபடாமல் ஒன்றேயாதல்போல, முதல்வனது தன்மையும் சத்தியின் தன்மையும் பொருண்மையால் ஒன்றே ஆகும். தன்னை அடுத்த வண்ணத்தைக் காட்டி நிற்கும் பளிங்கு உண்மையில் தானே தன் நிறமோ எவ்வித மாறுதலும் அடையாது நிற்பதுபோல, சிவசத்தியும் தன்னாற் பிரியப்படும் பசுபாசங்களில் நிகழும் காரியம் வேறுபாடுபற்றிப் பலவேறு இயல்புடையதாகப் பேசப்படினும், உண்மையில் எவ்வித மாறுதலும் அடைவதில்லை. ஆயினும், தனது காரிய வேறுபாடுபற்றிப் பரவிந்து, அபரவிந்து, மனோன்மணி, மகேசுவரி, உமை, திரு, வாணி எனச் சத்தி பல பெயர்கள் பெறும்போது, அவ்வச்சத்தியை உடையவனாக எண்ணப்படும் முதல்வனும் முறையே பரநாதம், அபரநாதம், சதாசிவன், உருத்திரன், மால், அயன் எனப் பெயர்கள் பெறுவன்.

குறிப்பு: செந்நிறத்தள் - மாறுபடாத தன்மையள் (௭௬)

சத்தி சிவங்களின் இயைபை விரித்துக் கூறப்புகின், சூக்கும ஐந்தொழில் இயற்றும் இலய நிலையில், அறிவுவிழைவு செயல் எனப்படும் தனது சத்தியின் வடிவே தனது வடிவாகக்கொண்டு தனது தாரத்தோடு ஒன்றாய் நிற்பர்; தூலஐந்தொழில் நிகழ்த்தத் தொடங்கும் போக நிலையில், மாதொரு கூறனாய் நிற்பர்; தூல ஐந்தொழில் நிகழ்த்தும்போது, தாம் தமது சத்தியோடு உடனாகி நின்றே எவற்றினும் கலந்து நிற்பர்; நாதத்தின் முடிவில் உள்ள ஆன்ம உணர்வில் அம்மையப்பராய் இருந்து அறிவைப் பிறப்பிப்பர்; அயன் மால் உருத்திரன் என்னும் குணமூர்த்திகளும், குணங்கடந்த துரியமூர்த்தி என்னும் பரமசிவனும் ஆகிய நான்கு இடங்களிலும் சத்தியும் தானுமாக இருப்பர்; வேதாந்தம் எனப்படும் உபநிடதங்களுட் கூறப்படும் தியான முறைகளிலும் பரம ஆகாசம் எனப்படும் திருச்சிற்றம்பலம் எனவும் அதனை இடமாகக்கொண்டு நடனம் புரிகின்றவர் எனவும் தனிச் சிறப்புள்ளவராக இருப்பர்.

தாரத்தோ டொன்றுவர் தாரத்தோர் கூறுவர்
தாரத்தோ டெங்கும் தலைநிற்பர்-தாரத்தின்
நாதாந்தத் தேயிருப்பர் நாற்றானத் தேயிருப்பர்
வேதாந்தத் தேயிருப்பர் வேறு (௮௦)

இதனால், முதல்வன் அம்மையப்பராய் இருத்தலை வேதம், வேதாந்தம், ஆகமம், ஆகமாந்தம் என்பவைபற்றி விளங்கும் கலை ஞானத்தாலும், அவற்றைக் கடந்த பரஞானத்தாலும் பெருமக்கள் உணர்ந்து கூறியவை நினைப்பூட்டப்பட்டன. முதல்வன் நிலைகளாகிய அதிகாரம், போகம், இலாபம், சொரூபம் என்பவற்றை நாற்றானம் எனினும் அமையும்.

திருவெழுகூற்றிருக்கையில் "ஓர் உருவாயினை; மான் ஆங்காரத்(து) ஈர்இயல்பாய், ஒருவிண் முதல்பூதலம் ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும் படைத்தளித் தழிப்பு மும்மூர்த்திகள் ஆயினை" என்னும் பகுதி தாரத்தோ டொன்றுவர் என்பது முதலிய மூன்று வகைகளையும் உணர்த்துதல் காண்க.

நாற்றானத்தொருவனை என்னும் நம்பி ஆரூரர் அருந்தமிழ் நாற்றானத்தே இருப்பர் என்றமைக்கு மூலம்.

இனி, அருணூல்களின் நெறிவாராத மக்கள் தம் அறிவால் ஆக்கிக்கொண்டுள்ள சாத்திரங்கள் 'இது ஆகும், அது அல்லது' எனப் பிணங்கும் எனவும், அந்நூல்களையே தலையாய ஒத்தாகக் கொள்வார்க்கு முதல்வன் இயல்பை உள்ளவாறு உணர்த்தப்புகின்; "காணாதாற் காட்டுவான் தான் காணான்" என்றபடி ஆகும் எனவும் கூறுகின்றார்:—

ஒன்றுரைத்த தொன்றுரையாச்
சாத்திரங்கள் ஒன்றாக
நின்றுரைத்து நிச்சயிக்க
மாட்டாவால்—இன்றுரைக்க
என்னால் இயன்றிடுமோ
என்போல்வார் ஏதேனும்
சொன்னால்தான் ஏறுமோ சொல் (௮௪)

முதல்வன் உலகுயிர்களோடு கொண்டுள்ள சம்பந்தம் அத்துவிதம்

பின்வரும் ஐந்து பாட்டுக்களால் இறைவன் உலகுயிர்களோடு எல்லாமாய் வேறாய் உடனாந் தன்மை எனப் பேசப்படும், அத்துவிதமாந் தன்மையில் கலந்துநிற்றலைத் தெளிவிக்கின்றார்:

அருட்சத்தியோடு கூடிய முதல்வன் தானும் தன் சத்தியும் முறையே நிமித்த காரணமும் துணைக்காரணமுமாக நின்று எல்லாப் பொருள்களையும் தொழிற்படுத்துவன் என்பது மேலே விளக்கப்பட்டது. இங்ஙனம்தான் விச்சுவகாரணனாக இருத்தலால், எவ்வுலகில் உள்ள எவ்வகைப்பட்ட எப்பொருளும் முதல்வனது உண்மையைக் குறிக்கும் அடையாளமே ஆகும்; ஆதலின், முதல்வனையும் உலகையும் பேதம் என்றும் கூறலாம், அபேதம் என்றும் கூறலாம். பின் பேதாபேதம் என்றுங் கூறலாம். இம்மூன்று தன்மையும் ஒருங்கே தோன்ற நிற்பதே முதல்வன் இயல்பாம். (அஉ)

(இலச்சினை - அடையாளம்)

மெய்ந்நூல்கள் முதல்வனை மன்றில் நின்று ஆடுகின்றான் எனக் கூறும்; இதனால், அவன் உயிர்களின் உணர்விற் கலந்து நின்று உடனாகிச் செலுத்துகிறான் என்பது விளங்கும். அவனை அவை அட்டமூர்த்தி எனப் புகலும்; அதாவது, மண், புனல், அனல், கால், வான், ஞாயிறு, திங்கள், உயிர் என்னும் எட்டையும் தனக்கு வடிவாக உடையன் எனக் கூறும். இதனால், அவன் எல்லாமாய் நிற்றல் புலனாம். மேலும், முற்றழிவுப் பேருழிக் காலத்தில் தானும் தன் சத்தியும்மட்டும் நிற்பப் பிற பொருள் எல்லாம் ஒடுங்கத் தான் சூக்கும ஐந்தொழில் நிகழ்த்துவன் என்றும் கூறும் இதனால், அவன் உலகத்துக்கு வேறாதல் விளங்கும். இவ்வாறு, முதல்வன் உயிர்களோடு அவையேயாய்த் தானே ஆய் உடனாய் நிற்கும் நிலையை முத்தர்கள்தாம் உணர்வர்கள்.

பிறப்பு நிலையில் முதல்வன் உயிர்க்குயிரா யிருந்தும், அவன் தன்னைக் காட்டாமல் தோன்றாத் துணையாய் உயிர்களின் அறிவில் மறைந்து நிற்பன். இதுபோல், முதல்வனைத் தம் அறிவிற்கண்டு, அவன்றன் அருணிறைவில் அடங்கித் தன்முனைப்பு அற்றவரே முத்தர் ஆவர். (அங)

எல்லாம் சிவன் செயல் என்று அனுபவமாய் அருளாசான் உணர்ந்து நிற்பதுபோல, தன் முனைப்பும் தன் உணர்வும் இன்றிச் சிவம் ஒன்றனையே உணர்ந்து சிவமாகியே நிற்பதே பரமுத்தி நிலை; அங்கே சிவத்தைப் பெறுகிறோம் என்று திரிபுடி உணர்வு தோன்ற நிற்பாரும் இல்லை; தம் உணர்வு இல்லையாகப் பின் சிவத்தைப் பெறுவாரும் இல்லை. ஒரு பொருளில் அழுந்தி இன்புறுவார் அந்நிலையில் தாம்இருந்தும் தமது இருப்பை நினையாதவாறு போல, முத்தரும் தாம்உளரேயாயினும் தமது இருப்பை அந்நிலையில் உணரார். (அச)

அது இது (சோயம் அஸ்தி), அவன் நானே (சோஹம்), அதுநீயே ஆகின்றாய் (தத்வம் அஸி), அது ஆனேன் (சோஹம் அஸ்மி) என்பவை மகாவாக்கியங்கள். இவை முதற்பொருளைத் தலைப்பட்டுணர்ந்தோரால் உரைக்கப்பட்டு, மாணாக்கனைச் சிவமாகப் பாவித்து அருட்கொடை வழங்குதற்கும், அவன் உணர்வு ஒரு நெறிப்படுதற்குச் செய்யப்படும் உபதேசத்திற்கும், பின் அவன் அந்நிலையை அடைதற்கு வேண்டப்படும் அப்பியாசத்திற்கும் உதவுவன. இவ்வாறு, தம்மையும் முதல்வனையும், ஆசான்அருள் உபதேசம், அப்பியாசம் என்பவற்றால், உணர்ந்தவர் தம்மையும் முதல்வனையும் ஒரே பொருள் என்றோ தாம் முதல்வனின் வேறே என்றோ கூற ஒருப்படார். (அரு)

முதல்வன் உலகுயிர்களோடு ஒன்றாய், வேறாய், உடனாந்தன்மையில், அபேதம், பேதம், பேதாபேதம் என்னும் மூன்று தன்மையும் ஒருங்கே தோன்றும்படி நிற்பன் என்பதற்குத் தலையாய பிரமாணம் யாதோ எனின், ஞானத்தின் எல்லையாய் விளங்கும் திருஞானசம்பந்தர் வாய்மொழியே ஆம்.

'ஈறாய்முதல் ஒன்றாய்இரு
பெண்ணாண்குணம் மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு
பூதம்மவை ஐந்தாய்
ஆறார்சுவை யேழோசையொ
டெட்டுத்திசை தானாய்
வேறாய்உடன் ஆனான்இடம்
வீழிம்மிழலையே''

என்பது திருஞானசம்பந்தர் திருவாக்கு.

சிவமே சிவமாக யான்நினைந்தாற் போலச்
சிவமாகி யேயிருப்ப தன்றிச்—சிவமென்(று)
உணர்வாரும் அங்கே உணர்வழியச் சென்று
புணர்வாரும் உண்டோ புவி (அச)

அதுஇது-என்றும் அவன்நானே என்றும்
அதுநீயே ஆகின்றாய் என்றும்—அதுஆனேன்

என்றுந் தமையுணர்ந்தார் எல்லாம் இரண்டாக
ஒன்றுகச் சொல்லுவரோ உற்று (அடு)

ஈருகி அங்கே முதலொன்றுய் ஈங்கிரண்டாய்
மாருத எண்வகையாய் மற்றிவற்றின்-வேருய்
உடனுய் இருக்கும் உருவுடைமை என்றும்
கடனுய் இருக்கின்ருன் காண் (அசு)

குறிப்பு: அது இது, அதுநீயே ஆகின்ருய் அவன் நானே என மூவிடம்பற்றி எழுந்த மகா வாக்கியங்களில், அது என்பதும் அவன் என்பதும் முதல்வனைக் குறிக்கும். இது, நீ, நான் என்னும் மூவிடம்பற்றிய மூன்றும் உயிரையே குறிப்பன.

இவற்றுள், அது இது என்பது ஆசாரியன் பக்குவான்மாவைக் குறித்துச் "சிவோயம்" (சிவம்இது) எனத் தன்னுள்ளே பாவிக்கும் பாவனையைக் குறிப்பது. அது நீயே ஆகின்ருய் என்பது அவ்வாசிரியன் அவ்வான்மாவுக்குச் "சிவத்துவம் அசி" (சிவம்நீ) என அறிவுறுத்தும் உபதேசத்தைக் குறிப்பது; ஏனையது அங்ஙனம் உபதேசிக்கப் பெற்ற ஆன்மா அவ்வுபதேசப் பொருளைப் பயின்று "சிவோகம்" (சிவம்நான்) எனப் பாவிக்கும் உபாசனையைக் குறிக்கும்.

மேற்கூறிய உபதேசத்தில், அது என்பது முதல்வன், நீ என்பது யான் என்னும் உணர்வுக்கு முதலாக உள்ள ஆன்மா. ஆன்மாவை முதல்வனுகப் பாவித்தற்கு ஏதுவாக அவ்விரண்டனுக்கும் உள்ள சம்பந்தம் யாதோ என்னும் வினவிற்கு விடையாகக் கூறப்படும் சம்பந்தம் உணர்த்தும் சொல்லே அத்வைதம் என்பது. இவற்றின் விரிவைச் சிவஞான பாடியத்துக் காண்க.

இனி, முதல்வன் உலகெலாமாகி, வேருய், உடனுமாய் நிற்பன் எனக்கேட்ட மாணக்கன் வினவுகின்ருன்; முதல்வன் அவ்வாறு நிற்பின், உலகத்தில் உயிர்கள் எய்தும் இன்பத்துன்ப நுகர்ச்சியும் மாறுதல்களும் முதல்வனுக்கும் ஆகுமே ?"

அதற்கு விடை :

உன்உதரத் தேகிடந்த
கீடம் உறுவதெல்லாம்
உன்னுடைய தென்ருய்நீ
உற்றனையே—மன்னுயிர்கள்
அவ்வகையே காண்இங்
கழிவதுவும் ஆவதுவும்
செவ்வகையே நின்றசிவன்
பால் (அஎ)

உன்வயிற்றில் அளவற்ற புழுக்கள் தோன்றி நின்று மாயவும் நீ அவற்றுக்குச் சார்பாக இருந்தே அவற்ருல் தொடக்குருதது போல, முதல்வனது பேரருள் நிறைவில் அடங்கி நின்று உயிர்கள் பிறப்பு இறப்புக்களை மேற்கொண்டுவரினும் அவன் அவற்றில் தொடக்குண்டு விகாரப்படாது செம்பொருளாகவே உளன்.

இன்னும், அது சங்கற்பித்தது பலவும் ஆவேன் ஆக என" (தத்ஐக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேய) என்பது முதலாக எழுந்த சுருதிகளுக்கு ஏற்ப, முதல்வனது உண்மை யியல்புகளைப் பின்வருமாறு உணர்ந்துகொள்க :

அவனே அவனிமுதல் ஆகிநின் றுனும்
அவனே அறிவாய் நின்றுனும்—அவனேகாண்
ஆணுகிப் பெண்ணுய் அலியாகி நின்றுனும்
காணுமை நின்றுனும் கண்டு (அஅ)

நிலமுதல் நாதம் இறுதியாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களை உடனின்று தோற்றுவித்தவனும், உயிர்களின் அறிவுக்கும் ஆண்பெண் அலி என்னும் முத்திறப்பகுப்புக்கும் ஆதியாக நின்றவனும், எல்லாவற்றையும் தான் கண்டும், பிறரால் தான்காணப் படாது நின்றவனும் முதல்வன் ஒருவனே என அறிக. உயிர்களுக்கு இவ்வியல்பு ஒரு சிறிதும், என்றும், எங்கும் இல்லை என்பதையும் உய்த்துணர்ந்து கொள்க.

முதல்வன் எல்லாமாய் நிற்பன் எனின், உலகைக் காணும் யாம் அவனைக் கண்டதாகக் கொள்ளலாமே எனின், விடை கூறுகின்ருர்:-

இப்பொழுது நீ என்னை உடம்பு வழியாகக் காண்கின்ருய், ஆயினும், என் அறிவுருவைக் காணவில்லை. மேலும், யானும் உன் உடம்பைக் கண்டும் உன் அறிவுருவைக் காணவில்லை. இவ்வாறு, செயற்கரிய செயலைச் செய்யும் மாயையைக் காரியப்படுத்தும் உமையொருபாகனை அம்மாயையால் விளையும் மயக்க உணர்வினின்று நீங்கிக் காண்பார் ஒருவரும் இல்லை, முதல்வனே அருளாசிரியனுய் வெளிப்பட்டுக் காட்டின் அல்லது. (அகூ)

சிவன் குருவாய் வரும்போதும் கருத்துக்குச் சேயனே.

கடல் அலைகளை உடையதாய்த் தன்கண் வந்து முழுகுவார்க்கு இன்பம் செய்வதாயினும், தன் நீள அகல ஆழங்களை ஒருவர் அளந்துணர எளிவருவதில்லை. இதுபோல, முதல்வன் மெய்யன்பர்களை ஆசிரியனாய் வந்து ஆண்டருளும்போதும், ஆர் அறிவார் அவர் பெற்றியே?" என்றபடி, அவனியல்பு உயிர்களின் அறிவுக்கு அப்பாற்பட்டதே ஆம். (௬0)

"சிவன் என யானும் தேறினன் காண்க; அவன் எனை ஆட்கொண்டருளினன் காண்க" என வாதவூர் அடிகள் அருளிச் செய்தமையால், முதல்வன் ஆசானாய் வெளிப்படுவதை, கடல்நீரின் உவர்ப்புச் சுவை உப்பாக உருக் கொண்டாற்போல, திருவருளின் உரு எனவே கொள்க. (௬௧)

சிவன் முத்தர்களாகிய சுத்தான்மாக்களையே அருளாசிரியர் எனக் கொள்ளுதல் கூடாதோ என்னின், கூடாது. முதல்வன் தனது பேரருளால் சுத்தான்மாவை இடமாகக்கொண்டு அருளல் என்னும் செயலைச் செய்வனேயன்றி, சிவாநுபவம் ஒன்றனுக்கே உயிர் உயிர் முதல்வனாக நின்று அருளவல்லதன்று; உலகில் கனியைத் தரும் மரங்கள் அக்கனியைத் தம்மை அணைந்தார்க்குப் பயக்குமேயன்றி, அம்மரத்தைச் சார்பாகப்பற்றி வாழும் புல்லூரி பயவாது. (௬௨)

சைவ சித்தாந்தத்தின் தொகைப் பொருள்

சிவம் என்னும் கொழுகொம்பைச் சார்ந்து இன்புறுதற்கு உரிய உயிராகிய கொடியின்மீது ஆணவம் என்னும் கிழங்கினின்று தோன்றிய மோகம் என்னும் கொடி படர்ந்து உடம்பு என்னும் உண்ணத் தகாத பழத்தைப் பயந்துவிட்டது; அருளாசான் வழங்கும் திருவருள் என்னும் சத்தியால் மோகக் கொடியை அறுத்துவிட்டால், சிவத்தோடு ஒன்றி நிற்கும் உயிர்க்கொடி ஓங்கி நின்று முத்தியாகிய பழம் பழுக்கும்.

முத்தி முதற்கொடிக்கே மோகக்கொடி படர்ந்(து)
அத்தி பழுத்த தருளென்னும்—கத்தியினல்
மோகக் கொடியறுக்க முத்திப் பழம்பழுக்கும்
ஏகக் கொடியெ ழுங்காண் இன்று (௬௩)

அத்தி-எலும்பு; அஃது எலும்பை மூலமாக உடைய உடம்பைக் குறித்தது: அத்திப் பழத்தையும் குறித்து உண்ணத் தகாதது என்பதை உணர்த்துகின்றது. 'அத்திப் பழத்தைப் பிட்டால் அத்தனையும் சொத்தை' என்பது பழமொழி.

ஆசான் அருள் நினைந்து வாழ்த்தி நூலை முடித்தல்.

யார் உணர்வுக்கும் அப்பாற்பட்ட முதல்வன், திருவுருக்கொள்ளாத வியாபக நிலையில் ஆனந்தமும் ஆனந்தத்தை உடைய பொருளும் என இருதன்மையுள்ள ஒரு பொருளாயிருந்து, திருவுருக்கொள்ளும் போது, தனது சொரூப நிலைக்கு ஏற்புடைத்தாக அம்மையோடு கூடிய திருவுருவைத் தாங்கித் தன்னை வழிபடுவார்க்கு அறியாமை விலங்கை விடைத்தெறிந்து வருவான்; அவனே ஆசிரியனாய்த் தோன்றி எனது புல்லிய தலைமேல் தனது பொலிவினை உடைய திருவடிகளைச் சூட்டுவதும் செய்தருளினான். (௬௪)

அவ்வாற்றால் உயிர்க்குற்றமாகிய மல மாயை கன்மங்களை வேரோடு அறுத்து இல்லையாக்கி, யான் செய்யும் ஞானச் செய்தியாகிய தியானத்திற்கு வியஞ்சகமாய் (விளக்கும் பொருளாய்) உடன்நின்று உபகரிப்பன்; அத் தியான முதிர்ச்சியில், பிற எல்லாங் கெடத்தானே சிறந்து விளங்குவதாய் சிவம் என்னும் பேரின்பப் பொருளாய் என் உணர்வில் நேர்பட நிற்பன். அந்நிலையின் நெகிழ்ந்து என் சிறுமையால் யான் வேறொரு பொருளை (உலகப் பொருளை)க் காணலுறின், அப்பொருளிற் கலந்து ஆண்டும் தன் திருவடிப் பேரின்பத்தையே விளையுப்படி செய்வன். (௬௫)

ஆளுடையான் என்னும் பெயருடையான், என் போலியரையும் ஆட்கொள்ளும் பேரருள் உடையான், மெய்யுணர்வை விளைக்க வல்ல திருவடியினை உடையவன், தொண்டர்களுக்குத் தலையாய பாதுகாப்பாக உள்ளவன், திருவிசல் ஊரை உடைய சிவயோகி—இன்ன இயல்புடைய பெருமான் இன்று என்னிடம் போந்து பிறவிநெறியிற்கடிது செல்லும் என் உணர்வின் வேகத்தைத் தடுத்து முத்திநெறிக்கண் உய்த்தருளினான். (௬௬)

தன்னைச் சார்ந்த பொருள்களின் பல வேறு நிறங்களையேபற்றித் தன் ஒளிவிளங்கா திருப்பது பளிங்கு; அதுபோல, பொறிகளும் கரணங்களுமாயவற்றைச் சார்ந்து அவற்றின் இயல்பையே என் இயல்பாக மயங்கி யறியாத படி, தக்க காலத்தே தன் திருவடிகளை எனக்கு அரணாகத் தந்து, என் பிறவி வேர் எரிந்து நீறாகும்வண்ணம் திருநோக்கம் செய் தருளிய ஆசானுக்கு என்றும் மீளா அடி மையா யிருப்பதன்றி, வேறு செய்யும் கைம் மாறு யாது உளது?

தூலத் தடுத்த பளிங்கின் துளக்கமெனத்
தூலத்தே நின்று துளங்காமல்—காலத்தால்
தாளைத்தந் தென்பிறவித் தாளை
அறவிழித்தார்க்(கு)
ஆளன்றி என்மா றதற்கு (கூஎ)

இப்போதே முதல்வன் இவ்வுடலைப் பிரித்து எனக்கு நிறைவு நிலையை எய்துவித் தாலும், அன்றிச் சீவன்முத்தி நிலையிலேயே இருத்தி, யான் தன்னை நினைந்தபோதெல்லாம் ஆனந்தத் தேனைச் சொரிந்தாலும் திருத் தொண்டர்க்கு நாயகனும் நாயகியுமாயுள்ள முதல்வனுக்கு மீளா அடிமையாயிருத்தலே யன்றிப் பிறிதொரு செயலுடையேன் அல்லன். (கூஅ)

என் உயிர் முதல்வன், பிறப்பு நிலையில் உயிர்க்குயிராயுணர்த்தி உடன்நின்று, பின் குருவுருவில் தோன்றி என்னைச் சிறப்பாக ஆட்கொண்டமையால், என் உண்மை யியல்பை அறியப் பெற்றேன்; அறிந்தபின் அங்ஙனம் அறிந்த அன்பர் குழாத்துள் புகுந்து அவர்க்கே ஆளாய்த் தோய்ந்து நிற்கப் பெற்றேன். (கூகூ)

என் சிந்தையில் தியானிக்கப்படும் பொருளாகவும், சென்னியில் திருவடிசூட்டும் பொருளாகவும் ஆசான் வடிவில் தோன்றி, நமக்கு இப்பிறவி வாராமல் மெய்யுணர்வளித்த பெருமானைத் தனது அருட்சத்தியுடன் வாழ்க என ஒல்லும்வகை வாழ்த்துவதன்றி வேறு என் சொல்லி யான் இப்போது வாழ்த்துவேன்? (க௦௦)

திருக்களிற்றுப்படியார் முற்றிற்று

திருமாற்பேற்றில் மெய்கண்டார் கழக வழிபாடு: தொண்டை நாட்டுப்பாடல் பெற்ற சிவத்தலங்கள் 32ள் ஒன்றுனது திருமாற்பேருகும். அங்குக்காஞ்சி மெய்கண்டார் கழகத்தினர் 200 தொண்டர்களுடன் 1269 வது ஞாயிறு (2—10—60) வழிபாடு செய் தனர், சிவஞான போதக்கூட்டுப்பிரார்த்தனைக்குப் பின் திரு. க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ. எல். டி. அவர்கள் திருமாற்பேற்றுப் படலம் பற்றிச் சொற்பொழிவாற்றினுர்கள். திரு. திருஞானசம்பந்த முதலியார் எல்லோரையும் வரவேற்றுத் தல விளக்கம் கூறி ஞர். தருமகர்த்தர் திரு. மணிகண்ட முதலியார், ஐவுளி திரு. மகாதேவமுதலியார் சிறப்பு வழிபாட்டை நடத்திக்கொடுத்தனர். திரு. தி.அ. ரா. இராமசாமி முதலியார் சிறந்த மகேசபூஜை நடத்தினுர்.

சிதம்பரம்; தில்லையம்மன் கோயில் நவராத்திரி விழாவை முன்னிட்டு 30-9-60-ல் தென்னுற்காடு மாவட்ட அறநிலைய ஆட்சி இலாகா உதவி ஆணையர் திரு. ஆர். ஏ. வரதராஜன், பி.ஏ., அவர்கள் தலைமையில் திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் "சீதா கல்யாணம்" என்பதுபற்றி சொற்பொழிவாற்றினுர்கள்.

சிறுவாச்சூர்: மதுரகாளியம்மன் கோயிலில் ஜீர்ணோத்தாரணம் நடத்துவதற்காக ஆஸ்திகப் பெருமக்கள் பொருளுதவி செய்யும்படி வேண்டிக்கொள்ளப்படுகிறுர்கள்.

திருவண்ணுமலை: அருணுசலீசுவரர் கோயிலில் கார்த்திகை பிரம்மோற்சவம் 23-11-60 முதல் 2-12-60 வரை நடைபெறும்.

சிதம்பரம்: அனந்தீசுவரர் கோயிலில் 2-10-60 முதல் 7-10-60 வரை இராமாயண சொற்பொழிவு வித்வான் திரு. வி. ஏ. பத்மநாப சர்மா பி.ஏ., பி.ஓ.எல்., அவர்களால் நடை பெற்றது.

தென்காசி

உலகதி னேற்ற மான
வுவணமா லன்ன வூர்தி
இலகிவர் மனவாக் கிற்கு
மெட்டொணு வருமை காட்டிப்
பலன்மிகத் தருதென் காசிப்
பதிவளர் புனல்சேர் சென்னி
நலனுறு விசுவ நாதர்
நறுமலர்க் கழலுட் கொள்வாம்
—தென்காசித் தலபுராணம்.

தென்காசி என்ற தலம் திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசிப் பகுதியின் தலைமை இடமாக அமைந்தது. தென்காசி என்ற இருப்புப்பாதை நிலையத்திலிருந்து சுமார் ஒருகல் தொலைவுக்குள் இருக்கிறது. இந்த தலத்திற்கு சச்சிதானந்தபுரம், முத்துத் தாண்டவநல்லூர், ஆனந்தக்கூத்தனூர், சைவ மூதூர், தென்புலியூர், குயின்குடி, சித்தர் வாசம், செண்புகப்பொழில், சிவமணவூர், சத்தமாதரூர், சித்திரமூலத்தானம், மயிலைக் குடி, பலாலிங்கப்பாடி, வசந்தக்குடி, கோசிகை, தட்சிணகாசி முதலிய பல பெயர்கள் உண்டென்று தலபுராணம் கூறு கிறது.

சிவபெருமான் திருக்கோயில் ஊரின் நடுநாயகமாக விளங்குகிறது. அண்மையி லுள்ள திருக்குற்றால அருவி நீர்வீழ்ச்சி சிற்றாறு (சித்திரா நதி) என்னும் பெயருடன் ஓடி வந்து இக்கோயிலுக்கு மேல்புறமிருந்து தெற்கு பக்கமாக ஓடுகிறது. கோயிலைச் சுற்றித் தேரோடும் தெருக்கள் உள்ளன. மாசி மாதத்தில் தேர்விழா நடைபெறுவதால் இத்தெருக்களுக்கு மாசிவீதிகள் என்று பெயர் கூறுகின்றனர்.

கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. இறைவன் சந்நிதி, அம்பிகை சந்நிதி இவை களுக்கு நேரே வாயில்கள் உள்ளன. சுவாமி வாயில்மேல் உள்ள கோபுரம் அழிந்த நிலையில் நிற்கின்றது. கி. பி. 19-ஆம் நூற்றுண்டுத் தொடக்கத்தில் அக்கோபுரத்துள் வைக்கப் பட்டிருந்த சுவடிகள் முதலியன தீப்பற்றிய காரணத்தால் கோபுரத்திற்கு சிதைவு ஏற்பட் டது. கோபுரத்திற்கு ஒன்பது நிலைகள்

தென்காசி
விசுவநாதர் கோயில்



இருந்ததென்றும், அதில் நாழிகைக் கடிகாரம் இருந்ததென்றும் தெரிகிறது.

கோபுர வாயிலின் உள்ளே நுழைந்ததும் ஒரு மண்டபத்தின் தூண்களில் அழகிய சிற்ப வேலைப்பாடுடைய உருவங்களைக் காணலாம். காளி, ஊர்த்துவதாண்டவர், வேணுகோபாலர், மகாதாண்டவர், இரதி, மன்மதன், அகோர வீரபத்திரர், அக்கினி வீரபத்திரர், துர்க்கை, தமிழணங்கு இருவர் முதலிய உருவங்கள் அத்தூண்களில் இருப்பன.

கோயிலுக்கு வெளிப்பிரகாரமும், சுவாமி, அம்பிகை கோயில்களுக்குத் தனித் தனி உட்பிரகாரங்களும் உள்ளன.

வடக்கு வெளிப்பிரகாரத்தில் சகஸ்ரலிங்கம், பராசக்தி, சோமலிங்கம், சொக்கநாதர், மீனாட்சியம்மை, பைரவர் இவர்களுடைய தனிச் சந்நிதிகள் இருக்கின்றன.

இறைவன் சந்நிதிக்குப் போகுமுன் சூரியன், அதிகாரநந்திகேசுவரர் உருவங்களைக் காணலாம். சந்நிதிக்கு நேரே நந்தி ஒரு மண்டபத்தில் இருக்கிறது. அதுமிகவும் அழகான வேலைப்பாடமைந்தது. சிவபெருமான் கோயில் திருச்சுற்றினுள் நால்வர், நாயன்மார், நவசக்திகள், கன்னிவிநாயகர், ஆறுமுகநயினர், தென்முகக்கடவுள், சண்டேசுவரர் முதலியவர்கள் எழுந்தருளியுள்ளனர். இத் தலத்து இறைவனின் சிறப்புப் பெயர் காசி விசுவநாதர் என்பது. வேறு பெயர்களும் உண்டென்பதைக் கீழ்க்காணும் பாடல் தெரிவிக்கிறது :—

விசுவனே, விசுவநாதன்,
விசுவேசன், உலகநாதன்,
பசுபதி, சிவன், மயேசன்,
பராபரன், முக்கட்பெம்மான்,
சிசுவரம் தருவோன், நம்பன்,
சிவைமணவாளன், ஏற்றோன்
அசுதையார் நீலகண்டன், அநாதி
தென் காசிநாதன்.

அம்பாள் சந்நிதி சுவாமி சந்நிதிக்கு வலப்புறம் (மதுரையில் இருப்பதுபோல்) அமைந்திருக்கிறது. இருசந்நிதிகளுக்கு நடுவே பஞ்சமூர்த்திகள் (உற்சவர்) எழுந்தருளியுள்ளனர். ஒருகாலத்தில் இங்கு திருமால் கோயில் இருந்ததாகவும், அங்கிருந்த உருவத்தை அப்புறப்படுத்தி சிற்றாற்றங்கரையில் கோயில் கட்டி வைக்கப்பெற்றதாகவும் கூறுவர். அதுவே பொருந்திநின்ற பெருமாள் கோயில் என்றழைக்கப்படுகிறது. பஞ்சமூர்த்தி மண்டபத்திற் கெதிரிலும் அழகிய உருவங்களுடைய சிற்பத்தூண்கள் உள்ள மண்டபம் இருக்கிறது.

இத்தலத்து இறைவியின் திருநாமம் உலகம்மை என்பது. தலபுராணத்தில்,

விசுவையே, விசுவநாதை,
விசுவேசை, விசாலாட்சித்தாய்,
பசுபதிதுணை, மயேசை, பராபரி,
உமை, முக்கண்ணி,
சிசுவரன்பணி, லோகாம்பை,
சிவை, குழல்வாய் மொழித்தாய்,
அசுதைதீர் வசந்தவல்லி,
அநாதை தென் காசித்தாயே

என்ற பெயர்களும் குறிக்கப்படுகின்றன.

இத்தல விருட்சம் செண்பகம் என்பது 'செண்பக மலர்க்கீழ் மேவும் சிவக்குறி' என்ற கூற்றால் அறிகிறோம். செண்பக மரம் வடக்கு வெளிச்சுற்றில் இருக்கிறது. பலாமரத்தையும் தலவிருட்சமாகக் கொள்கின்றனர். பெரிய பலா ஒன்று கோயிலுக்குள் இருக்கிறது. அதன் காய் சிவலிங்க உருவாக இருக்கிறதென்பதை 'பலாலிங்கம் காய்க்கும் ஊர்' என்று தலபுராணம் கூறுகிறது.

இக் கோயிலைச் சேர்ந்த தீர்த்தங்கள் ஏழு என்பதைத் தலபுராணத்தில்

"நன்னகரம் தென்காசி ஆலயத்துள்
நாற்கிணறு ஆனந்தப் பொய்கை
அன்ன ஈசான தீர்த்தம் நல்ஆற்றில்"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. உலகநாயகியம்மை சந்நிதி முன்பு ஆனந்த தீர்த்தமும், பின்புறம் சகத்திரேச தீர்த்தமும், வடக்குப் பிரகாரத்தில் காசித் தீர்த்தமும், அதன் கிழக்கே வயிரவ தீர்த்தமும், மடைப்பள்ளியில் அன்னபூரணி தீர்த்தமும் ஆக ஐந்து தீர்த்தங்கள் கோயிலுள்ளே இருக்கின்றன. கோயிலுக்கு வடகிழக்கேயுள்ள தெப்பகுளம் ஈசான தீர்த்தம். இவ்வூர் வழியாக ஓடும் சிற்றாறு (சித்திராநதி) ஏழாவது தீர்த்தம். அதன் கரையில் தீர்த்தவாரி மண்டபமும் இருக்கிறது.

ஆவணி மூலத்தில் தெப்பத் திருவிழாவும், ஐப்பசியில் 10 நாட்கள் அம்பாள் திருக்

கல்யாண உற்சவமும், மாசிமகத்தை யொட்டி சுவாமிக்கு 10 நாட்கள் திருவிழாவும் தேரோட்டமும், தை அமாவாசையன்று இலட்சதீபமும் நடைபெறுகின்றன.

இத்தலத்தின் புராணத்தைத் தென்காசியின் ஒரு பகுதியாகிய புலியூரில் இருந்த அழகிய சிற்றம்பல தேசிகர் என்பார் இயற்றியிருக்கின்றார். அவருக்கு குமாரகவிராய தேசிகர் என்றும் பெயர் உண்டு. அப்புராணத்தில் 30 படலங்களும், 1831 பாடல்களும் உள்ளன. நாரதன், கவுசிகன், இந்திரன், அகத்தியர், குலசேகரபாண்டியன், குழல்வாய்மொழியம்மை, மிருகண்டு, நந்தி, சிரும்பாசுரன், வாலி, கண்ணுவர், செண்பகபாண்டியன் முதலியோர் இத்தலத்திறைவனை வழிபட்டு முத்திப்பேறு பெற்றனர் என்று அந்த தலபுராணம் விரிவாகக் கூறுகின்றது.

தென்காசிக் கோயில் கி. பி. 1445-ல் கட்டி முடிந்தது. அதன் கோபுரம் கி. பி. 1456-ல் பராக்கிரம பாண்டியனால் தொடங்கப்பெற்று ஆறாண்டுகள் வரைமுற்றுப்பெறாதிருந்தது. அவனுடைய தம்பி குலசேகரதேவனால் கி. பி. 1462-ல் முற்றுப் பெற்றது. கி. பி. 1572-ல் திருமண மண்டபம் கட்டப்பட்டது. கி. பி. 1524-ல் திருவாங்கூர்—வீரமார்த்தாண்ட ராமவர்மனால் கோயில் பழுதுபார்க்கப்பட்டு பிரம கலாபிஷேகமும் செய்யப்பட்டது.

இக் கோயிலில் பல கிரந்த, தமிழ்க் கல்வெட்டுக்கள் உள்ளன அவை கி. பி. 15, 16, 17-ஆம் நூற்றாண்டிலிருந்த பாண்டிய மன்னர் காலத்தவை. அவைகளில் சில எளிய இனிய தமிழ்ச் செய்யுள் நடையிலும் அமைந்திருக்கின்றன. இவ்வூரிலுள்ள குலசேகரமுடையார் கோயில், சிதம்பரேசர் கோயில், பெருமாள் கோயில் முதலியவைகளிலும் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. பராக்கிரமபாண்டியன் விசுவநாதர் கோயிலை அடி முதல் முடி வரை (உபனுதிஸ்தூபி வரை) கட்டியதையும், அவனால் கட்டப்பெற்று முடிக்கப்பெறாத ஒன்பது நிலைக்கோபுரத்தை அவன் தம்பி குலசேகர பாண்டியன் கட்டி முடித்ததையும், திருவோலக்க மண்டபம் கட்டியதையும், இக்கோயிலுக்குள் கட்டப்பெற்றிருந்த திருமால்கோயில் பூசை முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்ததையும், நிலம், வீடு, மனை முதலியவைகள் அளித்ததையும், கோயில் பணியாளர்களுக்கு நிலதானம் வழங்கியதையும், விசுவநாதநல்லூரில் அரசியலார் வசூலித்த நிலவரியைக் கோயிலுக்குத் திருப்பிக்கொடுத்து அந்த ஊரைக் கோயிலுக்கு சர்வமானியமாகச் செய்ததையும், ஒருமடத்திற்கு வீடு கொடுத்ததையும், விதரண விநோதன் பெருந்தெருவில் வதிந்த தத்துவப்பிரகாசர் என்ற சமயகுரு ஒருவருக்கு நிலம் அளித்ததையும், அம்பிகை உலகமுழுதுடைநாச்சியார் கோயிலுக்கு நிலதானம் செய்ததையும், கோயிலுக்கு விதரண விநோத வளநாட்டிலுள்ள விசுவநாதப் பேரேரியை அளித்ததையும், தென்காசி, பராக்கிரமபாண்டியநல்லூர், வீரபாண்டியநல்லூர் முதலிய ஊர்களை விசுவநாதர் கோயிலுக்கு தேவதானமாகக் கொடுத்ததையும், பராக்கிரமபாண்டியன் பிறந்த மிருகசீரிஷ நட்சத்திரத்தில் கோயிலில் பராக்கிரமபாண்டியன் சந்தி என்ற வழிபாடு நடத்துவதற்காக தென்கரைக் காரிகுறிச்சி, பிள்ளையார்குளம் என்ற ஊர்களை அளித்ததையும், பசுக்கள் தானம் செய்ததையும், வேதம் ஓத, பஞ்சாங்கம் வாசிக்க அந்தணர்களுக்கு வீடு, நிலங்கள் அளித்ததையும், வரகுண ஸ்ரீவல்லப குலசேகரபாண்டியன் யாகம் செய்து, விக்கினேசுவரப் பிரதிஷ்டை செய்து தன்னை தீட்சிதர் என்று அழைத்துக்கொண்டதையும் இன்னும் பலவாறான செய்திகளை இக்கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. செய்யுட்களாகவே அமைந்த பராக்கிரமபாண்டியனின் கல்வெட்டுக்கள் படித்து இன்புறத்தக்கன. எடுத்துக் காட்டாக கீழே இரண்டு கொடுக்கப்படுகிறது :—

ஆரா யினுமிந்தத் தென்காசி
மேவும்பொன் ஆலயத்து
வாரா தோர்குற்றம் வந்தாலப்
போதங்கு வந்ததனை
நேராக வேயொழித் துப்புரப்
பார்களை நீதியுடன்
பாரா ரறியப் பணிந்தேன்
பராக்கிரம பாண்டியனே.

சேலே றியவயல் தென்காசி
ஆலயம் தெய்வச்செய
லாலே சமைந்ததிங் கென்செய
லல்ல வதனையின்ன
மேலே விரிவுசெய் தேபுரப்
பாரடி வீழ்ந்தவர்தம்
பாலேவல் செய்து பணிவன்
பராக்கிரம பாண்டியனே.

இப்பாடற் கல்வெட்டுக்களால் அரசனுடைய பக்தியும், பணிவும், தான் கட்டிய கோயிலைப் பராமரிப்போருக்கு முன்கூட்டியே வணக்கம் செலுத்தியிருக்கும் பண்பும், கோயில் நன்று கப் பாதுகாக்கப்பட வேண்டுமேயென்று அவனுக்கு இருந்த கவலையும், தன்செயலாலன்றி இறைவன் அருளாலே எல்லாம் நடந்ததென்று கூறும் தன்மையும் பாராட்டி மகிழற்பாலன.

தென்காசியில் வரகுணநாதர் கோயில், குலசேகரமுடையார் கோயில், சிதம்பரேசர் கோயில், பொருந்திநின்ற பெருமாள்கோயில், விண்ணவரம் பெருமாள் கோயில், தென்பழனியாண்டவர் கோயில், நவநீதகிருட்டினன் கோயில், அரசூர்நங்கை கோயில், கீழமாரி நஞ்சை ஐயனார்கோயில் முதலிய கோயில்களும் உள்ளன. மேலும் இவ்வூரில் எட்டுப் பிள்ளையார் கோயில்களும் இருக்கின்றன. எட்டு சைவ ஆதீன மடங்களும் அமைக்கப் பெற்றிருக்கின்றன. சிவாகமங்கள் ஒத, சிவ தீக்கைசெய்ய, கல்விடயில, சிவபுராணம் சொல்ல, தத்துவ விசாரணைசெய்ய, சைவ சித்தாந்தம் ஓதி ஞானோபதேசம் செய்ய, யோகம் பழக முதலியவற்றிற்காக ஏற்பட்டவை. மற்றும் இவ்வூரிலுள்ள எல்லா முருகன் மூர்த்தங்களும் ஆறுமுகங்களுடனேயே காட்சியளிக்கின்றன. வடகாசியில் இறப்போருக்கு முத்தி என்று கூறப்படும். தென்காசியிலோ, "இறப்பார், பிறப்பார், இருப்பார், காண்பார் எவர்க்குமே முத்தி" என்று பெருமையாகக் கூறப்படுகிறது.

ஜகத்குரு ஸ்ரீசிருங்கேரி சங்கராச்சாரிய சுவாமிகள் அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்களுக்கு கோயில்களில் திருமணங்கள் நடத்துவதைப்பற்றி எழுதிய கடிதம்

கோயில்களில் கல்யாணங்கள் நடத்துவதற்காக—இதிலும் ஏழைகள் சிக்கன முறையிலும் பணக்கஷ்டமில்லாமலும் நடத்துவதற்காக வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க யோசனைகள் இருப்பதாக நீங்கள் நம்மைப் பார்க்கும்போது பேசிக்கொண்டிருந்தது நினைவிருக்கலாம்.

அவைகள் மிக்க நல்ல யோசனைகள். நீங்கள் குறிப்பிட்டதுபோல், இந்த ஏற்பாடு அதிகச் செலவில் கல்யாணம் நடத்த முடியாத மக்களின் பணக்கஷ்டத்தைக் குறைப்பதுடன், அந்த கல்யாணங்கள் பெரிய கோயில்களில் நடைபெறுவதால் புனிதத்தன்மையும் இறைவன் அருளும் கிடைப்பதற்கு வாய்ப்பாகவும் இருக்கிறது. இவ்வகையாகக் கோயில்களில் கல்யாணம் நடைபெறுவது மக்களிடம் அதிகமாகப் பரவுவதுடன் ஆஸ்திகமும் வளரும். இந்த ஏற்பாட்டு முறைக்கு நம்முடைய பூரண ஆசிகளைத் தெரிவிக்கிறோம்.

இலஞ்சி

மாலையில்வந்து மாலை வழங்கு
  மாலையனங்கள் மலராலும்
வாடையெழுந்து வாடை செறிந்து
  வாடை யெறிந்த அனலாலும்
கோலமழிந்து சாலமெலிந்து
  கோமளவஞ்சி தளராமுன்
கூடியகொங்கை நீடியவன்பு
  கூறவுமின்று வரவேணும்
காலனடுங்க வேலதுகொண்டு
  கானில் நடந்த முருகோனே
கானமடந்தை நாணமொழிந்து
  காதலிரங்கு குமரேசா
சோலைவளைந்து சாலிவிளைந்து
  சூழுமிலஞ்சி மகிழ்வோனே
சூரியனஞ்ச வாரியில்வந்த
  சூரனைவென்ற பெருமாளே.

—அருணகிரிநாதர்.

செங்கைவே லுழவாபோற்றி
  தேவர்தந் தேவேபோற்றி
கங்கையாள் புதல்வாபோற்றி
  கார்த்திகைச் சிறுவாபோற்றி
பங்கயத் தடம்சூழ்செம்பொற்
  பணிமதி லிலஞ்சிமூதூர்க்
கொங்கலர் கடப்பமாலைக்
  குமாரதேசிகனே போற்றி.

திருக்குற்றாலத்தில் அருவி நீராடி உடல் நலம்பெற வருகிற மக்கள் அவசியம் பார்க்கவேண்டியது திருஇலஞ்சி குமாரர் கோயில். இக்கோயில் குற்றாலத்திற்கு வடக்கே ஒன்றரைக்கல் தொலைவிலிருக்கிறது. தென்காசி இருப்புப்பாதை நிலையத்திலிருந்து சுமார் இரண்டரைக்கல் தூரமிருக்கும். இலஞ்சி என்ற ஊருக்கும் தெற்கே தனியாக அமைதியான இயற்கை எழில் நலம் சூழ்ந்த இடத்தில் அமைந்திருக்கிறது. "சோலை வளைந்து சாலி விளைந்து சூழும் இலஞ்சி" என்ற அருணகிரிநாதர் வாக்கிற்கேற்ப செந்நெல்வயல்களும், மா, பலா, தென்னைமரச் சோலைகளும் சுற்றிலும் இருப்பதை நேரில் கண்டோரே அறிவார்கள். மேலும், குற்றாலத்தில் மலைமீது இருந்து விழுந்து ஓடும் சிற்றாறும், ஐந்தலைபருவியாறும் ஒன்றுகூடி இக்கோயிலை வலம் வந்து பாய்வது இக்கோயிலின் வனப்பைப் பெருக்கும் வகையிலிருக்கிறது.

கோயிலைச் சுற்றி நான்கு தேர் ஓடும் தெருக்கள் இருக்கின்றன. ஆனால் வீடுகள் இல்லை. கோயில் கிழக்கு பார்த்தது. இரண்டு பிரகாரங்கள் உள்ளன. கிழக்கிலும், மேற்கிலும் வாயில்கள் உள்ளன. கோயிலுக்கு வெளியில் கீழ்புறம் தேர்நிலைகளும், நாலுகால் மண்டபமும், இடும்பன் கோவிலும் உள்ளன. வெளி வாயிலில் கோபுரம் இல்லை. உள்வாயிலில் மூன்று நிலைக்கோபுரம் இருக்கிறது. வெளிப்பிரகாரத்தை வலம்வரும்போது தென்கிழக்கு மூலையில் சவுக்கையும், தலவிருட்சமான மகிழமரமும் இருக்கின்றன. தென்மேற்கு மூலையில் செண்பக விநாயகர் கோயில்கொண்டெழுந்தருளி யிருக்கின்றார். வடக்குப் பிரகாரத்தில் இரண்டு கல்யாண சமயற்கூடங்களும், பசுமடமும் இருக்கின்றன.

இலஞ்சி—குமாரர் கோயில்

உட்பிரகாரத்திற்குள்ளே நுழையும்போது நேரே காட்சியளிப்பவர் இருவாலுகநாதரான சிவலிங்கமூர்த்தி. இடதுபுறம் சென்றால் மயிலையும், சூரியபகவானையும் காண்கிறோம். தெற்கு உள்பிரகாரத்தில் 63 நாயன்மார், நவசக்திகளையும், மேற்குப் பிரகாரத்தில் கன்னி விநாயகர், வேணுகோபாலன், காசிவிசுவநாதர்—விசாலாட்சி, குற்றாலநாதர்—குழல்வாய்மொழியம்மை, அகத்தியர், ஐயனார், சத்தமாதர், நாககன்னிகை, ஆறுமுகநயினார் இம்மூர்த்திகளும், வடக்குப் பிரகாரத்தில் சனீசுவரர், சண்டேசுவரர், பைரவர், தீர்த்தக் கிணறு முதலியனவும் உள்ளன.

இங்கு கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் சிவபெருமான் திருநாமம் இருவாலுக நாயகர் என்பது. இவருக்கு வலப்பக்கம் இலஞ்சிக்குமாரப்பெருமான் வள்ளி தெய்வயானையுடன் எழுந்தருளியுள்ளார். தமிழ் முனிவரான அகத்தியர் கைலாயத்தினின்றும் தென்னாடு வரும்போது குற்றாலத்தை யடைந்தார். அங்கு திருமால் கோயில் இருந்தது. வைணவர்கள் அவரை வழிபடவிடாமல் தடுத்தார்கள். மனம்நொந்து இலஞ்சி சென்று தங்கி வெண்மணலால் இலிங்கம் சமைத்து வழிப்பட்டார். வெண்மணலுக்கு வாலுகம் என்ற பெயருண்டு. இரண்டுமுறை வெண் மணலால் இலிங்கம் அமைத்து வழிபட்டதால் இறைவன் திருப்பெயர் இருவாலுக நாயகர் என்றாயிற்று. தேவியின் திருநாமம் இருவாலுக ஈசர்க்கினியாள் என்று வழங்கப் பெறுகிறது.

குறுமுனிவர், இலஞ்சியிலுள்ள அறுமுகனிடம் தாம் குற்றாலத்தில் இறைவனை வணங்க முடியாமற் தடைப்பட்டதைச் சொல்லிக் குறையிரந்தார். குமரப்பெருமான் அகத்தியனை வைணவக்கோலம் பூண்டு சென்று அரியை அரனாக்கி வழிபட்டுவர அருள்புரிந்தார். தமிழ் முனிவர் முருகனின் திருக்கருணையை வியந்து,

எந்தாய் போற்றி பரங்கிரியி
லிறைவா போற்றி செந்தூர்வாழ்
செந்தா போற்றி பழனிமலைத்
தேவா போற்றி தேவேசன்
மைந்தா போற்றி யோகத்தில்
வாழ்வே போற்றி சோலைமலைக்
கந்தா போற்றி திருவிலஞ்சிக்
கடவுள் போற்றி

என வாழ்த்தி வணங்கி வழிபட்டு வைணவ வேடத்துடன் குற்றாலம் சென்று திருமாலைச் சிவபெருமானாக்கி பூசனை புரிந்துசென்றார்.

இலஞ்சிக் கோயிலில் ஆறுகால பூசை நடைபெறுகின்றது. சித்திரையில் பிரமோற்சவமும், ஐப்பசியில் கந்தசஷ்டி விழாவும் சிறப்பாக நடைபெறுகின்றன. சித்திரைவிசு, ஐப்பசிவிசு இரண்டிற்கும் திருஇலஞ்சிக்குமாரர் திருக்குற்றாலத்திற்கெழுந்தருளி 10, 10 நாட்கள் தங்கியிருந்து திரும்புவர். குற்றாலநாதரிடம் பைம்பொன்னும் பட்டாடையும் பெற்றுப் பிரியா விடைபெற்றுத் திரும்பும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வரும்வழியில் காசாமேஜர்புரத்திலுள்ள சம்பகத்தம்மாள் இளைப்பாறுதல் மண்டபத்தில் தங்கிப் பின் இலஞ்சிக்கு முருகப்பெருமான் எழுந்தருளுவார்.

கோயிலுக்குப் பின்புறம் ஓடும் சிற்றாற்றிற்குப் படித்துறையமைக்கப்பட்டிருக்கிறது. ஆறும் திருநாள் மண்டபமும், தீர்த்தவாரி மண்டபமும் அதன் கரையில் அமைந்திருக்கின்றன. கோயிலுள்ளிருக்கும் சமயற்கூடத்தில் கிணறு, நீர்க்குழாய், சமயற் பாத்திரங்கள் முதலிய வசதிகள் உள்ளன. இங்கே ஆண்டு ஒன்றுக்கு 200 முதல் 300 கல்யாணங்கள் இறைவன் சந்நிதியில் நடைபெறுகின்றன. குறைந்த கட்டணத்திற்குக் கோயிலார் எல்லா வசதிகளும் செய்துகொடுக்கின்றனர். இலஞ்சி ஊர்க்குள்ளே குலசேகரநாதர் சிவன் கோயிலும், சித்தாயிஅம்மன் கோயிலும் இருக்கின்றன.

இலஞ்சி என்ற சொல்லுக்கு ஏரி, குளம், மடு, பொய்கை, மதில், மகிழமரம் என்ற பொருள்கள் உண்டு. பண்டைத்தமிழ் இலக்கியங்களில் இச்சொல் கூறப்பட்டிருந்தும் இப்போது இவ்வூரின் பெயராகவே ஆட்சியிலிருக்கிறது. இளங்கோவடிகள்,

கூனும் குறளும் ஊமும் செவிடும்
அழுகு மெய்யாளரும் முழுகின ராடிப்
பழுதில் காட்சி நன்னிறம் பெற்று
வலஞ் செயாக் கழியும் இலஞ்சிமன்றமும்

என்று சிலப்பதிகாரத்தில் கூறுகின்றார். மதுரைக் கூலவாணிகன் சாத்தனார், "மாசறத் தெளிந்த மணிநீர் இலஞ்சி", "வண்டுண மலர்ந்த குண்டுநீர் இலஞ்சி" என்று

மணிமேகலை என்னும் காப்பியத்தில் சொல்கிறார். "ஒளிறு இலஞ்சி" என்று மதுரைக் காஞ்சியிலும் "சுடர்ப்பூ இலஞ்சி" என மலைபடுகடாத்திலும், "இளம்பரிதி பலமலர்ந்தாற் போல் உள இலஞ்சி பல" என்று பெரிய புராணத்திலும் குறிக்கப்பட்டிருக்கிறது. **அருணகிரிநாதர்**, "இலஞ்சியில் வந்த இலஞ்சியமென்று இலஞ்சியமர்ந்த பெருமாளே" என்று அழகுபட உரைக்கிறார். மேற்கூறியவற்றிலிருந்து இலஞ்சி என்னும் சொல் பெரும்பூலும் நீர்நிலையென்ற பொருளிலேயே ஆளப்பட்டிருக்கிறது என்று அறியலாம். ஆனால் நீர்நிலைகள் சூழ்ந்த இந்த முருகன்திருத்தலமே இலஞ்சி யென்ற பெயரால் வழங்கி வருகிறது.

இத்தலத்தைப்பற்றி **அருணகிரிநாதர்** திருப்புகழில் நாலுபாடல்கள் அருளியுள்ளார். திருப்பரங்குன்றத் திருப்புகழ் ஒன்றில் இலஞ்சியைக் குறிப்பிட்டிருக்கிறார். "இலங்குதர தமிழ் விளங்கவரு திருஇலஞ்சி மருவிய பெருமாளே" என்னும் பகுதி நயமானது. செங்கோட்டை—**கவிராஜபண்டாரத்தையா** என்ற பெரும் புலவர் "திருவிலஞ்சிக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்" இயற்றியிருக்கிறார். "கும்பமுனிதஞ்ச மென நம்பு தென்இலஞ்சிவரு குமரநாயகன் வருகவே" என்று அகத்தியர் வழிபட்டதைக் குறித்திருக்கிறார். குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர் திரிகூடராசப்பக்கவிராயர் மகனார் **பண்டாரக் கவிராயர்** என்பார், "திருஇலஞ்சி முருகன் உலா" என்ற நூலை இயற்றியிருக்கிறார். இலஞ்சி புதுவீடு G S. சுப்பிரமணியபிள்ளை என்பார் "திருஇலஞ்சிச் செவ்வேள் கலிப்பா மாலை" என்ற நூலும், "வண்ணம்", "சிந்து", "தெம்மாங்கு" முதலிய சந்தப்பாக்களும் இலஞ்சிக் குமரன்பேரில் பாடியிருக்கின்றனர். திருக்குற்றால புராணம், குறவஞ்சி, திருச்செந்தூர்ப்புராணம், முருகன் க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களிலும் இத்தலத்தைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

இக்கோயில் மிகவும் தொன்மையானது. கி. பி. 1409-ல் மாறவர்மன் குலசேகரபாண்டியனும், கி. பி. 1485-ல் சொக்கம்படி குறுநில மன்னரும் இக்கோயில் திருப்பணிகள் செய்திருக்கின்றனர். இருவாளுக நாயகர் கர்ப்பக்கிரகச்சுவர்க் கல்வெட்டொன்றில் திரிபுவனச் சக்கரவர்த்தி மாறவர்மன் குலசேகரதேவன் கோயிலை அடிப்படை முதல் உச்சிவரைப் பழுதுபார்த்தான் என்று காணப்படுகிறது. இலஞ்சி தென்வாரிநாட்டுச் சுந்தரபாண்டிய நல்லூர் என்று குறிக்கப்படுகிறது. இறைவன், **திருப்பாகீசுர முடையநாயனர், இருவர்க்கு ஈசுவர முடையநாயனர்** என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றார். பாண்டிய மன்னன் ஸ்ரீவல்லப தேவன் கல்வெட்டில் கோயில் பூசைக்கு வேண்டிய ஏற்பாடு செய்ததையும், குலசேகர பாண்டியனின் மற்றொரு கல்வெட்டில் அர்ச்சகர்களை நியமித்ததையும் தெரிவிக்கின்றன.

அக்கரங்க ளாறு
    மகமதில்வைத் தேசெபித்துத்
துக்கமெலாந் தீர்த்துன்
    துணையடியைப் போற்றியுய்யத்
தக்கன் மகளீன்ற
    சண்முகா நீயருள்செய்
செக்கர்நிற மேனியாய்
    தென்னிலஞ்சிச் செவ்வேளே

—செவ்வேள்மாலை.

பெரும்புலியூர்: வியாக்ரபுரீஸ்வரர் கோயிலில் 15-9-60-ல் திருப்பணி செய்யப்பெற்று கும்பாபிஷேகமும் ஆகமவிதி முறைப்படி நடைபெற்றது. அரசியலார் ரூ, 4000-மும், பொதுமக்களிடமிருந்து ரூ. 5000-மும் பெற்று, சுமார் 9000 செலவில் இத்திருப்பணி நடைபெற்றது. அதுபோது 14-9-60-ல் திரு, கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்., அவர்களால் 'சிவப்ரேமை' எனும் பொருள்பற்றியும், 15-9-60-ல் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களால் 'மீனாட்சிகல்யாணம்' என்பதுபற்றியும் சொற்பொழிவுகள் நடைபெற்றன. அறநிலைய ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர், ஆகியவர்களும் வந்திருந்தனர். கோயிலின் நிதிநிலைமையை சீராக்க திருப்பணிக் குழுவின் தலைவரும், மேலப்புனல்வாயல் பெருநிலக்கிழாருமான திரு. டி. பிச்சையா மேனாட்டரையர் ரூ. 6000 மதிப்புள்ள சொத்துக்களை கோயில் பெயருக்கு நண்பகல் பூசனையின் நிமித்தம் எழுதி, ஆணையரிடம் கொடுக்கப்பட்டது. அன்னாருக்கு கோயிலின் சார்பில் ஆணையர் அவர்களால் பொன்னாடை போர்த்தப் பெற்றது.

மூர்த்திநாயனார்

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்குமடியேன்
—சுந்தரர்.

அவந்திரி குண்டமணாவதின்
மாள்வனென் றன்றாலவாய்ச்
சிவன்றிரு மேனிக்குச் செஞ்சந்
தனமாச் செழுமுழங்கை
உவந்தொளிர் பாறையிற் றேய்த்துல
காண்டவொண் மூர்த்திதன்னூர்
நிவந்தபொன் மாட மதுரா
புரியென்னு நீள்பதியே
—நம்பியாண்டார் நம்பி.

மாண்புடை மக்களால் பாராட்டப்பெற்ற பண்டைப் புகழுடையது பாண்டி நன்னாடு. தாமிரவருணியாறு அந்நாட்டின் வழியே பாய்ந்து வளம்படுத்துவது. பொதியமலை அதற்குத் தென்றலைக் கொடுத்துக் குளிர்ச்சி செய்யும். தெய்வத்தமிழ்மணம் கமழும். அந்த நாட்டின் தலைநகரம் மதுரை. 'யாழின் மொழியிற் குழலின்னிசையுஞ் சுரும்பும் வாழும் மதுராபுரி' என்பர். அத்திருநகரில் முத்தமிழ்ச் சங்கங்கள் நிலவின. சிவபெருமான் சங்கத்தில் இருந்தார் என்றால் அப்பதியின் பெருமை சொல்லுந்தரத்ததோ !

அப்பெருநகரில் வணிகர்குலப் பெருங்குடியினரான மூர்த்தியார் என்பவர் இருந்தார். இறைவன் திருவடிகளையே பற்றாகக்கொண்டவர். திருவாலவாய்ச் சொக்கநாதப் பெருமான் திருமேனிப் பூச்சுக்கு சந்தனக்காப்பு அரைத்துக் கொடுக்கும் திருப்பணியை மேற்கொண்டொழுகி வருவாராயினர்.

அக்காலத்தில் வடுகக் கருநாட மன்னன் ஒருவன் தென்பாண்டி நாட்டின்மேல் படையெடுத்துவந்து பாண்டிய மன்னனைவென்று நாட்டைப் பிடித்து மதுரையிலிருந்துகொண்டு அரசாட்சி செய்வானாயினான். சமண சமயம் சார்ந்த அம்மன்னன் சிவனடியார்களைத் துன்புறுத்தினான். மூர்த்தியாருக்கும் பல இன்னல்களை யிழைத்தான். எனினும் தம் திருப்பணியை முட்டின்றிச் செய்துவந்தார் அவ்வணிகப் பெருமகனார். அதுகண்டு பொறாத மன்னவன், மூர்த்தியார் சந்தனக் கட்டைகள் பெறும் வழிகளையெல்லாம் அடைத்தான். சிந்தை நொந்த அடியார் அன்று பகலெல்லாம் சந்தனக் கட்டை தேடியும் கிடைக்காமையின் வருந்தி மனந்தளர்ந்து திருக்கோயிலை யடைந்தார். "இறைவன் மெய்ப்பூச்சுக்கு சந்தனம் முட்டுப்படினும் அதனைத்தேய்க்கும் இக்கைக்குமுட்டில்லை." என்று துணிந்து சந்தனக் கல்லில் தமது முழங்கையைத் தேய்த்தனர். தோலும், தசையும், நரம்பும், எலும்பும் தேய்ந்தன. எலும்பு திறந்து மூளை வெளிவந்தது. 'அன்பின் துணிவால் இச்செயல் புரியாதே! உன்னைத் துன்புறுத்தியவன் நாடு முழுமையும் கொண்டு ஆண்டு உலகத்தைக் காப்பாயாக' என்று அன்றிரவு இறைவன் அசரீரி வாக்கு எழுந்தது. மூர்த்தியார் கையின் ஊறு நீங்கி அழகுடன் மிளிர்ந்தது. அவரும் சிவமணங் கம்ழும் திருமேனியுடன் திகழ்ந்தார்.

அன்றிரவே வடுகக் கருநாட மன்னன் இறந்தான். அவனுக்கு ஈமக்கடன்களைச் செய்தனர். அவனுக்கு மக்களில்லை. நாட்டுக்கு அரசன் வேண்டுமேயென்று அமைச்சர் கவலை கொண்டனர். அரசனில்லாத நாடு உயிரில்லா உடல் போன்றது. யானையைக் கண்கட்டி விட்டு அது ஏந்தி வருபவரை அரசராகக் கொள்வதென்ற முடிவுக்கு வந்து அவ்வண்ணமே யானையை விட்டனர்.

துயில்நீத்தெழுந்த மூர்த்தியார் திருவாலவாய்த்திருக்கோயிலின் புறத்தே வந்தணைந்தார். யானையும் அங்குச் சென்று தாழ்ந்து அவரைப் பிடரிமேற்றாங்கியது. அது கண்ட நகர மக்கள் வாழ்த்தினர்; மங்கல வாத்தியங்களை முழக்கினர். மூர்த்தியாரைக் கொண்டுபோய் மண்டபத்தில் இறக்கி முடிசூட்டுச் சடங்குகள் செய்யத் தொடங்கினர். 'திருநீறே அபிடேகமாக, உருத்திராக்க மணியே அணிகலனாக, சடைமுடியே முடியாக இருக்கவேண்டுவன' என்று மூர்த்தி நாயனார் கூறினர். அது நன்றென்று இசைந்தனர் அமைச்சர் முதலியோரும். சடங்குகள் செய்து முடிந்ததும் மூர்த்தியார் அரசராக முடிசூடினர்.

முடிசூட்டு மண்டபத்தினின்று புறப்பட்டு ஆலவாயண்ணல் திருக்கோயில் சென்று வணங்கி, யானைமீதேறி ஊர்வலம் வந்து அரண்மனையை மூர்த்திப்பெருமான் அடைந்து அரசவையில் கொலுவீற்றிருந்தனர். அமைச்சர்களும் அரசர் குறிப்பின் வழியின் ஒழுகினர். திருநீற்றுநெறி வாழவும், சைவம் உயரவும் உலகாண்டனர் மூர்த்தியார். ஐம்புலன்களாகிய உட்பகையையும், வேற்றரசரான புறப்பகையையும் நீக்கி உலகத்தைத் தனிமுடி கவித்து நெடுங்காலம் அரசாண்டு உயிர்களுக்குத் துன்பம் வாராமல் காத்தனர். தமக்குரிய திருத்தொண்டினையும் விடாது செய்து இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

சேக்கிழார் பெருமான் 'மூர்த்திநாயனர்' வரலாற்றை, பெரியபுராணம் மும்மையால் உலகாண்ட சருக்கத்தின் தொடக்கத்தில் 49 பாடல்களில் கூறியருளியிருக்கின்றார். திருநீறு, கண்டிகை, வேணி என்ற மூன்றினும் செங்கோலோச்சியதால் அவர் மும்மையால் உலகாண்ட மூர்த்தி ஆயினர். அவர் அரசு ஏற்ற பின்னும் சந்தனத் திருப்பணியைத் தொடர்ந்து செய்தனர். "எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்குமோனத்தே" யன்றோ!

வழங்குபுகழ் மதுரைநகர் மூர்த்தியாராம் வணிகர்
திருவாலவாய் மன்னர்க்குத்
தழங்குதிர முழங்கைதரத் தேய்த்தவூறுந் தவிர்ந்து
அமணர்வஞ் சனையுந்தவிரமன்னன்
இழந்தவுயி ரினருக ஞாலநல்க எழில்வேணி
முடியாக விலங்குவேட
முழங்குபுக ழணியாக விரைநீருக மும்மையுல
காண்டருளின் முன்னினுரே
—உமாபதிசிவாசாரியர்.

திருவாமத்தூர்: அபிராமேசுவரப்பெருமான் கோயிலில் நடைபெற்றுவந்த இலட்சார்ச்சனை, மண்டலாபிஷேக நிறைவு விழா 9—10—60 அன்று நடைபெற்றது. அன்று மாலை நடைபெற்ற சமயப்பேரவைக்கு சென்னை அறநிலைய ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ். அவர்கள் தலைமை வகித்தார்கள். தேவகோட்டை திரு. மெய்யப்பச்செட்டியார் அவர்கள் சமயப்பேரவையைத் துவக்கிவைத்தார்கள். திரு. ஆறுமுகநாவலர் அவர்கள் சமயச் சொற்பொழிவாற்றினுர்கள்.

◆ ◆ ◆ ◆

சென்னை: தங்கசாலைத் தெருவிலிருக்கும் ஏகாம்பரேசுவரர் ஆலயத்தில் 30—9—60ல் மாலை 7-மணிக்கு கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் பரஞ்சோதி முனிவர் அருளிச்செய்த திருவிளையாடற்புராண விரிவுரையைத்தொடங்கியுள்ளார்கள். அன்று அறநிலைய ஆணையர் திரு. அ. உத்தண்டராமன் ஐ. ஏ. எஸ். அவர்கள் துவக்கி வைத்தார்கள். செட்டியார் தொடர்ச்சியாக வாரமிருமுறை பிரதி திங்கள், வெள்ளிகிழமைகளில் மாலை 6-30 மணிக்கு நடத்திவருகிறுர்கள்.

◆ ◆ ◆ ◆

பெருஞ்சேரி: வாகீசுவரசுவாமி கோயிலில் சோழ ராஜா காட்சி உற்சவம் 20—9—60 முதல் 11—10—60 வரை நடைபெற்றது. 11—10—60ல் சுவாதந்திர நாயகி அம்பாளுக்கு சந்தனலங்காரம், ஆராதனை, சகஸ்ரநாம அர்ச்சனை முதலியவை நடந்தன.

◆ ◆ ◆ ◆

சென்னை: வடபழநி ஆண்டவர் கோயிலில் மகாஸ்கந்தர் சஷ்டி மகோற்சவம் 19—10—60 முதல் 30—10—60 வரை நடைபெற்றது.

◆ ◆ ◆ ◆

திருவெண்காடு: சுவேதாரண்யேசுவரசுவாமி கோயிலில் 21—9—60 முதல் 29—9—60 முடிய நவராத்திரி உற்சவம் நடைபெற்றது. நவராத்திரி விழாவில் அம்பாளுக்குதினசரி சிறந்த அலங்காரங்களும் இலட்சார்ச்சனையும் நடைபெற்றன. ஒவ்வொரு நாளும் வித்வான்களின் சொற்பொழிவுகளும், இன்னிசை அரங்கும், தேவஸ்தான தேவாரப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர், ஓதுவாமூர்த்திகளின் தேவார இன்னிசையும் நடைபெற்றன.

திருக்கயிலாய ஞானவுலா

[வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்]

சேரர் காவலர் விண்ணப்பஞ்செய்த திருக்கயிலாய ஞான உலாவை இந்தப் பாரில் திருப்பிடவூரில் வெளியிட்டருளிய மாசாத்தனர்.

(படம் தருமபுரம் ஆதீனத்திலிருந்து கிடைத்தது.)

உலா என்பது தமிழிலுள்ள தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களில் ஒன்று. அது உலாப்புறம்எனவும் வழங்கும். இது, ஒரு தலைவன் தேர் முதலிய ஊர்திகளுள் ஒன்றில் ஏறி ஊரில் உலாவி வரக் கண்ட ஏழுவகைப் பருவத்துப் பொதுமகளிர் அவன்மேல் காதல் கொண்ட தன்மையை விரித்துக் கலிவெண்பாவால் கூறுவது. "ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப" (தொல். புறம் 30) என்ற சூத்திரவுரையில் இது புரைதீர் காமத்திற்கன்றிப் பக்குநின்ற காமத்திற்குரித்தென்றும், அக்காமம் தேவரிடத்தும் மக்களிடத்தும் விளங்குவதென்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுவர். இதன் இலக்கண விரிவு பன்னிருபாட்டியலிலே பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"முதனிலை பின்னெழு
மிலையுலா வெண்கலி"

"பேதை முதலா
எழுவகை மகளிர்கண்
டோங்கிய வகைநிலைக்
குரியான் ஒருவனைக்
காதல்செய் தலின்வரும்
கலிவெண் பாட்டே"

என்பன முதலிய சூத்திரங்களிற் காணலாம்.

கயிலாய ஞான வுலா என்பது" திருக்கயிலையிற் பாடிய ஞானவுலா என்று பொருள்படும். இதனை "ஆதியுலா" எனவும் கூறுவர்.

இதன் வரலாறு: சுந்தரமூர்த்திசுவாமிகள் சேர நாட்டிலே திருவஞ்சைக் களத்திலிருந்து இறைவன் பணியால் அவன் விடுத்த வெள்ளானை மேலேறி விண்வழியாகத் தம் தோழராகிய சேரமான் பெருமாள் நாயனாரை நினைந்துகொண்டே சென்றார். சேரமான் பெருமாள் தம்தோழரது செய்தியை அறிந்து உடனே ஒரு குதிரையின் காதில், திருவைந்தெழுத்தை உபதேசித்து அதன்மீதேறித் தாமும் விண்வழியே சென்று சுந்தரமூர்த்திகளை அணுகி அவருக்குமுன் சேவித்துச்சென்றார். இருவரும் இறைவன் திருமுன் அடைந்தபொழுது, சேரமான் பெருமாள் இறைவன் அனுமதியின் பேரில் இத்திருவுலாவை விண்ணப்பித்து இறைவனை உவப்பித்தார். கயிலையில் அதனைக்கேட்ட மாசாத்தனார் தரித்துத் திருப்பிடவூரில் வெளியிட்டனர் எனப் பெரிய புராணம் கூறும். சேரர் காவலர் இதனை ஆசு கவியாகப் பாடினர் என்

பது "ஆதிஅந்த உலாஆசு பாடிய சேரர்" என அருணகிரிநாதரும் அருளிச் செய்வ தால் அறியலாம்.

உலாப் பிரபந்தங்களில் இதுவே காலத் தால் முந்தியது என்பது ஆதியுலா என்ற இதன் பெயராலே உணரக் கிடக்கின்றது.

"ஆதியுலா வாலுருகும் ஆரூ ரனைத்தமியேன்
ஓதியுலா வாலுருக்க வுன்னினேன்-சோதிகையும்
மாநாக மும்குழைக்கும் மாமேரு வெற்பையொரு
பூநாக மும்குழைத்தல் போல்"

என அந்தகக்கவி வீரராகவ முதலியார் திருவாரூருலா அவையடக்கத்திற் கூறுவதால் ஆன்றோர்கள் இதன்பால் வைத்திருந்த நன் மதிப்புப் புலனாகும்.

நூலின் பொருட் சுருக்கம்

சிவபெருமான் சீரார் சிவபுரத்தில் ஏரார் திருக்கோயிலினுள் இருக்கையில் அமரர்கள் திருமுன்றில் அடைந்து "எங்களுக்குக் காட்சி யளித்தருள்" என்று வேண்டினார்கள். அவர்கள் வேண்டுகோளுக்கு இரங்கிச் சிவ பெருமான் கேசாதி பாதம்வரை உரிய அணி கலன்கள் அணிந்து, திருமுன்றிலை அடைந் தான். முன்றிலிற் காத்திருந்த வசுக்கள் இருக் குரைத்தனர். எழுமுனிவரும் வாழ்த்தினர். ஆதித்தர் பன்னிருவரும் பல்லாண்டு கூறி னர். இன்னும் ஏனைய தேவர்களும் முனிவர் களும் தத்தம் தகுதிக்கேற்பப் பல் பணி விடைகளைச் செய்ய அவர்களைக் கடைக் கணித்து வெள்விடை மேலேறிப் பூத கணங்கள் காவல்செய்து சூழ்ந்துவர ஏழு திரு வாயில்கள் கழிந்து வெளியேவந்தான். முரு கன் மயிலிவர்ந்து முன் செல்ல, இந்திரன் யானைமேற் பின்வரப் பிரமன் அன்னத்தின் மேல் வலப்பாலும் திருமால் கருடன்மேல் இடப்பாலும் இன்னும் தேவர் தலைவர்களும் ஏனையோர்களும் தத்தமக்குரிய நிலைகளில் தொடர்ந்து வந்தனர். பல்வகை இயங்கள் ஒலித்தன. இறைவன் உலாப் புறப்பட்டான். அனைவரும் பல்வகையாகப் போற்றி யுரைத் தனர்.

சிவபெருமான் திருவீதியில் எழுந்தருளி னான் என்பதைப் பறை முழக்கத்தால் அறிந்த வுடனே பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறாக ஏழுவகைப் பருவத்துப் பொதுமக ளிரும் மகிழ்ந்து திரண்டு மாளிகைகளிலுள்ள சூளிகையும் கூட்டும் முதலிய பலவேறு இடங்களில் ஏறிநின்று இறைவனைக் கண்ணு ரக் கண்டு காமமீக்கொண்டு தத்தம் தகை யிழந்து மயங்கினர்.

பேதைப் பருவத்துப் பெண்ணொருத்தி (5முதல் 7வயது) மாளிகை வாயிலில் இருந்த பந்தலின் கீழே பாவையை வைத்து விளையா டிக் கொண்டிருந்தாள். அந்தப் பாவைக்கு அணிகலன், துகில், முதலியன அணிந்து அழகு நோக்கி அவள் மகிழும்போது "இதன் தந்தையார்?" என்று ஒருத்தி கேட்ப, "ஈசன் எரியாடி" என்று அவளது தாய் சொன்னாள். அவ்வேளையில் சிவபெருமான் அங்கே பவனி வரக் கண்டு தொழுதாள்.

பெதும்பைப் பருவத்துப் பெண்ணொருத்தி (8-11 வயது) தோழியரும் தானுமாய்க் காமனுருவம் எழுதிக்கொண்டிருக்கும்போது சிவபெருமான் அவ்வீதியில் வந்தான். அவ னைக் கண்டு அவள் தன் நாணும் நலனும் நிறையும் வளையும் தோற்றாள்.

மங்கைப் பருவத்துப் பெண்ணொருத்தி (12-13 வயது) பொற்கூட்டிலிருந்த பூவை யைக் கைமேல் வைத்துச் சொற்பயிற்றிக் கொண்டிருக்கையிற் சிவபெருமான் வெள்ளி மலைமேற் ஞாயிறுபோலத் தெருவழியே வந் தான். அவள் அவன் தோளையும் தன் தோளை யும், அவன் தாரையும் தன்தாரையும், நோக் கினாள். அவன் தோளின்மேல் நோக்கம் வைத் தாள். அவள் வேட்கையாம் வெள்ளத்திடை யழுந்திவெய் துயிர்த்தாள்.

மடந்தைப் பருவத்து மாது ஒருத்தி 14-19 வயது) தன் தோழிகள் சூழத் தவி சேறியிருந்து யாழைத்திருத்திச் சிவபெரு மான்மேல் மடலும் வண்ணமும் பாடும் பொழுதில், அவன் ஏறிவந்த விடையின் மணி யோசை கேட்டுத் திரும்பிப் பார்த்தாள், அவனைக் கண்டாள்; வேட்கை கொண்டாள்; தன் நிறத்தை இறைவனது கொன்றை மாலை கவர, அதன்பொன் நிறத்தைத்தான் கவர்ந்து புலம்பலுற்றாள்.

அரிவைப் பருவத்து அணங்கு ஒருத்தி (20-25 வயது) இன்னிசை வீணையைத் திருத்தி இறைவனைப் பாடத் தொடங்கும் போது, அவன் விடைமேல் தோன்றினான்; கண்டாள். இன்னிசையும், இப்பிறப்பும், தமிழும், வீணையும் ஆகிய எல்லாவற்றையும்

கைவிட்டாளாகி நங்கையவளும் நலம் தோற்றாள்.

தெரிவைப் பருவத்துச் சேயிழை ஒருத்தி (25-31 வயது) பொன்னாலாகிய கவறுகளையும் வெள்ளிப் பலகையையுங்கொண்டு ஆயத்தோடு சூது பொரும்போது சிவபெருமான் அங்கே தோன்றுதலும், கண்டு நாண், நலம், ஏண் (வலிமை), குலம் எல்லாம் தோற்றாள்.

பேரிளம் பெண் ஒருத்தி (32-40 வயது) வண்கவரும் சொல்லாள் பல்லாண்டு பாடவும் வெண்கவரி பலர் வீசவும் வீற்றிருந்தவள்,

"கண்ணவனை யல்லது காணா செவியவன
தெண்ணருஞ்சீ ரல்லா திசைகொள்ளா— [அண்ணல்
கழலடி யல்லது கைதொழா அஃதான்
றழலங்கை கொண்டான்மாட் டன்பு."

என்று வெண்பாவொன்றை விரித்துச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, சிவபெருமான் மாடமறுகில் வரக்கண்டாள், உருகி மெய் வெளுத்து மால்கொண்டாள். இவ்வாறு அவன் பவனிவந்த வீதியிலே அவனைக்கண்ட பெண்டிருற்ற ஆரவாரம் மிகப் பெரிதாகும்படி பவனி வந்தான் என்பது நூலின் சுருக்கமான பொருள்.

சுவைத்து இன்புறத் தக்க பகுதிகள்

பக்திச் சுவையும் இலக்கிய நலமும் பொலிந்து விளங்குவது இந்த உலாப் பிரபந்தம். இதனுள் பாட்டுடைத் தலைவனாகிய சிவபெருமானைச் சிறப்பித்துக் கூறும் சொற்றொடர்கள் பல கடவுளிலக்கணம் கவினுறக் காட்டுவன. துறவாதே யாக்கை துறந்தான்; ஆழாதே ஆழ்ந்தான்; ஊழால் உயராதே ஓங்கினான்; ஓதா துணர்ந்தான் என்பன முரண்டொடை பொருந்த அமைந்தன. வினையின் நீங்கியவன், எங்கும் நிறைந்தவன், சுதந்தரமுடையவன், விளங்கிய அறிவினன் என்பவை கடவுளின் தன்மைகளைக் காட்டுகின்றன. "அரியாகிக் காப்பான்; அயனாய்ப் படைப்பான்; அரனாயழிப்பானுந்தானே" என்பவை முத்தேவருமா யிருப்பவன்தானே என்பதை உணர்த்தும். எனினும் முத்தேவரினும் மேலானவன் என்பதைத் "தேவரறியாத தோற்றத்தான்" என்ற தொடர் தெரிவிக்கும்.

"எவ்வுருவில் யாரொருவர் உள்குவா ருள்ளத்துள் அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான்" என்பது, "ஆரொருவ ருள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்" என்ற தமிழ் மறையையும், "யாதொரு தெய்வங்கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே மாதொரு பாகனாரே வருவர்" என்ற சித்தியார் செய்யுளையும் நினைவூட்டுகின்றது.

வானநீர் தாங்கி மறையோம்பிப் பிறையும் சூலமும் உடையவாய் வெள்ளையணிதலால் மாடங்கள் சிவபெருமான்போல் வடிவுடையன என்று கூறியிருப்பது மிக அழகாக இருக்கின்றது. இதுபோலும் உவமைகளும் உருவகமும் பல இடங்களில் இந்நூலில் வந்துள்ளன.

பேதைப் பெண்ணை வருணிக்கும்போது, "நோக்கினும் நோய் நோக்கமாட்டாள்," "வாக்கும் பிறர் மனத்தை வஞ்சியாள்" என்பன போன்ற தொடர்கள் மிகச் சுவை பயப்பன. திருக்குறட்பாக்களைப் பல இடங்களில் வெகு பொருத்தமாக ஆசிரியர் ஆண்டிருக்கின்றார். இடைக்கு மேலும் கீழும் விலையுயர்ந்த ஆடையும் அணியும் அணிவித்து இயல்பாகவே மிடிபட்ட இடையை மேலும் மேலும் துன்புறுத்தினாள் ஒருத்தி என்று கூறவந்தவர் "இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு" என்ற திருக்குறளை எடுத்தாண்டுள்ளார். பேரிளம் பெண்ணைப் புனைந்துரைக்கும்போது "கண்டு கேட்டுண்டுயிர்த்து" என்னும் திருக்குறள் கருத்தையே மேம்படுத்தினாள் இவள் என்கிறார். தெரிவையை வருணிக்கும்போது, "மழலைவாய்ச் சொல்லின் குளிர்ச்சியால் புலரி யொப்பாள்; வெப்பம் விளைத்தலால் உச்சியொப்பாள்; சேவடியும் கையும் செம்மையால் அந்தி ஒப்பாள் என்பன முதலாகக் காலத்தின் வேறுபாடுகளை உவமையாகக் கூறியிருப்பது கவிநலம் நுகர்வார்க்குக் கழிபேருவகை தரும். பேரிளம் பெண் பாடியதாக நூலினிடையே "கண்ணவனையல்லது" என்ற வெண்பாவொன்றை அமைந்திருக்கும் திறம் மிகப் பாராட்டற்பாலது. 'பலருக்குக் காட்சி கொடுத்தபின் ஈண்டு வந்தனையே இறைவா' என்று பிணங்குபவளாய்ப் பேரிளம் பெண் கூறும் கூற்றாக "வண்ணச் சிலம்படி மாதரார் தாமுண்ட கண்ணெச்சில் எம்மையே ஊட்டுவான் அண்ணலே வந்தாய்" என்பது அவளது காதல் மிகுதியையும் பெண்மைத் தன்மையையும் நன்கு காட்டுகின்றது. இன்னும் விரிப்பிற்பெருகும்.



திருப்பைஞ்ஞீலி

தூயவன் தூயவெண் ணீறு மேனிமேல்
பாயவன் பாயபைஞ் ஞீலி கோயிலா
மேயவன் வேய்புரை தோளி பாகமா
ஏயவன் எணைச்செயுந் தன்மை யென்கொலோ

—திருஞானசம்பந்தர்.

மத்த மாமலர் சூடிய மைந்தனுர்
சித்த ராய்த்திரி வார்வினை தீர்ப்பரால்
பத்தர் தாந்தொழு தேத்துபைஞ் ஞீலியெம்
அத்தனை த்தொழ வல்லவர் நல்லரே

—திருநாவுக்கரசர்.

காவிரியாற்றுக்கு வடக்கேயுள்ள சோழ நாட்டுப்பாடல் பெற்ற சிவத்தலங்கள் தொண்ணூற்றுமூன்று. அவைகளில் ஒன்று திருப்பைஞ்ஞீலி என்பது. இப்போது திருப்பைங்கிளி என்று வழங்கப்படுகிறது. பை+ஞீலி =பைஞ்ஞீலி. பசுமையான வாழை என்று பொருள். தலவிருட்சம் வாழைமரம் ஆயினமையின் இப்பதிக்கு 'திருப்பைஞீலி' என்ற பெயர் உண்டாயிற்று. நீலிவனம், கதலிவனம், தராளசலம், விமலாரணியம் என்ற பெயர்களும் இப்பதிக்குண்டு. இது திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருக்கிறது. திருச்சிராப்பள்ளியிலிருந்து 12 கல் தொலைவிலிருக்கிறது. பஸ் போகின்றது. உத்தமர் கோயில் என்ற இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 7 கல் சென்றால் இத்தலத்தையடையலாம். பிட்சாண்டார் கோயில் இருப்புப்பாதை நிலையத்திலிருந்தும் நொச்சியம் என்னும் ஊர் வழியாகவும் இத்தலத்திற்குப் போகலாம்.

சிவபெருமான் எழுந்தருளியுள்ள கோயில் பெரிய பழய திருக்கோயில். மூன்று பிரகாரங்கள் உண்டு. வெளிப்பிரகாரமதில்கள்

மிகவும் உயரமானவை. கோயில் கிழக்குப் பார்த்தது. கிழக்குவாயிலில் அடிப்பாகம் வரையில் கட்டப்பெற்ற பெரிய மொட்டைக் கோபுரம் இருக்கிறது. (படம் காண்க) இந்த கோபுரத்தின் முன் புறத்திலும், உட்புறத்திலும் உயரமானஇடத்தில் இவ்விரண்டு அழகான துவாரபாலகர்கள் உருவங்கள் இருக்கின்றன. மொட்டைக்கோபுரத்தின் மேல்புறம் இருமருங்கிலும் பிட்சாடனர், சந்திரசேகரர் இவர்களின் அழகிய திருவுருவங்கள் உள்ளன. இதைத்தாண்டி உட் சென்றதும் நாலு கால் மண்டபம் ஒன்று இருக்கிறது, அதற்குத் தென்புறம் சோறுடையீசர் சந்நிதி இருக்கிறது. (அம்பிகை இல்லை). அப்பர் சுவாமிகளுக்கு இறைவன் கட்டமுது அளித்த வரலாற்றுச் சம்பந்தப் பட்டதால் 'சோறுடையீசர்' என்ற பெயர் ஏற்பட்டது. தெற்கு வெளிப்பிரகாரத்தில் கொஞ்சம் பள்ளமான இடத்தில் பாறையில் உமாமகேசர் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய திருவடி எமன் தலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

வெளிப்பிரகாரத்தைத் தாண்டி உள்ளே நுழைகின்ற வாயிலின்மேல் மூன்று நிலைக் கோபுரம் இருக்கிறது. இறைவனின் திருநாமங்கள் நீலிவனேசுவரர், நீலகண்டேசுவரர் என்பது. இந்தக் கோயிலில் இரண்டு அம்பாள் சந்நிதிகள் உள்ளன. ஒன்று கிழக்கு பார்த்தது; மற்றொன்று தெற்குபார்த்தது. தேவியின் திருப்பெயர்கள் விசாலாட்சி, பாலசவுந்தரி என்பன.

இத்தலத்தின் விருட்சம் வாழை. பைஞ்ஞீலி என்றால் பசியவாழை என்று பொருள். அதனலேயே அப்பெயர் தலத்திற்கேற்பட்டது. இரண்டாம் பிரகாரத்தில் வாழை மரங்கள் உள்ளன. (படம் காண்க) இந்த மரங்களில் இலை, காய், பழம் இவை கோயிலுக்குப் பயன்படுவதன்றி வேறு எவரும் பயன்படுத்துவதில்லை; பயன்படுத்தக் கூடாதென்றும் ஐதீகம்.

இந்த தலத்தில் பல தீர்த்தங்கள் உள்ளன. வடபிரகாரத்தில் கல்யாணதீர்த்தமும், தென்பிரகாரத்தில் எமதீர்த்தமும், அம்மன் சந்நிதியில் விசாகதீர்த்தமும் இருக்கின்றன. கோயிலுக்கு வெளியே வடக்கே மதிற்புறத்தில் தேவதீர்த்தம் இருக்கிறது. இங்கு தேவகன்னியர் நீராடிஇறைவனை வழிபடுவதாகச் சொல்லப்படுகிறது. கோயில் கோபுரத்திற்கு வெளியில் சிறிது தென்புறத்தில் அக்கினி தீர்த்தம் இருக்கிறது.

இத்தலத்திற்கு திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூவரும் ஒவ்வொரு பதிகம்பாடி யருளியுள்ளனர். சம்பந்தர், 'பண்பினர்பரவு பைஞ்ஞீலி பாடுவார் உண்பினவுலகினில் ஓங்கி வாழ்வரே' என்று கூறுகிறார். அப்பர், 'பைஞ்ஞீலியார் ...சதுரரை அடைய வல்லவர்க்கில்லை அவலமே', 'பழுதொன்றின்றிப் பைஞ்ஞீலிப்பரமனைத் தொழுது செல்பவர் தம் வினைதூளியே', 'திருப்பைஞ்ஞீலி திசை தொழுவார்கள் போய் இருப்பவர் வானவரோடினிதாகவே' என்றெல்லாம் பேசுகிறார். சுந்தரர், 'பைஞ்ஞீலியில் ஆரணியவிடங்கரே' என்று ஒவ்வொரு பாடலிலும் இறைவனை அழைக்கிறார். பல வாத்தியங்களின் பெயர்கள் அமைத்து அவர் பாடிய ஒரு பாடலைக் கீழேகாண்க:—

தக்கை தண்ணுமை தாளம்வீணை தகுணிச்
சங்கிணை சல்லரி
கொக்கரைகுட முழவிளேடிசை கூடிப்பாடி
நின் றுடுவீர்
பக்கமேகுயில் பாடுஞ்சோலைப்பைஞ்ஞீலியே
னென்று நிற்றிரால்
அக்குமாமையும் பூண்டிரோசொலு மாரணீய
விடங்கரே.

திருப்பைஞ்ஞீலி அப்பர் பெருமானின் வரலாற்றுச்சம்பந்தப்பட்ட பதி. சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் தாண்டகவேந்தர் இத்தலத்திற்கு வந்தசெய்தியை எட்டுப் பாடல்களில் கூறியிருக்கிறார். திருவானைக்கா திருஎறும்பியூர், திருச்சிராப்பள்ளி, திருக்கற்குடி, திருப்பராய்த்துறை முதலிய பதிகளை வணங்கி விட்டுத் திருநாவுக்கரசர் திருப்பைஞ்ஞீலிக்கு எழுந்தருளினர். வழி நடந்த இளைப்பால் பசியும் நீர் வேட்கையும் உண்டாயின, 'நீர்வேட்கை யொடும் அழிவாம் பசிவந்து அணைந்திடவும் சித்தம் அலையாதே மொழிவேந்தர்' சென்றார் என்று கூறுகிறார் சேக்கிழாரடிகள். பைஞ்ஞீலிப்பரமன் தன் தொண்டயுன் துயர் நீக்கத் திருவுளம் பற்றினர். வாகீசர் வரும் வழியில் சோலையும் குளமும் அமைத்து ஒரு சிவ வேதியராய் சிவபெருமான் பொதி சோற்றுடன் அப்பர் முன் தோன்றி அவரை அதை உண்ணும்படி சொன்னர். சேக்கிழார் திருவாக்கிலே அதைக்காண்



போம் 'மிகவும் வழி வந்து இளைத்திருந்தீர்! இங்கென்பாலே பொதி சோறுண்டு இதனை உண்டு, தண்ணீரிப் பொங்கு குளத்தில் குடித்து இளைப்புப் போக்கிப் போவீர்'! எனப் புகன்றார். அவ்வாறே ஆளுடைய அரசும் அக் கட்டமுதை உண்டு, நீர் அருந்தி தளர்ச்சி நீங்கினார். அந்தணர், 'எங்கே போகிறீர்' என்று வாக்கின் மன்னரைக் கேட்க, யான் பைஞ்ஞீலிக்குச் செல்கிறேன்' என்றார். 'யானும் அங்கே போகிறேன்' என்று கூறி மறையவரும் உடன் சென்று, திருப்பைஞ்ஞீலி குறுகவும் மறைந்து விட்டார். திருநாவுக்கரசரும் இறைவன் திருக்கருணையை வியந்து, பாடி, விழுந்தெழுந்து கண்ணீர் மல்க உருகினார்.

இறைவன் கட்டமுது கொடுத்த இடமும் தடாகமும் திருப்பைஞ்ஞீலிக்குத்தெற்கே அரைகல் தொலைவிலிருக்கிறது. சித்திரை மாதப் பெருவிழாவில் அஸ்த நட்சத்திரத்தன்று சிவபெருமானும் அப்பர் சுவாமிகளும் அவ்விடத்திற்கெழுந்தருளுகின்றனர். இறைவன் பொதிசோறு கொடுத்த காட்சி நடைபெறுகிறது. பிறகு இருவரும் எழுந்தருளிவர பைஞ்ஞீலி கோயிலையடைந்ததும் இறைவன் உட்புகுந்து மறைகிறார். அவ்விறைவனே கோயிலினுள் நுழைந்ததும் காணப்படும் **சோறுடையீசர்** சந்நிதி.

மதுரை மெய்ப்பாத புராணிகர் திருப்பைஞ்ஞீலிப்புராணம் இயற்றியுள்ளார். பொன்னுசாமி அய்யர், அனந்த நாராயண சாஸ்திரியார் இருவரும் ஒருதல புராணம் எழுதியுள்ளனர். பஞ்சநதம் பிள்ளையவர்கள் எழுதிய தலவரலாறொன்றும் இருக்கிறது.

இந்த கோயிலில் மொட்டைக் கோபுரம் உட்கோபுரம், சுவாமி அம்மன் கர்ப்பக்கிரகச் சுவர்களிலும் பிரகாரச் சுவர்களிலும் வடக்குத்தெருவிலுள்ள ஒருகல் தூணிலும் கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன. பாண்டிய சோழமன்னர் காலத்தவை, இறைவனை நீலிவனேசுவரத் தம்பிரானார், நீலிவனமுடைய

நாயனர் என்று குறிக்கின்றன. இராஜேந்திர சோழன் I கல்வெட்டில் ஊர்ச்சபையாருக்கு 150 பொற்காசுகள் வழங்கி அவர்கள் கோயில் பூசைக்காக 64 கலம் நெல் கொடுக்க ஏற்பாடு செய்ததைக்குறிக்கப்பட்டிருக்கிறது. இரா ஜாதிராஜன் I கல்வெட்டொன்று 160 பொற் காசுகளுக்குக் கோயிலுக்கு நிலம் விற்றதை அறிவிக்கிறது. இராஜராஜன் II, பாண்டிய மன்னன் இவர்கள் நிலதானம் முதலியவை வழங்கியதையும் அக்கல்வெட்டுக்களால் அறி கிறோம். வடமொழியில் சுலோகமாக அமைந்த ஒரு சாசனம் இங்கு அவசியம் குறிப்பிடத்தக்கது, அதன் பொருள் பின் வருமாறு :— "உறவினர்களிடம் தாட்சிண் யம், சுற்றத்தாரிடம் இரக்கம், குருவினிடம் (ஆசை) பற்று, உலக அபவாதத்துக்குப்பயம், (சாரங்கம் என்னும் வில்லை யுடைய) விஷ்ணுவினிடம் பக்தி, தன்னடக்கத்தில் சக்தி, வீடுபேற்றில் பற்று, இத்தகைய நிர்மல குணங்கள் யாரிடம் ஒளி வீசுகின்றனவோ அத்தகைய மகான்களுக்கு வணக்கம்" (தென் இந்திய கோயிற் சாசனங்கள் —II பாகம்-பக்கம் 769).

காருலாமலர்க் கொன்றையந் தாரினன்
வாருலாமுலை மங்கையோர் பங்கினன்
தேரு லாம்பொழில் சூழ்ந்த பைஞ்ஞீலியெம்
ஆர்கி லாவமு தையடைந் துய்ம்மினே

—திருநாவுக்கரசர்.

சங்கரநயினர்கோயில்: சங்கரநாராயணசுவாமி கோயிலில் புதிதாகப் பதித்திருக்கும் தேவாரப் பாடல்கள் பொறித்த வெண்சலவைக் கற்களையும் சங்கரநாராயணசுவாமி கோயில் மேல்ச்சுற்றுச் சுவரில் புதிதாக வர்ணம் பூசிய அரங்கநாதர் அனந்த சயனப்படத்தையும் சென்னை அறநிலைய அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம், பி.ஏ., பி.எல்., அவர்கள் 26-9-60 திங்கட்கிழமை காலை 10 மணிக்குத் திறந்துவைத்தார்கள்

தூத்துக்குடி: மேலூர் பத்ரகாளியம்மன் கோயிலில் 20-9-60 முதல் 30-9-60 வரை நவ்ராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது.

திருப்புங்கூர்: சிவலோகநாதசுவாமி கோயிலில் 9-10-60ல் திருநாளைப்போவார் வார வழிபாட்டு சங்க இரண்டாவது ஆண்டுவிழா சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக தமிழ் துறைத்தலைவர் பேராசிரியர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமையில் நடைபெற்றது. வித்வான் திரு. க. வெள்ளைவாரணர் அவர்கள் மூன்றாவது ஆண்டுவிழாவைத் துவக்கிவைத்து வாரவழிபாட்டின் சிறப்பைப்பற்றி சொற்பொழிவாற்றினார்கள். மாயூரம் தருமையாதீன ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டு சங்கத்தினரும் அன்றைய வழிபாட்டில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். கோயில் நிர்வாகிகள் பக்திபாடல் போட்டியில் கலந்துகொண்ட குழந்தைகளுக்கு வெகுமதிகள் வழங்கினார்கள்.

செட்டிகுளம்: ஏகாம்பரேசுவரசுவாமி கோயிலில் 16-10-59 முதல் பிரதி வெள்ளிக் கிழமைதோறும் நடைபெற்றுவந்த "வாரவழிபாட்டின் முதல் ஆண்டுவிழா 14-10-60ல் திருச்சி திரு. ஆர். பஞ்சநதம்பிள்ளை அவர்கள் தலைமையில் திரு. கே. கே. கிருஷ்ணமூர்த்தி ஓதுவார் அவர்களால் திருமுறை வழிபாட்டு நடத்தப்பட்டது. திருப்பனந்தாள் செந்தமிழ் கல்லூரி வித்வான் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்களால் "நம்மைப்பேணும் அம்மை" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது.

திருமயிலை: கபாலீசுவரர் கோயிலில் 20-10-60ல் கந்தசஷ்டி விழா சமயச் சொற்பொழிவை சென்னை அறநிலைய அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம், பி.ஏ., பி.எல்., அவர்கள் துவக்கிவைத்தார்கள். சமயச் சொற்பொழிவுகள் 20-10-60 முதல் 25-10-60 வரை நாள்தோறும் இரவு 7 மணிமுதல் 9 மணிவரை திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்., அவர்களால் நிகழ்த்தப்பெற்றது.



சுசீந்திரம்

வணங்கும் துறைகள்
பலபலவாக்கி மதிவிகற்பால்
பிணங்கும் சமயம்
பலபலவாக்கி அவையவைதோ
றணங்கும் பலபலவாக்கி
நின்மூர்த்தி பரப்பிவைத்தாய்
இணங்குநின் னோரையில்லாய்
நின்கண் வேட்கை யெழுவிப்பனே

—நம்மாழ்வார்

கடவுள் ஒருவரே. அவரை மக்கள் பல நாமரூப பேதங்களால் வழிபடுகின்றனர். சிறப்பாக நம்முடைய நாட்டில் மும்மூர்த்திகளாகப் போற்றுகின்றனர். பிரமன், விஷ்ணு, சிவன் இம்மூவரும் ஒருங்கே கோயில்கொண்டெழுந்தருளியுள்ள தலங்கள் சிலவேயுள்ளன. அவைகளில் சிறந்ததாகக் கருதப்படுவது சுசீந்திரம் என்பது. இப்பதி கன்னியாகுமரிமாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் பகுதியில் இருக்கிறது. திருநெல்வேலி சந்திப்பிலிருந்து 48 கல் தொலைவு; திருவனந்தபுரம் இருப்புப் பாதையிலிருந்து 47 கல் தொலைவு. நாகர்கோயிலிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் மூன்றுகல் சென்றால் இத்தலத்தை யடையலாம். பழையாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது.



சுசீந்திரம் திரிமூர்த்தி

இத்தலத்தில் இந்திரன் வழிபட்டு சாபம் நீங்கிச் சுசி (சுத்தம், தூய்மை, புனிதம்) அடைந்ததால் சுசீந்திரம் என்று இப்பதிக்குப் பெயர் ஏற்பட்டது. சிவனை இந்திரன் வழிபட்டதால் சிவீந்திரம் என்ற பெயரும் உண்டு. இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில் சிவீந்திரம் என்ற பெயரே காணப்படுகிறது. தல புராணம் ஞானாரண்யம் என்ற பெயரைக் கூறுகிறது.

நாகர்கோயிலிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் மூன்று கல் தொலைவில் இவ்வூர் இருக்கிறது. பழையாற்றின் தென்கரையிலே திரிமூர்த்தி கோயில் கம்பீரமாகக் காட்சி யளிக்கிறது. முதலில் நம் கண்ணில்படுவது நீராழியுடன் கூடிய பெரிய தெப்பக்குளம். அதைத் தாண்டித் தெற்கே சென்றதும் கிழக்கு நோக்கிய கோயில் இருக்கிறது. கோயிலுக்கு வெளியே இடதுபுறம் உதயமார்த்தாண்டவிநாயகர், தேரடிமாடன் இவர்களின் சந்நிதிகளும், வலதுபுறம் தேரடிபூதத்தான் கோயிலும் இருக்கின்றன. கோபுரத்துக்கு வெளியே நாடகசாலை மண்டபம் இருக்கிறது. அதை யடுத்துக் கோபுரம் இருக்கிறது. கோபுரவாயிலின் உயரம் 24 அடி. வடக்குக் குடைவறையில் சிதம்பரமூர்த்தி (நடராஜர்), காளி திருவுருவங்களும், தென்குடைவறையில் நந்திகேசுவரர், சாஸ்தா இவர்களின் உருவச் சிலைகளும் உள்ளன. கோபுரம் கோயிலின் கிழக்கு வாயிலை அணி செய்கிறது. அதன் உயரம் 135 அடி; ஏழு மாடங்கள் இருக்கின்றன. கோபுரத்தின் அடிப்பாகத்தைச் சுற்றிலும் அழகிய கற்சிற்பங்கள் காணப்படுகின்றன. அதில் ஒன்று ஜ்வர தேவர். நோயால்பீடிக்கப்பட்ட மக்கள் பாலும் மிளகும் அரைத்துக் கொண்டு வந்து அவ்வுருவத்தின் மேல்பூசிப் பிணி நீங்கப் பெறுகின்றனர். கோபுர மாடங்களில் ஏறிச் சென்றால் உட்புறம் முதல் இரண்டு மாடங்களில் இராமாயணக் கதை முழுவதும் ஓவியமாகத் தீட்டப் பெற்றிருக்கிறது. மூன்று முதல் ஏழுவரை உள்ள நிலைகளின் உட்புறங்களில் சுசீந்திரத்தல வரலாறு—அனுசூயா

தேவியின் கதை சித்தரிக்கப்பட்டிருக்கிறது. 4, 5 மாடங்களின் உட்புறங்களில் சிறுத் தொண்டர் புராணம், தசாவதாரம், கண்ணன் திருவிளையாடல் முதலியவைகளையும் சித்திரங்களாக எழுதப்பட்டிருக்கின்றன.

கோபுர வாயிலைத் தாண்டி உள்ளே சென்றதும் முதலில் நாலுகால் ஊஞ்சல் மண்டபம் இருக்கிறது. தாணுநாத சுவாமி அறம் வளர்த்தநாயகி (உமையம்மை) திருக் கல்யாணத்தில் இந்த மண்டபத்தில் ஊஞ்சல் உற்சவம் நடைபெறும். மண்டபத்தின் நான்கு தூண்களிலும் இரதி, மன்மதன், கர்ணன், அர்ச்சுனன் இவர்களின் அழகிய சிற்பச் சிலைகள் காணப்படுகின்றன. மன்மதன் கையிலுள்ள கரும்புவில்லில் கிளியும் பல்லியும்



சுசீந்திரம் கோயிலும் குளமும்

செதுக்கப்பட்டிருக்கின்றன. ஊஞ்சல் மண்டபத்திற்குத் தெற்கே தட்சிணாமூர்த்தி சந்நிதியிருக்கிறது. பிறகு கிழக்குப் பிரகாரத்திலிருந்து தெற்குப் பிரகாரம் அல்லது ஸ்ரீ பலிபுரத்திற்குச் செல்கிறோம். முதலில் வசந்த மண்டபம் இருக்கிறது. அதற்கு சற்று மேற்கே நீலகண்டவிநாயகர், கங்காளநாதர் சந்நிதிகள் இருக்கின்றன. தென்பிரகாரம் மேற்குக்கோடியில் சேரவாசல் சாஸ்தா சந்நிதி இருக்கிறது, மேற்குப் பிரகாரம் வடக்கு மூலையில் இராமசாமி கோயில் இருக்கிறது. தெற்குப் பிரகாரத்தில் சற்று உயரமான பாறையில் கைலாசத்து மகாதேவர் கோயில் உள்ளது. அதுவே மிகப் பழைய கோயிலாகக் கருதுகின்றனர். அக்கோயிலின் முன்னுள்ள பாறைகளில் வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் உள்ளன. மேற்குப் பிரகாரத்தில் சேர்ந்தாற்போல் ஜெயந்தீசுவரத்துக் கோயில்கள் ஆறு இருக்கின்றன. துர்க்கையைத் திரௌபதியும், சிவனை (ஜெயந்தீசுவரத்து மகாதேவனை)த் தருமபுத்திரரும், ஸ்ரீசக்கரதத்தைப் பீமனும், கிருஷ்ணனை அர்ச்சுனனும், நாராயணேசுவரரை (காசிலிங்கத்தை) நகுலனும், இராமலிங்கத்தைச் சகாதேவனும் இவைகளில் வழிபட்டதாகச் சொல்லப்படுகின்றது.

வடக்குப் பிரகாரத்தில் சுப்பிரமணியர் சந்நிதி இருக்கிறது. அதற்கு முன்னுள்ள மண்டபத்தைக் கட்டிய தேவதாசியும் அவள் மகளுமான மாலைக்குட்டி, சீதையம்மை உருவங்களும், நாஞ்சில் குறவர் இருவர் உருவங்களும் உள்ளன. திருவாங்கூரில் அமைச்சராக இருந்த வேலுத்தம்பித்தளவாய் என்பவர் கோயில் பராமரிப்பில் தப்புக்கணக்கு எழுதிய ஒருவனை உட்கார வைத்து வலது உள்ளங்கையில் ஆணி அடிக்கச் செய்தார். வேறு எவரும் அவ்வாறு செய்யாமலிருப்பதற்காக எச்சரிக்கும் பொருட்டு இந்த சந்நிதியின் இரு புறத்திலும் இருஉருவங்கள் வலது கைகளைப் பூமியுடன் வைத்து ஆணி அடிக்கப்பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

முருகன் சந்நிதிக்கெதிரில் அலங்கார மண்டபம் இருக்கிறது. அதற்குச் சிறிது தென் கிழக்கே அறம்வளர்த்த அம்மன் சந்நிதி இருக்கிறது. சிறிது வடக்கே காலபைரவர்சந்நிதி உள்ளது. பைரவர் சந்நிதிக்கெதிரில் நான்கு இசைத்தூண்கள் உள்ளன. 24 உட்தூண்கள் உள்ள இரண்டு தூண்களும், 33 உபதூண்களுடைய இரண்டு தூண்களும் இருக்கின்றன. இவைகளைத் தட்டினால் பல்வேறு ஓசைகளை எழுப்புகின்றன. இந்த தூண்களின் அருகில் திருவாங்கூர் மன்னர்களான மார்த்தாண்டவர்மர், இராமவர்மர் (கார்த்திகைத் திருநாள் தருமராஜர்) இவர்களின் பெரிய உருவச்சிலைகள் இருக்கின்றன. பைரவர் சந்நிதிக்குப் பக்கத்திலுள்ள ஒரு தூணில் விநாயகர் பெண்மூர்த்தமாகக் காட்சியளிக்கின்றனர். அதைக் கணேசினி அல்லது விக்கினேசுவரி என்று அழைக்கின்றனர். வடக்குப் பிரகாரத்தில் கீழ்க்கோடியில் இராமசாமி சந்நிதியை நோக்கி வீர ஆஞ்சநேயர் மேற்கு முகமாக நின்ற கோலத்தில் காண்கிறோம். (அவருடைய உருவப்படத்தை இந்த

இதழில் காணலாம்). நம்முடைய நாட்டி லேயே அழகிய பெரிய சில அனுமான் உரு வங்களில் இது ஒன்று என்பர். பூமியில் புதைந்து கிடந்து எடுத்து வரப்பெற்று நிறுத் தப்பட்டதாகக் கூறுவர், இது 16 அடி 4 அங் குல உயரமுடையது. இவர் பக்தியுடன் இரு கை கூப்பித்தலை சாய்த்து வணங்கி நிற்கும் தோற்றம் பார்ப்பவர் மனதைப் பரவசப் படுத்துகிறது. இவருக்குப் பன்னீரே அபி ஷேகம் செய்யப்படுகிறது.

ஆஞ்சநேயருக்குப் பின்புறம் கிழக்குப் பிரகாரத்தை நோக்கி சித்திரசபை இருக்கிறது. அதன் வெளியில் இருபுறங்களிலும் வல்லபை கணபதி, முருகன் இவர்களின் சந்நிதிகள் இருக்கின்றன. சித்திர சபைப் படிக்கட்டு களின் இருபுறமும் கங்காளநாதர், வேணு கோபாலர் இவர்களின் உருவச்சிலைகள் இருக் கின்றன. சித்திர சபையின் உள்ளே இருக் கும் தூண்களில் ஊர்த்துவ தாண்டவமூர்த்தி, காளி, பிரமன், திருமால், பதஞ்சலி, வியாக் கிரபாதர், காரைக்காலம்மையார், இராமர், அனுமான், அர்ச்சுனன், புருஷாமிருகம் முத லிய அழகிய உருவச்சிற்பங்கள் இருக்கின்றன.

சித்திர சபைக்குக் கிழக்கே ஊஞ்சல் மண்டபத்திற்கு வடக்கே தேவேந்திர விநாயகர் சந்நிதி இருக்கிறது. இவரைத் தேவேந்திரன் வழிபட்டான். இவர் முன்னால் நந்தியிருக் கிறது. தேவேந்திர தீர்த்தம் என்ற நீராழியும் இருக்கிறது. சித்திர சபைக்குத் தெற்கே சுதையினாலான பெரிய நந்தியிருக்கிறது. இதை மாக்காளை, வலிய ரிஷபம் என்பர். சுண் ணாம்புடன் வெண்சங்கும் கலந்து அரைத்துச் செய்யப்பட்டதாம். 12 அடி 8 அங்குல உய ரம், 21 அடி நீளம் 9½ அடி அகலமுடையது. தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள நந்தியை விடப் பெரியது. இந்தியாவிலேயே இரண்டா வது பெரிய நந்தி இது. அனந்தப்பூர் மாவட் டத்தில் இந்துப்பூர் பகுதியிலுள்ள இலெ பாட்சி என்னும் இடத்தில் இருக்கும் நந்தி நம் நாட்டிலே மிகவும் பெரியது.

நந்திக்குப் பக்கத்தில் கொன்றையடிநாதர் சந்நிதி மேற்கு நோக்கியிருக்கிறது. இக் கொன்றை மரம் 2300 ஆண்டுகளாக இருப்ப தாகக் கூறுகின்றனர். இம்மரத்தின் பகு தியை எடுத்து ஆராய்ச்சி செய்த தாவரநூல் வல்லுநர் இது 1200 ஆண்டுகளுக்குக் குறை யாத வயதுடையதெனக் கருதுகின்றனர். கொன்றையடியின் கீழ் மூன்று இலிங்கங்கள் உள்ளன. திரிமூர்த்தி கவசம் அணியப்பட் டிருக்கிறது. காலை 4-மணிக்கு வழிபாடு நிகழ்கிறது. பிரதோஷங்களில் கவசம் எடுக் கப்பட்டு மூன்று இலிங்கங்களுக்கும் பூசனை நடைபெறுகிறது.

கொன்றையடிக்குத் தெற்கே கருடாழ் வார் காட்சி கொடுக்கிறார். 3½ அடி உயர முள்ள பீடத்தின் மேல் அவருடைய திருவுரு வம் 6 அடி 4 அங்குல உயரமுடையது. மிக வும் அழகிய சிலா விக்கிரகம். இந்த மண்ட பத்தில் திருமலை நாயக்கர், அவர் மனைவி, மலை யப்ப நாயக்கர், அவர் அடைப்பக்காரன் இவர் களின் சிலைகள் இருக்கின்றன. திருமலை நாயக்கர் உருவத்தில் இடது காதில் ஒரு ஈர்க் குக்குச்சியை விட்டால் வலது மூக்கு வழி யாகவும், வலது காதில் விட்டால் இடது மூக்கு வழியாகவும் வருகின்றது. மலையப்ப நாயக்கர் உருவத்திலும் அப்படியே வருவதுடன் ஒரு காதில் விட்டால் மறுகாது வழியாக வெளியே வருகின்றது. அவ்வளவு அற்புதமான சிற்ப வேலைப்பாடு.

பின்னர் செண்பகராமன் மண்டபத்தின் வழியாகச் சென்று உதயமார்த்தாண்ட மண் டபத்தையடைகிறோம். நேரே கிழக்கு நோக் கிக் காட்சியளிக்கும் சுயம்புலிங்க மூர்த்தியே தாணுமாலயப்பெருமான். தாணு=சிவன், மால்—விஷ்ணு, அயன்—பிரமன் என்ற மும் மூர்த்திகளின் திருநாமங்களோடு திகழ்கிறார் இவ்விறைவன். இவர் கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் இடத்தை வடக்கேடம் என் பர். இந்த பெருமானுக்கு அபிஷேகமாகும் தீர்த்தம் ஒரு சுரங்க வழியாக கன்னியா குமரியை அடைவதாக மக்கள் நம்பிக்கை. இந்த சந்நிதியின் தென்புறம் துர்க்கை, மூடுகணபதி, சங்கரநாராயணர் இவர்களின் சந்நிதிகளிருக் கின்றன. வெளியில் வடகிழக்கே சபாபதியின் சந்நிதியிருக்கிறது.

வடக்கேடத்தின் தெற்கே தெக்கேடம் இருக்கிறது. இந்த சந்நிதியில் கிழக்கே திரு முக மண்டலத்துடன் திருவேங்கட விண்ணவர் எம்பெருமான் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். இவருடைய திருவுருவம் கடுசர்க் கரையால் ஆக்கப்பட்டது. 7½ அடி உயரம். இந்த சந்நிதிக்குப் பின்புறம் பள்ளிகொண்ட பெருமாள், சுசீந்திரப்பெருமாள் இவர்களின் சந்நிதிகள் இருக்கின்றன.

சுசீந்திரம் கோயில் 403 அடி நீளம், 233 அடி அகலம்; 93900 சதுர அடி பரப்புடையது. இரண்டு பிரகாரங்கள் உண்டு. சுமார் 30 சிறு கோயில்கள் அதற்குள்ளே அமைந்திருக்கின்றன. சுற்றுகளிலுள்ள தூண்களிலெல்லாம் பாவை விளக்குகள் அழகுபடுத்துகின்றன.

இத்தலத்தின் தீர்த்தங்கள் பிரக்ஞான தீர்த்தம், இந்திர தீர்த்தம், நெய்யாறு என்பன. பிரக்ஞான தீர்த்தமே நீராழியுடன்கூடிய தெப்பக்குளம். சித்திரையில் தெப்போற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. நெய்யாறு என்பது கோயிலுக்கு வடக்கே ஓடுகிறது. அதைக் கோட்டாறு, தந்நதி, பழையாறு என்ற பெயர்களாலும் அழைப்பர். இந்திரனுடைய யானையான ஐராவதம் தனது கொம்பினால் கீறி இந்த ஆற்றை உண்டாக்கியதால் கோட்டாறு என்ற பெயர் ஏற்பட்டது. (கோடு = கொம்பு). இந்திர தீர்த்தம் என்பது கோபுர வாயிலுள்ளே நுழைந்ததும் வடபுறமாக இருக்கும் நீராழிக்கிணறு. இதில் நீராடியே இந்திரன் வழிபட்டதாகத் தலபுராணம் கூறுகிறது.

இந்த கோயிலில் ஆறுகால பூசை. அர்த்தசாம பூசை இந்திரன் செய்வதாக ஐதீகம். ஒருநாள் பூசை செய்த நம்பூதிரி மறுநாள் செய்கிறதில்லை. மார்கழி, சித்திரை இரண்டு மாதங்களிலும் பெருந்திருவிழாக்கள் நடைபெறுகின்றன. மார்கழி உற்சவத்தில் தேர்த் திருவிழா மிகவும் சிறப்பானது. இலட்சக்கணக்கான மக்கள் கூடுவர். திருவாங்கூர் மன்னர்கள் அன்று வந்து தேர் நாலு வீதிகளிலும் ஓடி நிலைக்கு வந்த பின்னரே உணவுண்பது வழக்கம். இவ்வுற்சவங்களையன்றி, மாசி மாதத்தில் திருக்கல்யாண விழாவும், தெக்கேடம் பெருமாளுக்கு ஆவணிமூல உற்சவமும் நடைபெறுகின்றன.

இத்தலத்தைப்பற்றிய புராணக் கதைகள் இரண்டு. அகலிகையை மானபங்கப்படுத்திய இந்திரன் சாபம் நீங்குவதற்காக இத்தலத்து இறைவனை வழிபட்டுப் பேறுபெற்றான் என்பது ஒன்று. மற்றொன்று, அத்திரி முனிவரின் மனைவியான அனுசூயையின் கற்பைச் சோதிக்கவந்த மும்மூர்த்திகள் அவ்வம்மையாரால் குழந்தைகளாக்கப்பட்டு அவர்களின் தேவிமார்களின் வேண்டுகோளின்படி மீண்டும் மும்மூர்த்திகளாகி முனிவருக்கும் அவர் மனைவிக்கும் காட்சியளித்தது. இதுவே கொன்றையடி நாதரான மூன்று லிங்கங்கள் என்பர். இந்திரன், அனுசூயைக் கதைகள் பிரசித்தமானதால் இங்கு விரித்துக் கூறவில்லை.

சுசீந்திரம் கோயில் மிகவும் பழைமையானது. சுமார் 1200 ஆண்டுகளுக்கு முற்பட்டது. 9-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு இங்கே காணப்படுவது மிகவும் தொன்மையானது. சேர, சோழ, பாண்டிய, விஜயநகர, நாயக்க, திருவாங்கூர் மன்னர்கள் பலர் இக்கோயிலில் பல திருப்பணிகள் செய்திருக்கின்றனர். பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவைகளில் சுசீந்திரமுடைய எம்பெருமான், மகாதேவர், பரமசுவாமி, பரமேசுவரர், உடையார் சுசீந்திரமுடைய நாயனார், ஸ்தாணுநாதசுவாமி, ஸ்காணுமூர்த்தி என்றெல்லாம் இறைவனின் திருப்பெயர்கள் குறிக்கப் பெறுகின்றன. கி. பி. 1545-ல் விஜயநகர சேனைபதியான விட்டல மகாராஜர் கோபுரத்தைக் கட்டியதாக ஒரு கல்வெட்டிலிருந்து அறிகிறோம். ஆனால் அதே கோபுரம் மறுபடியும் கி.பி. 1851-ல் தொடங்கப்பெற்று கி.பி. 1888-ல் திருப்பணி முடிந்ததாகத் தெரிகிறது. இதைத் திருவாங்கூர் மன்னரும், திருவாவடுதுறை ஆதீனகர்த்தரும் செய்ததாகக் கூறுகின்றனர். இவர்களுடைய உருவங்களும் இதைக் கட்டிய சிற்பியான மதுரை சுப்பையன் ஆசாரியுடைய உருவமும் வண்ண ஓவியங்களாக கோபுரத்தின் உட்புறம் தீட்டப்பெற்றிருக்கின்றன. கருடமண்டபம் திருமலை நாயக்கருடைய திருப்பணி. மற்றும் பலர் பல திருப்பணிகளைச் செய்திருக்கின்றனர்.

இத்தலத்தைப்பற்றி வடமொழி, தமிழ், மலையாளம் இவைகளில் புராணங்கள் உள்ளன. சம்ஸ்கிருதஸ்தலமான்மியம் 24 அத்தியாயங்கள் ஓலைச்சுவடியாக இருக்கிறது. தமிழில் பாட்டாக ஆளூர் சிதம்பரநாதப் பிள்ளையென்பவர் இயற்றியிருக்கிறார். 50 ஆண்டுகளுக்கு முன் பாட்டும் வசனமுமாக காக்கம்புதூர்-வித்துவான் ஆறுமுகம் பிள்ளையென்பார் பதிப்பித்திருக்கிறார். மலையாள மொழியில் வட்டப்பள்ளி ஸ்தானிகரின் முன்னோரான பாச்சுமூத்தது என்பார் இத்தல புராணத்தை எழுதியிருக்கிறார்.

மூவுருவும் ஒருருவமாகி நின்றமுதல்வன் மூர்த்தி!

கண்ணன் - கோபியர்

உறவின் உட்பொருள்

[பி. ஸ்ரீ]

கண்ணன் கோபியருடன் விளையாடிய திருவிளையாடல்களில் பக்தர்களின் உள்ளம் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்திருக்கிறது. 'இந்த உலகின் இருள்நீங்க வந்துதித்த' பரம பக்தமணிகளான ஆழ்வார்களும் கண்ணன்-கோபியர் திருவிளையாடல்களில் ஈடுபடுவதைக் காண்கிறோம். 'குரவைப் பிணைந்து குடம் ஆடி முற்று இளையார் விளையாட்டொடு காதல் வெள்ளம் விளைவித்த' செய்தியை ஆழ்வார் பாசுரங்களிலும் காண்கிறோம். கண்ணன் 'சிற்றிலோடு சிந்தையும் சிதைத்'தான் என்பதை ஆண்டாளும் குறிப்பிடுகிறாள். ஓர் ஆய்ச்சிக்காக முரட்டு மாடுகளின் கொம்புகளுக்கிடையே கண்ணன் உகந்து கூத்தாடுவதை நம்மாழ்வாரும் பாடியிருக்கிறார். கண்ணன் குடக்கூத்தாடியது கண்டு இளம் பெண்களின் அறிவு அழியும் என்பதைத் திருமங்கைமன்னனும் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

'பூந்துகிலும் கோலச்சிற்றாடை பலவும் வாரிக்கொண்டு பூங்குருந்து மரம் ஏறி' மாயன் இருந்த இருப்பும் ஆழ்வார் வாக்கில் காணப்படுகிறது. 'கோமள ஆயர் கொழுந்தே! துகிலை பணித்தருளாயே; தொழுதோம்' ஆர்வம் உனக்கே உடையோம் என்று ஆய்ச்சியர் இரக்க, "மங்கை நல்லீர் வந்து கொள்மின்' என்று கண்ணன் அருளுவதையும், அவர்கள் சுரிகுழல் பிழிந்து உதறி துகில் உடுத்துக் கரையேறுவதையும் காண்கிறோம்.

பாவை நோன்பும் காமன் வழிபாடும்

திருப்பாவை நோன்பில் ஆண்டாள் கோபியரைப் பின்பற்றி கண்ணபிரானைக்காதலிக்கிறாள் என்பது பிரசித்தம். பாவனை மிகுதியால் 'சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமிய'ருடன், காலவெள்ளம் கடந்து, கை கோத்து நிற்கிறாள். அந்த கோகுலத்தில், ஆய்ச்சியர் மத்தினால் ஓசைப்படுத்திய தயிர ரவமும் ஆண்டாள் காதில் விழுகிறது. அவர்களுடன் தூயபெருநீர் யமுனையில் மகிழ்ந்து மார்கழிநீர் ஆடுகிறாள். அவர்களுடன் மனத்துக்கினியானைப் பாடித் தலையில் பனிவிழ, நடந்து கண்ணுக்கினிய கண்ணபிரானைத் தரிசிக்கப்போகிறாள். புகழ்போற்றிக் குணம் போற்றிக் கண்ணனுடைய வடிவழகும் நடையழகும் கண்ணுற்றுப் பரவசமாகிறாள். 'உந்தன்னோடு உறவு நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது' என்று விண்ணப்பஞ் செய்து கொள்கிறாள்.

ஆண்டாள் கண்ணன்-காதலால், காமன் நோன்பில் ஈடுபடுவதையும் காண்கிறோம். 'காமதேவா! பூங்கணை தொடுத்து என்னைக் கண்ணன் என்ற இலக்கில் புகுமாறு செய்வாய்; உன்னையும் உம்பியையும் தொழுதேன்' என்கிறாள். வேங்கடவனுக்கு என்னை விதிப்பாய்; வேங்கடவாணன் என்னும் விளக்கினில் என்னை விரைவில் புகச்செவ்வாய்' என்றெல்லாம் வேண்டிக்கொள்கிறாள். கோபியர் காதல் ஆண்டாளுக்கு வழி காட்டியாக உதவுவதைக்காண்கிறோம்.

பக்தியும் விரகதாபமும்

பிருந்தாவனத்திலும், யமுனையாற்றின் மணற்குன்றிலும் இராசக்கிரீடை என்ற திருவிளையாடல் நிகழ்வதைக் காண்கிறோம். அவர்களுக்குக் கண்ணன் 'அல்லல் விளைத்த' அருமருந்தாக உதவுகிறான். பல மாயங்கள் செய்கிறான். 'கஷ்டமே காதல்' என்று மூர்ச்சிக்கவும் செய்கிறான். சிந்திக்கச் செய்கிறான். திகைக்கச் செய்கிறான். தேறித்

தெளியவும் அருள் புரிகின்ருன். 'மாமாயனே' என்று அழுகிருர்கள்; தொழுகிருர்கள். அழிலும் தொழிலும் உருக்காட்டான்; அஞ் சேல் என்னுன்' என்று வருந்துகிருர்கள். 'மாமாயன் மையல் செய்து மனங் கவர்ந் தானே' என்கிருர்கள்.

'தோழி நாம் இதற்கு என் செய்வோம்?' என்கிருள் தலைவி. 'நந்தன் மைந்தன் வந் திலன்' என்கிருள். "கரிய நாழிகை, ஊழி யிற் பெரியன, கழியும் ஆறு அறியேனே" என்கிருள். 'பெண்ணின் வருத்தம் அறியாத பெருமான்' என்கிருள். குயிலைத் தூதுவிடு கிருள். மேகத்தைத் தூது அனுப்புகிருள். 'குயிலே! என் கருமாணிக்கம் வரக்கூவாய்' என்கிருள். ஆயர்தலைவனும் யானே என் கிருள். 'எங்கும் மறைந்து உறைவாய்; உருக்காட்டாதே ஒளிப்பாயோ' என்கிருள். என் செய்வான் எண்ணினுய்? கண்ணனே ஈது உரையாய், என்று கேட்கிருள். 'கள்ள மாயா' என்று கூப்பிடுகிருள். 'என் கண் முகப்பே வந்து தோன்ருய் நின்று அருளாய்' என்கிருள். இப்படியெல்லாம் பக்தி விரக தாபமாகத் தன்னை வெளியிட்டுக் கொள்ளு கிறது. கோபியர்களுக்கும் தான்; ஆழ்வார் களுக்கும் தான்.

கண்ணனின் கமலக்கண்ணும் செவ் வாயும் சேவடியும் செய்ய கையும் நீலமேனி யும் துழாய்மாலையும் மைவண்ண நறுங்குஞ் சிக்குழலும் கோபியரைப் பைத்தியமாக்கு கின்றன. இங்நிலையில், கோல நிலவில் வரு கிருனும் கண்ணன், ஒரு குன்று வருவது போல, 'தூது செய்கண்கள் கொண்டு ஒன்று பேசி வருகிருனும். 'பேதுறு முகம் செய்து நொந்து' வருகிருன். அல்லது குழலார் இசை பாடி வருகிருன். குரவை கோத்துக் கூத்து உவந்து ஆடி உள்ளம் குழைந்து உலோகர் சிரிக்க, இமையவர் ஏத்த நிற்கிருன். கண் ணன் வருகையும் இராசலீலையும் கோபியர்க ளுக்கு அருள் பாலிக்கின்றன. இந்தக் கண் ணன் கோபியர் உறவு ஆழ்வார்களை ஒத்த பக்தமணிகளுக்கும் வழி காட்டுகிறது, அருள் பாலிக்கின்றது. இன்றும் உலகர் நகைக் கின்ருர் இந்த உறவின் உட்பொருள்தான் என்ன?

இது என்ன நாடகம் (அநுபூதிக்கலை)

கண்ணன் கோபியர் உறவு பகுத்தறி வாளர்களை பிரமிக்கச் செய்திருக்கிறது. எனி னும் தன்னலமே இல்லாத பக்திக் காதல் தான் இந்த உறவில் புலனுகிறது பக்தர் களுக்கு. கோபியர்களின் தலைவி இராதை என்பது பிரசித்தம். இராதையின் ஸ்தானத் தைத் தமிழகத்தில் வகிப்பவள் நப்பின்னைப் பிராட்டி.

இராதைப் பிருந்தாவனத்தில் கண்ண னுடைய இராசலீலையில் கலந்து கொண்டவர் களில் முக்கியமானவள்என்பர். இராதையின் காதல் பக்தி உலகப் பிரசித்திமட்டுமல்ல, இலக்கியப் பிரசித்தியும் பெற்று இருக்கிறது. ஸ்ரீ ராதிகோபநிஷத் என்ற பிற்கால உபநிஷதம் இராதையை இராசநடனத்தின் இராணி என்று வருணிக்கிறது. 'நாரத பாஞ்சராத்தி ரம், என்ற நூலில் இராதாகிருஷ்ணன் வழி பாடு பிரஸ்தாபிக்கப்படுகிறது. இராதையின் இதயத்தில் வசிக்கும் கண்ணனைச் சரணமாக அடைகிறேன் என்கிருர் அந்த பக்தர். கண்ணனுடைய உள்ளத்தை இராதை திருடிக்கொண்டாள் என்கிருர். இராதையின் விருப்பத்தைக் கட்டளையாகக்கொண்டு நிறை வேற்றி வைப்பவன் கண்ணன் என்கிருர்.

இப்படியெல்லாம் கூறுவதன் உட் பொருள் என்ன? கண்ணனது குழந்தைப் பருவம்தான் பிருந்தாவனத்தில் கழிந்தது. பதினென்ருவது அல்லது பன்னிரெண்டா வது வயதில் கண்ணன் பிருந்தாவனத்தை விட்டுப் போய்விட்டான் என்பது புராணச் செய்தி. எனவே இன்றைய ஆராய்ச்சிக் காரர் சிலர் குறை கூறுவதற்கு புராண ஆதாரம் இல்லை. கண்ணன்-கோபியர் உறவு பற்றிய கதைகள் நாளடைவில் வளர்ந்து வந் திருக்கின்றன. ஜீவாத்மா-பரமாத்மாவின் உற வைக் காதலர்களின் பாஷையில் விளக்கிக் காட்டும் முறையில் வளர்ந்திருக்கின்றன கண்ணன் கோபியர் கதைகள்.

கண்ணன்-கோபியர் உறவுஎன்ற காதல் நாடகம், பெரும்பாலும் அநுபூதிக் கலைஞர் களின் பரிபாஷைதான் என்றே துணிய வேண்டும். அநுபூதிக்கலையில் கடவுளுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள நெருங்கிய உறவை யும், பக்தனது ஆழ்ந்த தெய்வ நாட்டத்தை

யும், திருப்தியையும் வெளியிடுவதற்குப் பெரும்பாலும் காதலர்களின் அனுபவங்களையே பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்று மிஸ் எவலின் அண்டர்ஹில் போன்ற அநுபூதி விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

கிறிஸ்து பெருமானும் தமது உவமைக் கதையொன்றில் ஆண்டவனை மாப்பிள்ளையாகவும், ஆன்மாக்களைத் தங்கள் காதலனுக்காகக் காத்திருக்கும் கன்னிப்பெண்களாகவும் குறிப்பிடுவதைக் காண்கிறோம். சாலமன் கீதத்தில் ஆன்ம உணர்ச்சி காதலர் பாஷையில் வெளியிடப் பெறுவதையும் காண்கிறோம். இடைக்காலத்தில் வாழ்ந்த கிறிஸ்து பக்தர்களில் சிலரும் தங்களைக் 'கிறிஸ்து நாதரின் தேவியார்' என்று சொல்லிக்கொண்டனர். தங்கள் கிறிஸ்து பக்தியைத் தெய்வத்திருமணம் என்று கருதியவர்களும் உண்டு. 'என்னை உன் மணப்பெண் ஆக்கிக் கொள். உன் கைகளில்தான் (உன் தழுவலில் தான்) நான் மகிழ்ச்சியுறுவேன்' என்பது செண்ட்ஜோன்ஸ் என்ற பக்தை கிறிஸ்து பெருமானை நோக்கிச் செய்துகொள்ளும் பிரார்த்தனை. செண்ட்பிரான்ஸிஸ் என்ற கிறிஸ்து பக்தர் அல்வர்னியா மலைமீது தமக்குக் கிடைத்த கிறிஸ்து தரிசனத்தில் 'என் நாயகன் என் அன்பிற்குரிய ஆட்டுக்குட்டி சுவாமி, என்னை மணந்துகொண்டு கணையாழியும் கொடுத்தான்!' என்று பாடியுள்ளார். செண்ட்தெரிசா என்ற கிறிஸ்து பக்தையைப் பற்றி ஓர் அறிஞர் (வில்லியம் ஜேம்ஸ்) குறிப்பிடும்போது 'சாராம்சத்தில் இவள் பக்திக் கொள்கை எல்லாம் பக்தனுக்கும் தெய்வத்திற்கும் இடையே முடிவில்லாது நிகழ்ந்துகொண்டே இருக்கும் ஒருகாதல் நாடகம்தான்!' என்கிறார்.

இத்தகைய பக்தி அனுபவங்களையும் அனுபூதி மர்மங்களையும் அறியாதவர்களே கண்ணன்—கோபியர் கதைகளைப் பரிகசிப்பார்கள். இக்கதைகளிலும் காதல் நாடகங்களிலும் ஆத்ம வித்தையின் ஓர் உவமைப் பெருங் கதையான இதிகாசத்தையே காண்கிறோம். எழுத்தளவில் இக்கதைகளுக்குப் பொருள் கொள்ளுவது அறியாமை. எல்லையற்ற பரம்பொருள் தன் அன்புக் கரங்களை நீட்டி அன்பர்களை வரவேற்று மார்புறத் தழுவிக்கொள்ளச் சித்தமாயிருக்கிறது என்ற தனிப்பெருங் கொள்கையைத் தான் 'இராதா கிருஷ்ணர்' உறவு என்ற காதல் நாடகம் சுட்டிக்காட்டுகிறது என்றார் ஸர் ஜார்ஜ் கிரயர்சன் என்ற நல்லறிஞர். இக்காதல் நாடகத்தைப் பலவாறு வருணித்திருக்கும் கவிஞர் உள்ளங்களிலும் பக்தர் உள்ளங்களிலும் சிற்றின்பக் கருத்துக்கு இடமே இருக்க முடியாது என்றும் இந்த அறிஞர் உறுதியாக நம்புகிறார்.

தாயன்பும் நாயகிபாவமும்

கண்ணன் கதைகளில் தாயன்பிற்கும் இடமிருக்கிறது; நாயக—நாயகி பாவத்திற்கும் இடமிருக்கிறது. பெரியாழ்வார் பெரும்பாலும் தாயன்பு முறையை மேற்கொண்டு பக்தி புரிந்தார். இந்த ஆழ்வாரின் அருமைத் திருமகளான ஆண்டாளோ நாயக நாயகி பாவத்தில் தன்னை முழுக்க முழுக்க இழக்கலானாள்.

தாயன்புமுறைக்கு ஓர் அருமையான உதாரணம் கிருஷ்ணகர்ணாமிருதத்தில் காணப்படுகிறது. கண்ணனுக்கும் யசோதைத் தாய்க்கும் பின்வருமாறு ஓர் உரையாடல் நிகழக் காண்கிறோம்.

'அம்மா!'

'என்ன, என் குட்டி இராஜாவே! யது குல நாயகமே!'

'பால் கிண்ணத்தை என்னிடம் கொடு.'

எதற்காக?'

'பால் குடிக்கத்தான்'

'இப்போதேயா?'

'பின்னே எப்போது?'

'இரவில்தான்.'

'இரவு என்றால் என்ன?'

'இருட்டு'

உடனே கண்ணன்தன் கண்களை மூடிக்கொண்டான். 'இரவு வந்துவிட்டது; இப்போது பாலைக் கொடுத்துவிடு' என்று சொல்லிக்கொண்டே குழந்தைக் கண்ணன் தாயின் மேலாடையைப் பற்றி இழுத்தான். 'அப்பேர்ப்பட்ட கிருஷ்ணபரமாத்மா நம்மைக் காப்பாற்றுவாராக' என்று பாடுகிறார் கிருஷ்ண கர்ணாமிருதத்தின் ஆசிரியரான

லீலாசுகர். இது வரலாற்றுச் செய்தியல்ல, அருமைக் கவிதை; அற்புதமான ஒரு பக்தி அனுபவம்.

இதே முறையில்தான் நாயக நாயகி மூன்றைக் கதைகளும் கண்ணனைச் சூழ்ந்து செழித்து வளர்ந்திருக்கின்றன. கோகுலத்து அழகியருடன் அழகனுன பகவான் குழந்தை-விளையாடல்களும் காதல் விளையாடல்களும் புரிந்ததெல்லாம் தன் சொந்த நிழலுடன் விளையாடியது போன்ற கதைகளேயாகும் என்று பாகவதம் கூறியிருப்பதையும் காண லாம். கண்ணன் தன் குழலிசையால் தனக்கே உரிய ஆனந்த அம்சத்தை—விளை யாட்டுக்காகப் பிரிந்திருந்த அந்த அம்சத் தைத் தன்பால் இழுத்துக் கொள்ளுகிருனும். குழலிசை கண்ணனின் அன்பார்ந்த அழைப்பேதான். இது காதில் விழுந்ததும்—குழலிசையாலோ, வேறு வகையாலோ வந் தாலும் சரி — பக்தன் வீடுவாசல்களை மறந்து, தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புக்களைத் துறந்து, ஆனந்தக்களிப் புடன் அன்புக்கண்ணனை இன்புறச்செய்ய ஓடி வருகிருன். இதிலேதான் இருக்கிறது தொண்டனின் பேரின்பமும்!

தன்னையே காணிக்கையாக ஒப்புவிக் கிருன் பக்தன். இந்த அன்புக் காணிக்கை யை ஒப்புக்கொள்ளும் ஆண்டவன் தொட்டுத் தூய்மை ஆக்கித் தொண்டனுக்குத் திருப் பிக்கொடுக்கிருன். தன்னை அழகு செய்து கொண்டு ஒரு கண்ணுடிமுன் போய் நின்று நாம் திரும்பிவரும்போது அக்கண்ணுடியில் பிரதிபலித்த அழகு அதிலேயே தங்கிவிடா மல் நம்முடன் திரும்பிவருவதுபோலத்தான் நடைபெறுகின்றது கண்ணன்—கோபியர் நாடகத்திலும். கோபியர் காதலும் இது; இராதை காதலும், நப்பின்னை காதலும் இது. பக்தி—இமயத்தின் சிகரத்திலுள்ள நம்மாழ் வார் போன்ற பரமபக்த மணிகளின் பக்திக் காதலும் இது'

தாயன்பு முறையைப் புரிந்துகொள்வது எளிது; நாயகி நாயக பாவத்தைப் புரிந்து கொள்வது பக்குவமடையாத பகுத்தறிவுக் குக் கஷ்டமான காரியம்தான். உள்ளம், தூய்மை ஆகி கண்ணனுக்கே ஆவது காம மும் கற்பும் என்ற நிலையை அடைந்தா லொழியக் கண்ணன்-கோபியர் நாடகம் தன் உட்பொருளை உள்ளபடியே வெளியிடப் போவதில்லை. இது சுவாமி விவேகானந்தரின் தேர்ந்த கருத்துக்களில் ஒன்று. இத்தகைய காதற் பைத்தியத்திற்கு வேறொன்றுமே தேவையில்லை.—இந்த உலகத்திலோ, மறு உலகத்திலோ வேறொன்றும் தேவை இல்லை என்றும் விவேகாநந்தர் கூறியுள்ளார். இந் தத் திறவுகோலைக்கொண்டு சமய உலகின் ஒரு பகுதியைத் திறந்து பார்க்கலாம்.

கோபியர்களின் வஸ்திரஹரணம் என்ற நாடகமும் கண்ணன் கோபியர் உறவு என்ற பெரிய காதல் நாடகத்தின் ஒரு பகுதிதான். கண்ணன் ஏழு வயதுச் சிறுவனுக இருந்த காலத்தில் நடைபெற்ற திருவிளையாடல்தான் இது. இதுவும் சரித்திர நிகழ்ச்சி அல்ல; கவிதைச் செய்திதான். ஆனுல் கவிதையில் உண்மை இல்லையா? இலட்சியத்தைக் காதலிக் கும் ஒவ்வொரு ஆன்மாவும் ஒரு கோபிகை தான் என்றும், பற்றற்ற நிலையில்—அதாவது அநுபூதி பாஷையில் முற்றும் துறந்த 'நிர் வாண' நிலையில்—ஆண்டவனை அடைந்தே தீரவேண்டும் என்றும் அவன் திருவடி களில் எல்லாவற்றையும் ஒப்படைத்தாக வேண்டும் என்றும் சாது வாஸ்வனி என்ற பேரறிஞர் கூறி இருப்பது கூர்ந்து நோக்கத் தக்கது. ஆன்ம ஒளியைத் தடுக்கக்கூடிய வாழ்க்கைச் சுமையோ மேலாடை நாக ரிகமோ துறக்கப்படவேண்டியவை தாம் என் பது அறிஞர் வாஸ்வனி காட்டும் தத்து வப்பொருள் ஆகும். நம் திருவள்ளுவனும், 'பற்றுக பற்றற்ருன் பற்றினை' என்ற குற ளில் இக்கருத்தைத் தெளிவுபடுத்தியிருக் கிருர்.

* * *

சமயக் கொள்கை என்பது அறிவால் ஒப்புக்கொள்ளப்படும் கொள்கை மட்டும் அன்று; ஆத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இதயத்திலே நடைபெறும் திருமணத்தின் இரகசியத்திலே சமயங்களின் இரகசியங் களும் அறியப்படுகின்றன. அகத்திலே ஆத்மா பரமாத்மாவைத் தன் அழகிய மண வாளனுக ஏற்றுக்கொள்ளும் காதற் கதை தான் காதல் நாடகம்தான், சமயங்களின் இதயப் பிரதேச உண்மையாகும். இந்த முடிவு எல்லாச் சமயங்களுக்கும் சாராம்சத் தில் பொதுவாகும். எனினும் கிருஷ்ண பக்தியில் இந்த உண்மை சிறப்பாகவும் ரச மாகவும் இடம் பெற்றிருக்கிறது எனலாம்.

நவதிருப்பதி அநுபவம்

திரு. K. பட்சிராஜன், B.A., B.L.

எட்டாம் பாட்டு

"எங்கள் கண்முகப்பே.....கொண்டே" வானத்துச்சந்திரன் சேரும்படி உயர்ந்த மாடங்களையுடைய திருப்புளிங்குடியிலே உறைபவனே. திருவைகுந்தத்திலே நின்றருளியவனே யாவர்க்கும் இறைவனே. எங்கள் கண் வட்டாரத்திலே உலகத்துள்ளார் அனைவரும் உன் திருவடிகளிரண்டையும் சேவித்து எழுந்து வணக்கத்தோடு தங்கள் அன்பு தோன்ற தங்களாலியன்ற சொற்களாலே ஒருவரை ஒருவர் விஞ்சும்படி உன்னைத் துதிக்கும்படி பரந்த சிறந்த இந்த மண்ணுலகத்தே இந்த இடத்திலும் உன்வீறு பரந்து தோன்றும்படி ஒருநாள் இருந்தருளவேணும்.

"எங்கள் கண்முகப்பே"

நாங்கள் உனக்குகந்த அடியார்களாகிய நாங்கள் காணும்படி எங்கள் கண்முன்பே எங்கோ என்றோ யார்முன்போ இல்லாமல் இங்கே இன்றே எங்கள் கண் எதிரிலேயே.

உலகர்கள் எல்லாம்

உலக மக்கள் அடங்கலும் ஒருவர் பாக்கியின்றியே. எங்கள் குறையிரப்பைக் கேட்டு நீ எழுந்தருளினாய் என்றால் வையம் முற்றுமே வியந்து கூடிவந்து விடாதா. அப்படி எல்லோரும் வரும்படி.

இணையடி......இறைஞ்சி

உன் உபய திருவடிகளையும் சேவித்து எழுந்து வணக்கத்தோடு உன் சன்னிதியிலே நிமிர்ந்து நிற்பரோ? நிற்க முடியுமோ? இணையடி சேவித்தால் உடல்தான் வளையுமே.

தங்கள்......பூசிப்ப

தங்கள் ப்ரீதி தோன்ற. அன்பு பொங்கிப் பொழிய. அப்பொங்குதல் அவர்கள் வாக்கு மூலம் மங்களா சாசனங்களாக வெளிவர. தந்தாம்கற்ற அளவுக்கேற்ப. எந்தச் சொல்லில் தங்கள் பிரியவஸ்துவைப் போற்றுவார்களோ அந்த அன்பு மொழிகளனைத்தையும்கொண்டு இடம் இடமாகத் தாங்கள் நின்ற இருந்தவிடத்திலிருந்தே; ஒருவரை ஒருவர் விஞ்சும்படி உன்னைத் துதிக்க; உனக்குப் பல்லாண்டு பாட.

திங்கள்......குடியாய்

உயர்ந்த மாடங்களை உடைய திருப்புளிங்குடியிலே உறைபவனே. மாடங்களின் உயர்த்தி சாமானியமா. சந்திரமண்டலத்தளவும் ஓங்கிய மாடம். வானவெளியிலே சுற்றும் சந்திரன் உடல்தளர்வு ஏற்பட்டால் சற்றுத் தங்கி இளைப்பாற அமைத்தது போன்று உயர்ந்த மாடங்கள். அத்தகைய மாடங்கள் நிறைந்த புளிங்குடியில் சாய்ந்தவனே.

திருவைகுந்தத்துள்ளாய்

அடுத்து ஸ்ரீவைகுந்தத்திலே நின்றருளினவனே.

தேவா

எமக்கும் பிரமாதி தேவருக்கும் தேவனே.

இங்கண்......கொண்டே

உன் தேவனை இருப்பு பரமபதத்திலே என்றாலும் அதே போன்ற உன் திரிபுவன சக்ரவர்த்தித்துவம் தோன்றும்படி வீறு தோன்றும்படி இந்த மண்ணுலகத்திலேயும் இருந்தருளவேணும். அந்தவிடத்துக்குப் பெருமை நீ இருத்தலால்தானே. நீ இல்லாத போது அது அழகு இழந்ததுதானே. இம் மண்ணுலகும் ஒன்றும் இழிவானதல்ல. இங்கும் அங்குபோல் நீ எழுந்தருளி வீற்றிருக்க வேணும். அங்கு காலமெல்லாம் இருந்தால் இங்கு ஒரு நாளாகிலும் வீற்றிருந்து சேவை சாதிக்கலாகாதா. நாங்கள் கண்டுகளிக்கும்படி நீ ஒரு நாளாகிலும் எங்கள் கண்வட்டாரத்திலே வீற்றிருக்கவேணும்.

தங்களன்பார என்றவிடத்தே வியாக்கியானத்தில் ஒரு ரசமான ஐதிஹ்யம் கூறப்படுகிறது.

வங்கிபுரத்து நம்பி என்ற ஸ்ரீ வைஷ்ணவர் பெருமாள் சேவிக்க வந்தார். அங்கே கூட்டமாக எல்லோரும் சேவித்துக்கொண்டிருந்தார்கள். நம்பி தம்மினத்தார் நின்ற இடத்தைவிட்டுச் சுற்றிலும் நோக்கினர். ஓரிடத்தில் இடைச்சிகள் சேவித்துக்கொண்டிருந்தார்கள். நம்பி அங்குபோய் அவர்களோடு நின்று பெருமாளை சேவித்துக்கொண்டிருந்தார். இதை ஆண்டான் என்ற ஸ்ரீ வைஷ்ணவர் கண்டு நம்பியை யழைத்து ஸ்ரீ வைஷ்ணவரான நாங்களெல்லோரும் இருக்கும் இடத்தைவிட்டு நீர் அங்கு போன தன் மர்மமென்னவோ? என்று வினவினர். நம்பி நாம் கொஞ்சம் படித்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறோமல்லவா? அந்த அளவுக்கு பகவானைத் தந்திரத்தால் இழுத்துவிட முயல்வோம். அவர்கள் ஒன்றும் அறியாதவர்களாகையாலே பகவானுடைய கடாக்ஷம் அவர்களிடத்தே பள்ள மடையாயிருக்குமன்றோ. அதனால் அங்கே போனேன் என்றார். ஆண்டான் 'சரி! அங்கு போனீரே? அவர்கள் பெருமாளை நோக்கி என்ன சொன்னார்கள். தேவரீர் என்ன அருளிச் செய்தீர்' என்று கேட்டார். அதற்கு நம்பிகள் "அவர்கள் பெருமாளை பாலுண்பீர். பழமுண்பீர். பொன்னாலே பூணுநூலிடுவீர். நூறுபிராயம் புகுவீர், அழுத்த இரட்டையுடுப்பீர்" என்றார்கள். நான் 'விஜயஸ்வ! விஜயீபவ!' என்று வாழ்த்தினேன் என்றார். கேட்ட ஆண்டான் "ஸ்வாமீ! அங்கே போயும் முரட்டு ஸம்ஸ்க்ருதம் விட்டீரில்லையே. எங்கே யிருந்தாலும் நாம் நாம் காணும்" என்றாராம்.

ஒன்பதாம் பாட்டு

"வீற்றிடம்கொண்டு......வல்லானே"

செந்நெல்லோடு இளம்வாளைகள் சேற்றிலே உகளும் செழுமையான கழனிகளையுடைய திருப்புளிங்குடியில் வர்த்திக்குமவனாய், அசுரர்க்கு யமனாய் நின்று அவர் குலத்தை முற்றும் கறுவறுத்த கொடிய செயலைச் செய்த ஆயுதங்களை தரித்தவனே. அடியவரான எங்கள் வாக்கு இடையறுது உனக்கு மங்களா சாஸனம்பண்ணவும் எங்கள் கண்கள் குளிர உன் வடிவழகைப்பருகும்படியும் பரந்த இடத்தையுடைய இந்தப் பூமியிலும் நீ வீற்றிருந்தருள வேணும்.

வீற்றிடங்கோண்டு......இருந்திடாய்

முன்பாட்டில் வேண்டிக்கொண்டதை தன் ஆற்ருமை மிகுதியாலே மீண்டும் விண்ணப்பிக்கிறர். "என்ன இந்த உலகத்திலா" என்றிறைவன் வினவுவதாக வைத்து 'ஆமாம் இந்த ஞாலத்துள்ளும். இருந்தருள வேணும். பரமபதத்திலிருக்கும் இருப்பைப் போலவே இங்கும் வீற்றிருக்கவேணும். இரண்டிடத்தும் ஒரே இருப்பாகக் காட்சியளிப்பது உனக்குக் கடினமல்லவே. வேண்டுமென்றால் அங்கும் இக்கோலத்தோடு இருக்க இயலுமே உமக்கு, நீ பிறந்து உன் புகழை அதிகமாக்கிக்கொண்ட இந்தப் பூமி. எனவே இதிலும் நீ வீற்றிருக்கலாம். வீற்றிருக்க வேணும்.

அதனுல் உமக்கென்ன பிரயோஜனம் என்கிறீரா

"அடியோம் போற்றி ஓவாதே
கண்ணிணைகுளிர புதுமலர் ஆகத்தைப் பருக

உன் திருமேனி வடிவழகை நீகொலுவிருக்கும் அழகை உன்வீறு தோன்ற இருக்கும் இருப்பின் சோபையை எங்கள் இரு கண்களும் வாரிப் பருக. உன் அழகு வெள்ளமாகத் தேக்கிட எங்கள் கண்கள் முக்வையாக நாங்கள் மொண்டுகொண்டு உண்டு களிக்க. உன் அழகு மலராய் மலரா எம் கண்கள் வண்டாய் அதன் மதுவைப் பருக. இப்படியுண்டு கண்ணும் மனமும் குளிர்ந்து உன் வடிவழகுக்குக் கண்ணெச்சில் படாதபடி பல்லாண்டு பாடுவோம். உன் அழகை ரஸித்து வாழ்த்துவோம் இதைவிட என்ன பிரயோஜனம் எங்களுக்கு வேண்டும். உனக்கும்தான் இதன் மேலாக என்னவேண்டுமோ? எங்கள் பூரிப்பில் நீ பூரிக்க.

இப்படி இருதலையும் மகிழ்வெய்த நீ இங்கு ஒரு நாளாகிலும் வீற்றிருக்கவேணும்.

இறைவன் அழகை அனுபவிக்கும் பக்தர்களின் கண்களை வண்டாகவும் இறைவன் அழகை பூவில் தேங்கிய மதுவாகவும் வர்ணித்தல் கவிகட்கியல்பு.

தசரதன் சொல்லின்பேரில் மந்திராலோசனை சபைக்கு இராமனை அழைக்கச் சென்ற சுமந்திரன் கண்ட காட்சியை, கம்பர்

"பெண்ணினின் னமுதன்னவள்
தன்னொடும் பிரியா
வண்ண வெஞ்சிலைக்
குரிசிலும் மருங்கினிதிருப்ப
அண்ணலா ண்டிருந்தான்
அழகுஅருநற வெனத்தன்
கண்ணும் உள்ளமும் வண்டெனக்
களிக்கின்ற கண்ணன்

என வருணித்தார்.

யாகசாலை வந்த இளம் குமரரான இராம லக்ஷ்மணர்களின் அழகில் ஈடுபட்ட ஜனகன்,

"இருந்த குலக்குமரர்தமை
இருகண்ணின் முகந்து
அழகுபருக நோக்கி"

என அழகுறக் கூறினார்.

அடியோம் போற்றி ஓவாதே

நாங்கள் இடைவிடாது மங்களா சாஸனம் பண்ண. நித்ய சூரிகள் மத்தியிலே இருக்கும் இருப்புப்போலவே இம் மண்ணுலகத்தும் நீ எழுந்தருளி வீற்றிருக்க உன் திவ்ய மங்கள விக்ரகத்துக்கு அடியவர்களாகிய நாங்கள் பச்சை வழித்துப் பல்லாண்டு பாடி வாழ்த்தும்படி.

சேற்றிள......குடியாய்

பண்ணைகளிலே வாளைகள் வாலிபர்கள் போன்று களிப்புடனும் மிடுக்குடனும் துள்ளி விளையாட தங்களுக்கு வேண்டியவை தட்டின்றிக் கிடைத்தலாலே கவலையற்று வாளைகள் களித்துத் திரிவனவாயிற்று. இது அத்தல விசேஷம். அத்தகைய திருப்புளிங்குடியிலே வர்த்திக்கும் நீயும் எங்களுக்குத் தேவையானவற்றை யருளி எங்கள் ஆசைகளைத் தலைக்கட்ட வேண்டாமோ.

கூற்றமாய் .....வல்லானே

தேவர்கள் பிரார்த்திக்க அவர்கள் வேண்டுகோள் நிறைவேற வேண்டி கொடிய செயலைச் செய்யும் ஆயுதங்களனைத்தையும் கொண்டு அசுரர்க்கு எமனாய்த் தோன்ற வில்லையா. அவர்கள் அபிமதம் தலைக்கட்டினது போன்று எங்கள் குறையையும் நிறைவேற்றவேணும். இங்கு படைகள் கொடுவினை செய்யக்கூடத் தேவையில்லை. உமக்கு அணியாய் விளங்கினால் போதும். உம் சௌரியம் காட்டவேண்டியதில்லை உம் ஸௌஸப்யத்தைத்தானே குறையிரக்கிறோம்.

ஒன்பதாம் பாட்டு

"கொடுவினைப்படைகள்......செய்யாயே"

பகைவர்களை யழிக்க, கொடிய தொழிலுடைத்தான ஆயுதங்களைக் கையாள வல்லவனே! அப்படி ஆயுதங்களைத் தரித்து தேவர்களுக்குத் துன்பம் தீரும்படி அசுரர்க்குத் துன்பம் செய்கின்ற கொடிய விஷம் போன்றவனே. எனக்கு அமுதானவனே. செழித்த வயல்கள் சூழ்ந்த திருப்புளிங்குடியிலே எழுந்தருளி யிருப்பவனே. வடிவழகுக்கு இணையே இல்லாதபடி அழகுடைய இலக்ஷ்மீ தேவியும். அது போன்றது என்று சொல்லலாம்படி வடிவுடைய பூமிப்பிராட்டியும் பிடிக்கும்படியான மென்மையான உன் திருவடிகளை கொடிய பாவத்தைப் பண்ணினவனான நானும் பிடிக்கும்படி நீ என்னை அங்கே உன்னருகே அழைத்துக்கொள்ளவோ அல்லது இங்கே வந்தருளவோ செய்ய வேணும்.

"கொடுவினைப்படைகள் வல்லையாய்......

எளிவரும் இயல்வினனானவன்தான் நீ. எனினும் வேறு வழியின்றிப் போனால் கொடிய ஆயுதங்களையும் எடுத்து ஆளவல்லாய். உன் எளிமையையும் மாயச்செய்யும்படி அபராதம் செய்தபோது படையெடுப்பாய். முடியும் மட்டும் பார்த்துப் பின்னை வேறுவழியின்றித் திருவுள்ளத்தில் கன்றலோடே, கண்ணும் கண்ணநீருமாயன்றோ நீ ஆச்ரித விரோதிகளை அழிப்பது. விபீஷணனுக்கு 'இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்' என்று வாக்களித்த பின்பும் அன்றோ அங்கதனை இராவணனிடம் தூதனுப்பியது? திரக்கழிய அபராதம் பண்ணினவனிடம் தூதனுப்பியது தான் கருணையின் நிலையமானதாலன்றோ? உன் திருவுள்ளத்தில் எத்தனை கன்றலிருந்தது என்பதை இளையவன் அறிந்து கூறினானன்றோ,

"அறந்தருதவத்தை ஆயும்
அறிவினுவற்றை முற்றும்
மறந்தனை எனினும் மற்றிவ்
விலங்கையின் வளமைநோக்கி

இறந்திது போதல் தீது
என்றி ரங்கினெனினும் எண்ணில்
சிறந்தது போரே என்றான்
சேவகன் முறுவல் செய்தான்''

என்றார் கம்பர். யாரிடம் இரங்கினான்?

தேசியைச் சிறையில் வைத்தான்
தேவரை இடுக்கண் செய்தான்
பூசுரர்க் கலக்கணீந்தான் மன்னுயிர்
புடைத்துத் தின்றான்
ஆசையின் அளவுமெல்லா உலகமும்
தானே ஆள்வான்
வாசவன் திருவும் கொண்டான்
வழியிலா வழிமேல் சென்றான்

''வாழியாய் உன்னை அன்றுவரம்
பறு துயரின் வைகச்
சூழ்விலா மாயம் செய்துன்
தேவியைப் பிரிவு சூழ்ந்தான்
ஏழைபால் இரக்கநோக்கி ஒருதனி
இகல்மேல் சென்ற
ஊழிகாண்கிற்கும் வாணாள் உந்தையை
உயிர் பண்டுண்டான்.''

இது இராவணன் குற்றபரம்பரை. சாதாரண குற்றமா? தேவியைப் பிரித்தான். அதற்கும் மேலாக நம் பிதா ஜடாயுவை முடித்தான். இதன்மேல் அவன் செய்ய வேண்டிய அபராதம் உண்டா? அண்ணா!

''அன்னவன் தனக்கு மாதைவிடுக
என்று அருளுவாயேல்
என்னுடை நாமம் நிற்கும்அள
வெலாம் இலங்கை மூதூர்
மன்னவன் நீயே என்று
வந்தடைந்தார்க்கு வாயால்
சொன்னசொல் என்னும் முன்னம்சூளுற
வென்னும் தோன்றால்!''

என்று இலக்ஷ்மணன் அடுக்கிய பின்னும் அங்கதனை அனுப்பினான்.

முதல்நாள் போரில் இராவணனைத் தனியனாக்கி உன் வலியின் திறம் கண்டாயே! போ! நன்கு ஆலோசனை செய். ''போர்க்கு நாளைவா'' என்றனுப்பினான். சரணாகதியானால் சீதையை அழைத்துக்கொண்டு இன்றே இப்போதேவா என்பது குறிப்பு.

அது போன்றே கும்பகருணனையும் கூடுமேல் கூட்டிக்கொண்டு நின்றது புரிதும் என்றுதானே விபீஷணனை அனுப்பினான். போன விபீஷணன் வந்து 'பெய்திற னெல்லாம்பெய்து பேசினன் பெயருந்தன்மை செய்திலன் குலத்துமானம் தீர்ந்திலன் சிறிதும்' என்றுகூற பெருமாள் 'கொய்திறச் சடையின் கற்றைக் கொந்தளக் கோலக் கொண்டல்நொய்தினில் துளக்கி' 'செய்திறன் இனி வேறுண்டோ விதியை யார்தீர்க்கற் பாலார்'' என்று கன்றலோடன்றோ கும்பகருணவதையில் மனம் வைத்தார்.

அமரர்க்கிடர்கெட....செய்

நன்மையின்பாற்பட்ட தேவர்களது துன்பம் நீங்க அசுரர்க்கு இடர் செய்யும். தேவர்க்குத் துன்பம் செய்யாதிருந்தால் அசுரர்க்கு இடர் இவன் செய்யான். எனவே தனக்காகவன்று அசுரர்க்கு இடர்செய்தது.

கடுவினை நஞ்சே என்னுடை யமுதே

தீவினை செய்வார்க்குத் தீய நஞ்சு போன்றவனே அவர்க்கு நஞ்சல்ல தீவினைக்கு அருநஞ்சு.

என்போன்றார்க்கு அமுது போன்றவனே. தேவருடைய ''உப்புச்சாறு போலவன்று'' என்பது வியாக்கியானம். தேவர்களது அமுதத்துக்குக் கடல் கடையவேணும். வேறிடம் செல்லவேணும். என்னுடைய அமுதமோ

''கலிவயல் திருப்புளிங்குடியாய்''

செழித்த வயல்சூழ்ந்த திருப்புளிங்குடியிலேயே கிட்டக் கூடியது.

வடிவிணையில்லா மலர்மகள்

தன்வடிவிற்கு உவமையற்றவள். ஈடும் எடுப்புமில்லா அழகை உடையவள். தன் அழகுக்கு பகவத் தத்துவமும் ஒப்பில்லாதது என்று சொல்லத்தக்க அழகுபடைத்தவள் இலக்ஷ்மீதேவி.

''நம்பியைக் காண நங்கைக்கு
ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந்தோறும்
குரிசிற்கும் அன்னதேயாம்''

என்றல்லவா கம்பன் கூறினான்! பெருமாளைக் காணச் சீதாபிராட்டிக்கு ஆயிரம் கண்வேண்டும் என்றால், அத்துணை அழகாயிருந்தது பெருமாள் மணப்பந்தலுக் கெழுந்தருளும்

போதைய கோலம். திரும்பினர் கவி சீதை யைப் பார்த்தார். பெருமாள் அழகும் பின் னிடும்படியாயிருந்தது பிராட்டியின் சௌந் தர்யம். 'கொம்பினைக் காணும்தோறும் குரி சிற்கும் அன்னதே' என்றார். பிராட்டி அழகை அனுபவிக்க ஆயிரம் கண்மட்டும் போதாது. புதுப்புதிதாக ஆயிரம் ஆயிர மாகக் கண்கள் வேண்டும். ஒருதரம் பார்த் துப் பழகின கண் பழையதாய்ப் போக வேறு கண் தேவைப்படும் அளவுக்கிருக்கும் பிராட் டியின் அழகு என்றார்.

தன் அழகின் வெற்றி தோன்றப் பூக் களில் சிறந்த தாமரையை இடமாக உடைய இலக்ஷ்மி.

மற்றைநில மகள்

அதுபோன்று அழகுடையவள் என்று சொல்லலாம் படி அழகுடைய பூமிதேவி. பொன்னிற அழகிற் பொலியும் இலக்ஷ்மி போன்று நீனிற அழகிற் பொலியும் பூமிப் பிராட்டி.

பிடிக்கும் மெல்லடியை

தேவியர் இருவரும் அருகே திருவடியின் இருமருங்கிலுமிருந்து மெல்லப் பிடிக்கின்ற திருவடி. சாயன்மிக்க இருதேவிமாரும் மெல்லப்பிடிக்கும் திருவடி. அவர்களது மென்மையான தளிர்போன்ற கரங்கள் அழுந்தப் பிடித்தால் கன்றிவிடும் போன்று அவர்களும் கூசித் தொட வேண்டும்படியான மென்மையான பாதங்கள். அவ்வளவு நொய்ம்மையை இயல்பில் உடைய பாதங்கள்.

மாவலியை யிரந்து மூவடி மண்பெற்று ஓரடியால் உலகையும், மற்றொன்றால் விசும் பையும் காடும் ஓடையும் ஒழியாமல் அளந்து கொண்டு, மூன்றாமடியால் மாவலியைப் பாதளத்தழுத்தி மீண்டும் தன் வியூகத்தல மான பாற்கடலில் பள்ளி மேவினன் இறை வன். கணவன் கால்கள் படியெல்லாம் நீண்டு தாவியதால் அசைவுற்றிருக்கும் என்று கருதித் திருமகள் திருவடியருகிலிருந்து அதை மெல்லப் பிடித்தாளாம். உடனே சடக் கெனக் கை வாங்கினளாம். அவள் கை பட்டதும் குங்குமமாகச் சிவந்ததாம் பெரு மாள் திருவடி. அத்தனை ஸௌகுமார்யம் திருவடிகளுக்கு. கம்பர் அதனை எத்தனை ரஸனையோடு அனுபவிக்கிறார்!

> "உரியதிந் திரற்கென உலகம் ஈந்து போய்
> விரிதிரைப் பாற்கடல் பள்ளி மேவினன்
> கரியவன் உலகெலாம் கடந்த தாளிணை
> திருமகள் கரந்தொடச் சிவந்து காட்டிற்றே"

வசிட்ட சண்டாளரோடு வாயசிற, மலை யும் மரனும் மற்றும் பொருள்களும் தீண்டி யளக்கும்போது சிவக்கவில்லை திருவடி. அப் போது அவை ஒருசெயலை மேற்கொண்டமை யின், பின் பாற்கடலில் பள்ளிகொண்ட போது அத்திருவடிகள் தம் இயல்பான நிலை யைப் பெற்றன. திருமகள் தளிர்க்கரம் தீண்டவும் தாங்கப்பெறாது சிவந்தன.

அப்படிப்பட்ட நொய்ய திருவடிகளை

கொடுவினை யேனும்பிடிக்க

மஹாபாபியான அடியேனும் பிடிக்க. "அவர் களும் ஸந்நிஹிதராய், ப்ராப்தியும் உண்டா யிருக்க நான் இகழ்ந்திருப்பதே என்று பாவி யேன் என்பாரைப்போலே கொடுவினையேன் என்கிறார்" என்பது வியாக்கியானம்.

ஒருநாள்

ஒரு நாளாகிலும், அவர்கள் நெடுங் காலம் உன் திருவடி பிடிக்கிறார்கள். நானும் அவர்களோடொக்க 'நாரீணும் உத்தமா வதா:' என்றது போன்று உனக்கு நாயகி என்ற தசைக்கு யோக்யமாய்ப் பக்குவமா னேன் என்று நீதானே அருளினய், அப்படி யிருந்தும் ஒருநாளாவது அவர்பெற்ற பேறு பெறவருள வேண்டாமா.

கூவுதல் வருதல் செய்யாய்

ஒன்று என்னை அங்கே நீ பள்ளி கொண்ட விடத்தே நாகபர்யங்கத்தே கூவிக் கொள்ளவேணும். அல்லது இங்கே நான் உன் திருவடிகளைப் பிடிக்கும்படி ஸ‍ுலபனாக எழுந்தருளவேணும்.

(தொடரும்)

விருதுநகர்: சொக்கநாதசுவாமி கோயிலில் 21—9—60 முதல் 29—9—60 வரை நவராத்திரி கொலு உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சீபுரம்]

குட்டநாட்டுத் திருப்புலியூர்த் திருப்பதி யெம்பெருமானோடே ஆழ்வாராகிற தலைமகட்குப் புணர்ச்சி நேர்ந்து விட்டதாக அநுமானமாய்த் தெரிகின்றதென்று தாயாரிடம் தோழி தெரிவிப்பதாக அமைக்கப்பட்ட கருமாணிக்க மலைமேல் என்னும் பதிகத்தில் நான்கு செய்யுள்கள் முன்னிதழில் விளக்கப்பட்டன. ஐந்தாவது செய்யுள் முதலாக இனி விவரிக்கலாகிறது.

5. புனையிழைகளணிவும்

நம்மாழ்வாருடைய திருவாய்மொழிக்கு முதன் முதலாகத் தோன்றிய உரை திருக்குருகைப் பிரான் பிள்ளானென்னுமாசிரியர் அருளிச் செய்த ஆறுயிரப்படி யென்பது. அதில், இச்செய்யுளுக்கு ஸாரமாகவுரைத்தது இது காணீர்:—

"அவன் ஸௌந்தரிய சீலாதிகுணங்களை யுடையனானாலென்? வேறே யொருவனைத் தேடி அவனுக்குக் கொடுக்கக்கடவதாய்ச் செல்லா நின்ற பின்பு இனிச் செய்யலாவதில்லையென்று தாயார் சொல்ல, தோழியானவள் இயற்கையிற் புணர்ச்சியைச் சொல்லுகை ஈடன்றியேயிருக்கச் செய்தே இவளை இழக்கிறோம் என்னும் அச்சத்தாலே முன்னமே திருப்புலியூர் முனைவனான ஸர்வேச்வரன் இவளோடே புணர்ந்தருளினானென்கிறாள்" என்று.

தோழியானவள் தலைவியிடத்து மூன்று விசேஷங்களை யெடுத்துக் கூறி இவளுக்குத் திருப்புலியூர்ப் பெருமானோடு கலவி நேர்ந்திராவிடில் இங்ஙனே காணவொண்ணாதென்று தன்னுடைய அனுமானத்தைத் திடப்படுத்துகின்றாள். அம்மூன்று விசேஷங்களாவன:—

1. புனையிழைகளணிவும்

ஆபரணங்கள் நாம் பூட்டினபடியேயிருந்ததோ? அப்படியில்லையே. கலைத்துப் பூண்டபடி காணாநின்றதே.

2. ஆடையுடையும்

கூறையுடையும் நாமுடுத்தினபடி இல்லையே. முகத்தலை பார்த்து உடுத்ததாயோ இருக்கிறது? வேறுபாடு தெரியவில்லையா?

3. புதுக் கணிப்பும்

இவளது வடிவிலே பிறந்த புதுமைகள் தெரியவில்லையோ? இதற்கு முன்பு கோடையோடின பயிர்போலே யன்றோ இருந்தது! இப்போது நீர் பாய்ந்த வயல்போலே காண்கிறதில்லையோ?

நின்று நினைக்கப்புக்கால் நினையும் நீர்மையதன்று இவட்கு இது

எம்பெருமானுடைய படிகளையே நினைக்க முடியாதபோது அவன் திறத்து ஈடுபட்டாருடைய படிகள் நினைக்க முடியாவென்பது சொல்லவேணுமோ? நெஞ்சால் நினைப்பதால் வெண்ணெயூணென்னுமீனச் சொல்லே என்ற திருவாக்கிலேயே இப்பாசுரமும் வெளிவந்தபடி பாரீர்.

ஆக, புனையிழைகளணிவும் ஆடையுடையும் புதுக்கணிப்பும் பார்க்குமிடத்து திருப்புலியூரப்பன் திருவருட் கடலில் மூழ்கினவளே யிவளென்று நிலையிடத்தட்டில்லையென்றாளாயிற்று.

6. திருவருள் மூழ்கி வைகலும்

பராங்குச நாயகியாகிற இத்தலைவியின் அதரம் முன்பு இருந்தபடியும் இப்போதிருக்கிறபடியும் காணமாட்டீர்களோ? அதரத்தில் பழுப்புக்கு அடியறியமாட்டீர்களோ? திருப்புலியூர்ச் சோலைகளில் வளரும் கமுகம் பழத்தின் பழுப்புப்போலே யிராநின்றபடிபாரீர்; அவ்வூர்ப் பெருமான் தன்னுடைய அழகையும் எளிமையையும் காட்டி இவளை ஈடுபடுத்திக்கொண்டானென்பதற்கும், இவளுக்கு அவனோடு கலவி நேர்ந்துவிட்டதென்பதற்கும் அடையாளம் ஒன்றிரண்டல்லவே; நீங்களே நன்கு ஆராய்ந்து பார்க்கலாமேயென்கிறாள் தோழி.

வைகலும் திருவருள் மூழ்கி

திருப்புலியூர்ப் பெருமானுடைய திருவருட்கடலிலே இத்தலைவி மூழ்கப்பெற்றது இன்று நேற்று என்னலாயிருந்ததோ? நெடு நாளாகவேயன்றோ இவளுக்கு இத்தொடர்பு நேர்ந்து வருவது. அவனும் இவளைத் தன்னுடைய ஸௌந்தரிய ஸௌலப்பியங்களைக் காட்டியன்றோ அகப்படுத்திக்கொண்டது. அவனுடைய பற்றுதல் இவள் திறத்து ஒரு மடை செய்திருக்கைக்கு அடையாளம் செவ்வனே யுள.

இது நீ எப்படியறிந்தாயென்று கேட்கிறாயோ? சொல்லுகேன் கேளாய்.

மெல்லியல் செவ்விதழ் கமுகொண் பழத்தது

மெல்லியலாளான இப்பெண் பிள்ளையின் அதரமானது அழகிய கமுகம் பழம் போலேயிரா நின்றது; இது கொண்டு ஐயமற அறியலாயிரா நின்றதில்லையோ? என்றுளாயிற்று. இங்கு 'கமுகொண் பழத்தது' என்னுமல் "திருவருட் கமுகொண் பழத்தது" என்றதை நோக்கிப் பேராசிரியர்கள் பணித்திருப்பது பாரீர்; "திருவருட் கமுகென்று சிலவுண்டு; அதாவது, நீராலே வளருகையன்றிக்கே பெரிய பிராட்டியாரும் ஸர்வேச்வரனும் கடாக்ஷிக்க, அத்தால் வளருவன" என்பது ஈடு முப்பத்தாறுயிரப்படியருளிச் செயல்.

7. மெல்லிலைச் செல்வவண் கொடிப்புல்க

திருப்புலியூரிலுள்ள அஃறிணைப் பொருள்களுங்கூட ஒன்றோடொன்று கலந்து பரிமாறி வாழா நிற்கு மியல்வைக் கண்டு இத்தலைவியும் அத்திருப்பதியப்பனோடே கலந்து வாழப் பெற்றாளென்கிறாள் தோழி. இச்செய்யுளின் முதலடியில் கமுக மரத்திலே வெற்றிலைக் கொடி படர்ந்திருக்கையாகிற சேர்த்தி கூறப்பட்டது. கூரத்தாழ்வான் திருக்குமாரரான பட்டர் அருளிச் செய்த [ஸ்ரீரங்க நாச்சியார் துதியான] ஸ்ரீ குணரத்ன கோசத்தில் (ச்லோகம்-3.) "அநுகலதநுகாண்டாலிங்கன...." என்பதில் ஸ்ரீரங்கநாதனைக் கற்பகத் தருவாகவும் ஸ்ரீரங்க நாச்சியாரைக் கற்பகக் கொடியாகவும் உருவகப்படுத்திக் கூறியிருப்பது இங்கு நினைக்கத்தக்கது.

இதற்குமேல் தென்றலானது வாழைத் தோப்பிலே புகுந்து புறப்பட்டுத் தென்னந்தோப்பிலே வீசா நின்றதென்று சொல்லுகிற விதனால் இதுவுமொரு அழகிய கலவியென்று காட்டினபடி. ஆக இப்படிப்பட்ட வாய்ப்பு அமைந்த தலத்தில் இத்தலைவியும் தானுகந்த விஷயத்தை அணையப்பெற்றது வியப்பன்றே, ப்ராப்தமேயன்றோ என்றுளாயிற்று.

8. மடவரலன்னைமீர்கட்கு

திருப்புலியூரில் வைதிகச் சடங்குகள் மலிந்திருக்கு மழகைக் கண்டும் இவள் அவ்வூர்த் தலைவன் திறத்து ஈடுபாடு கொண்டாளென்கிறாள் தோழி. தாய்மார் தோழியை நோக்கி "இப்பெண் பிள்ளையை நாங்கள் உன் கையிலே காட்டிக் கொடுத்திருக்க. இவள் இங்ஙனே கை கழிந்து செல்லும்படி நீ எங்ஙனே விட்டிருந்தாய்?" என்று கேட்க; அதற்குத் தோழி விடை கூறுவதாகவும் அமைந்துளது இப்பாட்டு.

அன்னைமீர்கட்கு என் சொல்லிச் சொல்லுகேன்?

இவள் எனக்கு அடங்கியிருக்குமவள் என்பேனோ? இவளுடைய கள்ளச் செய்கைக்கு நானும் கூட்டாயிருந்தேனென்பேனோ? இவள் என்னை மீறிச் சென்றாளென்பேனோ? என்ன பர்சுரமிட்டுச் சொல்லுவேன்? எனக்கொன்றும் தெரிகிறதில்லையே! என்று கையை விரிக்கிறாள் தோழி.

மல்லைச் செல்வ வடமொழி மறைவாணர்

தமிழ் வேதத்திலே ஊன்றியிருக்கு மித்தலைவி வடமொழி வேதம் வல்லார் வாழுமிடத்திலே ஊற்றங்கொண்டாள். இங்குச் சில மருமங்கள் தெரிவிக்கலாகின்றன. ஆசாரிய ஹிருதயமென்னும் திவ்வியமான நூலிலே (42) "வடமொழி மறையென்றது தென்மொழி மறையை நினைத்திறே" என்பது ஒரு சூத்திரம். இதன் கருத்து என்னவென்றால்; மறை என்று வேதத்திற்குப் பெயர்; வேதம் ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ளதென்பது உலகமறிந்தது; ஆகவே, மறைவாணர் என்றாலே போதுமாயிருக்க 'வடமொழி மறை' என்றது தமிழ் வேதமுமுண்டென்று நினைத்தன்றோ? பிரதி கோடியில்லாதபோது இப்படி விசேஷிக்க வேண்டுவதில்லையே யென்கை.

(தொடரும்)

✳ செய்திகள் ✳

திருக்குற்றாலம்; திருக்குற்றாலநாத சுவாமி கோயிலில் ஐப்பசி விசுத்திருவிழா 8—10—60 முதல் 17—10—60 வரை சிறப்பாக நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

நாகப்பட்டினம்: சௌந்தரராஜப் பெருமாள் கோயிலிலுள்ள மணவாளமாமுனி களுக்கு திருவிழா 16—10—60 முதல் 25—10—60 வரை நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

திருநெல்வேலி: பாளையஞ்சாலை குமாரசுவாமி கோயிலில் கந்தசஷ்டித் திருவிழா 20-10-60 முதல் 30-10-60 வரை நடைபெற்றது. ஒவ்வொரு தினமும் கந்தபுராணமும் திருப்புகழ் பஜனையும் நடைபெற்றன.

✦ ✦ ✦ ✦

இராஜபாளையம்: மாயூரநாதசுவாமி கோயிலில் 27-10-60ல் சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் பன்னிரு திருமுறைக்கோயில் நிறுவுதல், உற்சவர் சந்நிதி முன்மண்டபம் கால்கோள்நிறுவுதல், மரம் நடுதல் ஆகிய விழாவை நடத்திக்கொடுத்தார்கள். சமயச் சொற்பொழிவும் இன்னிசையும் நடைபெற்றன.

✦ ✦ ✦ ✦

மாயூரம்: மாயூரநாதசுவாமி கோயிலில் துலா மகோற்சவம் 17-10-60 முதல் 19-11-60 வரை நடைபெறும்.

✦ ✦ ✦ ✦

எட்டிகுடி: சுப்பிரமணியசுவாமி கோயிலில் 24-10-60ல் கந்தசஷ்டி விழாவில் தருமை ஆதீனம் திரு. கோ. சிவஞானம் அவர்கள் "முருகன் அவதாரமும் சூரசம்ஹாரமும்" என்னும் பொருள்பற்றிச் சொற்பெருக்காற்றினார்கள்.

✦ ✦ ✦ ✦

வடுகபட்டி: கட்டாத்தீசுவரர்சுவாமி கோயில் முன்பு அமைந்திருந்த அலங்காரப் பந்தலுக்கு சென்னை மின்சாரத்துறை அமைச்சர் திரு. வி. இராமையா அவர்கள் வருகை தந்தார்கள். அவர்களுக்கு பூரணகும்பத்துடன் சிறந்த ஆலய வழிபாடும் நடத்தப் பெற்றது.

✦ ✦ ✦ ✦

பழனி: தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் கந்தசஷ்டித் திருவிழா 20-10-60 முதல் 26-10-60 வரை நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

சாத்தூர்: சிதம்பரேசுவரர் கோயிலில் 26-10-60 மண்டலாபிஷேக விழா நடைபெற்றது. அன்று சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்களால் பன்னிரு திருமுறைக்கோயில் நிறுவப்பெற்றது. அத்துடன் நூல் நிலையத்தையும் திறந்துவைத்தார்கள். மற்றும் அறுபத்துமூவர் மண்டப கால்கோள் விழாவை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் இலஞ்சி திரு. ஐ. ஏ. சிதம்பரம்பிள்ளை, எம்.ஏ., எம்.எல்.சி., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

✦ ✦ ✦ ✦

பெரம்பூர்: சுப்பிரமணியசுவாமி கோயிலில் கந்தசஷ்டித் திருவிழாவில் 21-10-60 முதல் 26-10-60 வரை இன்னிசையரங்குகள் நடைபெற்றன.

✦ ✦ ✦ ✦

தொட்டியம்: மதுர காளியம்மன் கோயிலில் 28—8—60ல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று 17-10-60ல் மண்டலாபிஷேகம் பூர்த்தி செய்யப்பெற்றது.

சென்னை பட்டணத்துச் சட்டம்

MADRAS ACT.

"The translation has not been authorised or accepted as authentic by the Government." Translation by Sri. A. S. GNANASAMBANDAM, Translation Dept.

(முன் தொடர்ச்சி)

அவர்களுடைய சம்பளங்கள், வர்த்தனைகள், பென்ஷன்கள், இதர உத்தியோகங்களும், மாநிலத்தின் ஒருங்கு திரட்டப்பட்ட நிதியிலிருந்து கொடுக்கப்படவேண்டும். பிராந்தியக் குழுக்களுக்கு ஏற்பட்ட 93-வது பிரிவில் குறிப்பிட்டுள்ளவை யல்லாத மற்ற மதிப்புகளும், கட்டணங்களும், செலவுகளும், மத ஸ்தாபனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கான செலவுகளும்கூட மாநிலத்தின் ஒருங்கு திரட்டப்பட்ட நிதியிலிருந்து கொடுக்கப்படவேண்டும்.

(2) (a) (1) உட்பிரிவின்படி அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்ட தொகைகளை, ஆணையர், சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்புப் பரிபாலன நிதியிலிருந்து அரசாங்கத்தாருக்குத் திருப்பிச் செலுத்தவேண்டும்.

(b) அற நிலையங்களின் நிர்வாக அலுவலர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஊதியம், படிகள், பென்ஷன், இதர சம்பளம் ஆகியவற்றை ஆணையர் சம்பந்தப்பட்ட அற நிலையங்களிலிருந்து வசூலித்து, அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகையை (a) பகுதியில் சொல்லப்பட்ட நிதிக்கு வரவு வைக்கவேண்டும்.

(c) (i) இச்சட்டத்தின் தொடக்கத்திற்கு அடுத்து முன்பு பணிபுரிந்து அத்தேதியன்றோ அதற்குப் பிறகோ வேலையிலிருந்து ஓய்வு பெறுகிற நிர்வாக அலுவலருக்குக் கொடுக்கப்படத்தக்க பென்ஷன் அல்லது இதர ஊதியத்தின் காரியத்திற்காக, அரசாங்கத்தார் நிர்ணயிக்கப்படக்கூடிய நிபந்தனைகளுக்குட்பட்டு ஷெ அலுவலரின் சேவையை ஷெ தேதிக்கு முன்பிருந்து கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

(ii) இச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன், (i) சொல்லப்பட்டுள்ள நிர்வாக அலுவலரின் சேவைக்காகக் கொடுக்கப்படத்தக்க பென்ஷன் அல்லது இதர ஊதியத்தின் பகுதியைக் கூட ஆணையர், சம்பந்தப்பட்ட மத ஸ்தாபனங்களிலிருந்து வசூலிக்கலாம்.

13. **துணை ஆணையர்களுக்கு அதிகாரம் முதலியவற்றைப் பிரித்துக் கொடுப்பது.**—(1) துணை ஆணையர்கள் ஒருவருக்கு மேற்பட்டவர்களாயிருந்தால் இச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படியாவது துணை ஆணையர் என்னும் முறைமையில் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களையும் விதிக்கப்பட்டிருக்கிற கடமைகளையும் ஒரு துணை ஆணையர் எந்தப் பிரதேசத்துக்குள் முறையே செலுத்த வேண்டும் அல்லது செய்யவேண்டுமென்பதை, அரசாங்கத்தாரின் சம்மதத்தை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, ஆணையர் குறிப்பிடவேண்டும்.

(2) இந்த மாநிலத்திலுள்ள யாதொரு பிரதேச விஷயமாய் அல்லது யாதொரு வகை அல்லது தொகுதியைச் சேர்ந்த நிலையங்கள் விஷயமாய் அல்லது அதிலிருக்கிற ஒரு பிரதேச விஷயமாய் (உதவி ஆணையர் ஒருவருக்கு உள்ளவையும் 14-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட விலக்கு நிபந்தனையின்படி ஆணையரால் செலுத்தப்படக்கூடியவையுமான அதிகாரங்களும் கடமைகளும் உட்பட ஆனால் 21, 22, 46, 47, 59, 69, 72 பிரிவுகள் அல்லது 92-வது பிரிவின் (2) உட்பிரிவு ஆகியவற்றின்படி ஆணையருக்குள்ள அதிகாரங்களும் கடமைகளும் நீங்கலாக) இச்சட்டத்தின்படியாவது

அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் படியாவது ஆணையருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களில் அல்லது விதிக்கப்பட்டிருக்கிற கடமைகளில் எதையாகிலும் அவர், பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாய் அரசாங்கத்தார் ஏற்படுத்தக்கூடிய வரையறைகளுக்கும் மேல் விசாரணைக்கும் உட்பட்டும், பிரித்துக் கொடுப்பதற்கான உத்தரவில் குறிப்பிடக்கூடிய நிர்ப்பந்தங்களும் திட்டங்களும் எவையேனுமிருந்தால் அவைகளுக்குங்கூட உட்பட்டும், துணை ஆணையர் ஒருவருக்குப் பிரித்துக் கொடுக்கலாம்.

14. உதவி ஆணையர்களுக்குரிய பிரதேச விசாரணை அதிகாரமும் அதிகாரங்களும் கடமைகளும்.—(1) ஆணையர் அரசாங்கத்தாரின் அங்கீகாரத்தை முன்னதாகப் பெற்றுக் கொண்டு, இந்த மாநிலத்தை டிவிஷன்களாகப் பிரிக்கவேண்டும்; ஒவ்வொரு டிவிஷனும் ஒரு உதவி ஆணையரின் பொறுப்பிலிருக்கவேண்டும்.

(2) யாதொரு உதவி ஆணையர் தமது டிவிஷன் விஷயமாய் இச்சட்டத்திலாவது அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின்படியாவது தமக்குக் கொடுக்கப்படுகிற அதிகாரங்களைச் செலுத்தவும், விதிக்கப்பட்டிருக்கிற கடமைகளைச் செய்யவும் வேண்டும்;

ஆனால், ஆணையர் எழுத்துமூலமான உத்தரவினால் ஷெ சகல அதிகாரங்களும் கடமைகளுமாவது அவைகளில் யாதொன்றாவது ஷெ உத்தரவில் குறிப்பிடக்கூடிய விலக்குகளுக்கும், வரையறைகளுக்கும், திட்டங்களுக்கும் உட்பட்டுச் செலுத்தப்பட வேண்டுமென்றும் செய்யப்படவேண்டுமென்றும் பிரசித்தம் செய்யலாம்; அப்படி விலக்கப்பட்ட யாதொரு அதிகாரத்தையாவது கடமையையாவது அவர் தாமே செலுத்தலாம் அல்லது செய்யலாம்.

(3) யாதொரு உதவி ஆணையருடைய டிவிஷன் சம்பந்தமாய் அல்லது அந்த டிவிஷனிலுள்ள எவையேனும் நிலையங்கள் அல்லது யாதொரு வகை அல்லது தொகுதியைச் சேர்ந்த ஸ்தாபனங்கள் சம்பந்தமாய் 21, 22, 46, 47, 59, 69, 72-வது பிரிவுகள் அல்லது 92-வது பிரிவின் (2) உட்பிரிவு ஆகியவைகளில் குறிப்பிட்டிருக்கிற அதிகாரங்களும் கடமைகளுமல்லாமல் இச்சட்டத்தின்படியாவது அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின்படியாவது ஆணையருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற (வேறு) அதிகாரங்களிலாவது விதிக்கப்பட்டிருக்கிற (வேறு) கடமையிலாவது யாதொன்றை ஆணையர், பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாக அரசாங்கத்தார் ஏற்படுத்தக்கூடிய வரையறைகளுக்கும் மேல் விசாரணைக்கும் உட்பட்டும், பிரித்துக் கொடுப்பதற்கான அதிகாரத்தில் குறிப்பிடக்கூடிய நிர்ப்பந்தகளுக்கும் திட்டங்களுக்குங்கூட உட்பட்டும், அந்த உதவிக் கமிஷனருக்குப் பிரித்துக் கொடுக்கலாம்.

15. பிராந்தியக் குழுக்கள்.—(1) அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக,—

(a) யாதொரு உதவி ஆணையருடைய டிவிஷனிலே அல்லது அதன் பாகத்திலே 46-வது பிரிவின்படிப் பிரசுரிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிற கோயில்களல்லாத வேறு சகல கோயில்களுக்காகவும் பிராந்தியக் குழு ஒன்றை அமைக்க வேண்டும்;

(b) யாதொரு பிராந்தியக் குழுவின் அங்கத்தினர்களின் எண்ணிக்கையை அல்லது விசாரணை அதிகாரத்தை மாற்றலாம்; அல்லது

(c) யாதொரு பிராந்தியக் குழுவை நீக்கிவிடலாம்:

ஆனால் (b) பகுதி அல்லது (c) பகுதியின்படிக்கான ஒரு விளம்பரம் பிரசுரிக்கப்படுவதற்கு முன்னால், அரசாங்கத்தார் ஆணையருக்கும், சம்பந்தப்பட்ட பிராந்தியக் குழுவுக்கும், அவர்கள் அவ்வாறு செய்ய உத்தேசிப்பதற்கான காரணங்களைத் தெரியப்படுத்தி, ஆணையருக்கோ அல்லது பிரதேசக் கமிட்டிக்கோ ஷெ உத்தேசத்திற்கு எதிரான காரணம் காட்ட ஒரு நியாயமான அளவை நிச்சயித்து அவர்களுடைய எவையேனும் ஆலோசனைகளையும் ஆட்சேபனைகளையும் ஆலோசிக்கவேண்டும்.

(2) ஒரு பிராந்தியக் குழு, அடியிற் கண்டவை சம்பந்தமாக, இச்சட்டத்தின்படி

அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின்படி தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைச் செலுத்தவும் விதிக்கப்பட்டிருக்கும் கடமைகளை நிறைவேற்றவும் வேண்டும்:—

(i) எக்கோயில்களுக்காக அது அமைக்கப்பட்டிருக்கிறதோ அக்கோயில்களின்;

(ii) 46-வது பிரிவின்படிப் பிரசுரிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிற குறிப்பிட்ட கட்டளைகளாயிராமல் ஷெ கோயில்களை சேர்ந்த குறிப்பிட்ட கட்டளைகள்;

(iii) இச் சட்டத்தின் ஷரத்துக்கள் 3-வது பிரிவின்படி எந்த அறக் கட்டளைகளுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதோ அந்த அறக் கட்டளை ஏற்பாடுகள்;

ஆனால், குறிப்பிட்ட யாதொரு கட்டளை இரண்டு அல்லது பல பிராந்தியக் குழுக்களின் விசாரணை அதிகாரத்துக்குள் அடங்கியிருக்கிற இரண்டு அல்லது பல கோயில்களுடன் சேர்க்கப்பட்டிருந்தால், அல்லது இச் சட்டத்தின் ஷரத்துக்கள் 3-வது பிரிவின்படி விஸ்தரிக்கப்பட்டிருக்கிற ஒரு அறக் கட்டளை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்தியக் குழுவின் விசாரணை அதிகாரத்துக்குள் சொத்துக்களை உடையதாயிருந்தால், ஆணையர் அந்தப் பிராந்தியக் குழுக்களில் எது ஷெ குறிப்பிட்ட கட்டளை அல்லது அறக்கட்டளை விஷயமாய் அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் வேண்டுமென்பதை ஆணையர் தீர்மானிக்கவேண்டும்;

மேலும், குறிப்பிட்ட ஒரு கட்டளை சிறிதுமட்டும் 46-வது பிரிவின்படிப் பிரசுரிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிற ஒரு கோயிலுடனும் அல்லது பல கோயில்களுடனும் சிறிது மட்டும் அவ்வாறு சேர்க்கப்பட்டிராத ஒரு கோயிலுடனும் அல்லது பல கோயில்களுடனும் சேர்ந்திருந்தால், குறிப்பிட்ட அந்தக் கட்டளை விஷயமாக, ஆணையர் மாத்திரமே அதிகாரங்களைச் செலுத்தவும், கடமைகளை நிறைவேற்றவும் வேண்டும்;

16. பிராந்தியக்குழுக்களில் இருக்கவேண்டிய அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையும், அவர்களுடைய உத்தியோகக் கால அளவும், தகுதிக் குறைவுகளும்.—(1) மூன்று பேருக்குக் குறையாமலும் ஐந்து பேருக்கு மேற்படாமலும் அரசாங்கத்தாரால் நியமிக்கப்படக்கூடிய எண்ணிக்கையுள்ள அங்கத்தினர்கள் பிராந்தியக்குழு ஒவ்வொன்றிலும் இருக்கவேண்டும்.

(2) இப்பிரிவில் வேறுவிதமாக வெளிப்படையாய் ஏற்பாடு செய்திருப்பது போக மற்றப்படி, யாதொரு பிராந்தியக் குழுவின் ஒரு அங்கத்தினரானவர் தமது நியமனம் செயின் ஜார்ஜ் கோட்டை கெஜட்டில் அறிக்கையிடப்படுகிற தேதியிலிருந்து மூன்று ஆண்டு கால உத்தியோகம் வகிக்கப் பாத்தியதையுடையவராவர்:

ஆனால், இச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று பதவி வகிக்கும் யாதொரு அங்கத்தினர் அரசாங்கத்தார் அது விஷயமாக குறிப்பிடக் கூடிய அத்தகைய தேதி வரைக்கும் தொடர்ந்து பதவி வகித்து வர வேண்டும்.

(3) யாதொருவர்—

(a) அவர் இந்து மதத்தைத் தழுவாமலிருந்தால்;

(b) 25 வயதுக்குக் குறைந்தவராகவும் 70 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருந்தால்;

(c) தாம் கடன் தீர்க்கச் சக்தியற்றவரென்று அறிவிக்கப்படாமலிருந்தால்;

(d) அவர் சித்தசுவாதீனமற்றவராயிருந்தால் அல்லது அவரை ஒரு பிரதேசக் கமிட்டி அங்கத்தினரின் அலுவல்களை நடத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் தகுதியற்றவராக்குகிற பைத்தியம் அல்லது அங்கஹீனம் முதலியவற்றை உடையவராயிருந்தால் அல்லது அவருக்குத் தொழு நோய் அல்லது அருவருக்கத்தக்க யாதொரு வியாதியை உடையவராயிருந்தால்;

(e) அவர் எந்த அறநிலையம் அல்லது எந்தக் கட்டளை விஷயமாய்ப் பிரஸ்தாப பிராந்தியக் குழு அதிகாரங்களைச் செலுத்தவும், கடமைகளை நிறைவேற்றவும் செய்

கிறதோ அந்த அறநிலையம் அல்லது கட்டளைக்கு அவர் தர்மகர்த்தாவாயிருந்தால் அல்லது அதைச் சேர்ந்த ஓர் அதிகாரியாக அல்லது ஊழியக்காரராக அல்லது அதிலிருந்து யாதொரு ஊதியம் அல்லது ஆதாயம் பெறுபவராக இருந்தால் அல்லது அவர் அவிபக்த இந்து குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவராயிருந்து அதிலுள்ள ஒருவர் அப்படிப் பட்ட ஒரு தர்மகர்த்தாவாகவோ, அதிகாரியாகவோ அல்லது அத்தகைய யாதொரு ஊதியம் அல்லது ஆதாயத்தைப் பெறுபவராகவோ இருந்தால்;

(f) அவர் ஒரு பிராந்தியக்குழு எந்த அறநிலையம் அல்லது குறிப்பிட்ட கட்டளை விஷயமாய் அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் செய்கிறதோ அந்த அறநிலையம் அல்லது குறிப்பிட்ட கட்டளையின் யாதொரு சொத்தின் செலாவணியிலிருக்கிற குத்தகை அல்லது செய்து கொண்ட யாதொரு ஒப்பந்தம் அல்லது அவற்றிற்காகச் செய்து கொண்டிருக்கிற வேலையின் பாத்தியதை கொண்டிருந்தால் அல்லது அத்தகைய அறநிலையத்துக்கு அல்லது குறிப்பிட்ட கட்டளைக்குச் சேரவேண்டிய யாதொரு வகையான பாக்கி நிலுவையாயிருந்தால்;

(g) அவர் ஒரு பிராந்தியக்குழு எந்த அறநிலையம் அல்லது கட்டளை விஷயமாய் அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் செய்கிறதோ அந்த அறநிலையம் அல்லது கட்டளையின் சார்பாக ஊதியம் பெறும் வழக்கறிஞராக அமர்த்திக் கொள்ளப்பட்டிருந்தால்;

(h) ஒழுக்கக்கேட்டுக்குச் சம்பந்தப் பட்ட யாதொரு குற்றத்திற்காக ஒரு கிரிமினல் கோர்ட்டாரால் தண்டிக்கப்பெற்று ஷை தண்டனை மாற்றப் படாமலோ அல்லது குற்றம் மன்னிக்கப்படாமலோ இருந்தால்;

(i) ஏற்கனவே வேறு யாதொரு பிராந்தியக்குழுவில் ஒரு அங்கத்தினராயிருந்தால்;

(j) பிராந்தியக் குழு எந்த நிலையம் சம்பந்தமாய் அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் செய்கிறதோ அதன் பற்று சம்பந்தமாக விரோதமாகச் செயலாற்றினால்; ஒரு பிராந்தியக் குழுவின் அங்கத்தினராக நியமிக்கப்படுவதற்கும் அங்கத்தினராக இருப்பதற்கும் யோக்கியதை அற்றவராவார்.

(4) ஒரு பிராந்தியக் குழுவின் அங்கத்தினர் ஒருவர்—

(a) (3) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள எவையேனும் யோக்கியதைக் குறைவுகளுக்கு உட்பட்டாலும் அல்லது,

(b) அரசாங்கத்தாருக்கு எழுதியுள்ள அறிக்கை கொடுப்பது மூலமாகத் தமது உத்தியோகத்தை ராஜினமாச் செய்தாலும்,

அவர் உத்தியோகம் வகிப்பது நின்று போகும்.

(5) ஒரு பிராந்தியக் குழுவின் அங்கத்தினர் ஒருவர் இரண்டு மாதகால அளவுக்குள் அக்குழுவின் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு வராவிட்டால் அவர் உத்தியோகம் வகிப்பது நின்று போகும்;

ஆனல், ஒருவர் அவ்வாறு கூட்டங்களுக்கு வராமல் நின்றுபோனதன் காரணமாக ஓர் அங்கத்தினராயிராமற் போய்விட்டிருந்து, அவர் ஷை மூன்று தொடர்ச்சியான கூட்டங்களில் கடைசி கூட்டத்தின் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் தம்மை மீண்டும் அங்கத்தினராக்கும்படி விண்ணப்பம் செய்து கொண்டால், ஷை குழுவினர், அவ் விண்ணப்பம் வந்துசேர்ந்த பிறகு நடைபெறுகிற அடுத்த கூட்டத்திலே, அங்கத்தினர் பதவியை அவர் மீண்டும் வகிக்கும்படிச் செய்யலாம்; ஆனல், அங்கத்தினரொருவர் தமது உத்தியோகக் கால அளவில் இரண்டு தடவைக்கு மேற்பட்டு அவ்வாறு மீண்டும் அங்கத்தினராக்கப்படக் கூடாது.

விளக்கம்.—க்வோரம் (நிர்வாகச் சிற்றெண்) இல்லாததால் ஒத்திவைக்கப்பட்ட ஒரு கூட்டமானது, இவ்வுட்பகுதியின் காரியத்துக்காக ஒரு கூட்டம் எனக் கருதப் படவேண்டும்; அல்லது,

(6) ஒரு பிராந்தியக் குழுவின் அங்கத்தினர் ஒருவர் (3) உட்பிரிவில் சொல்லப் பட்ட யாதொரு தகுதிக் குறைவுகளையுடையவராயிருக்கிருரா என்ற பிரச்சினை எழுந்தால், ஷை பிரச்சினை துணை ஆணையரின் தீர்

மானத்திற்கு விடப்படும்; அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

17. *(1)* **பிராந்தீயக் குழுவின் செயலாளர்.**—எந்த டிவிஷனுக்காக அல்லது அதன் எந்தப்பாகத்திற்காகப் பிராந்தியக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறதோ அந்த டிவிஷனின் உதவி ஆணையர் அதன் செயலாளராவார்.

(2) பிராந்தீயக்குழுவின் செயலாளருக்கு பிராந்தியக் குழுவின் விவாதங்களில் பங்கு எடுத்துக்கொள்ள உரிமையுண்டு; ஆனால் அவருக்கு அக்குழுவின் கூட்டத்தில் வாக்குப்போட உரிமையில்லை.

(3) குழுவின் ஒவ்வொரு கூட்டமும் தலைவரால் தலைமை வகிக்கப்படவேண்டும்; ஒவ்வொரு கூட்டத்தின் சகல பிரச்சினைகளும் கூட்டத்தில் வந்திருக்கும் அங்கத்தினர்களில் பெரும்பான்மையோரின் வாக்கெடுப்பினால் தீர்மானிக்கப்படவேண்டும். வாக்குகள் சமமாயிருக்கும் பட்சத்தில், அக்கிராசனருக்கு இருக்கும் இரண்டாவது அல்லது நிர்ணய வாக்கை அவர் போடவேண்டும்.

(4) செயலாளர் துணை ஆணையர் மூலமாக பிராந்தியக் குழுவின் கூட்டம், ஒவ்வொன்றினுடைய நடவடிக்கைக் குறிப்புகளின் பிரதி ஒன்றை அக்கூட்டத்தின் தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள் ஆணையருக்கு அனுப்பவேண்டும்; மேலும் அவர் துணை ஆணையர் மூலமாக பிராந்தியக் குழுவின் நடவடிக்கைகளின் யாதொரு இனத்தின் சம்பந்தமாக அவருடைய சொந்த நோக்கங்களை ஆணையரின் கவனத்துக்குக்கொண்டு வந்து அவர் அவசியமெனக் கருதக்கூடிய அத்தகைய நடவடிக்கையைப்பற்றி ஆலோசனை கூறலாம்.

18. **விதிகள் செய்ய அரசாங்கத்தாருக்குள்ள அதிகாரம்.**—பிராந்தியக் குழுக்களின் கூட்டங்களைக் கூட்டுவது, அக் கூட்டங்களுக்குரிய நிர்வாகச் சிற்றெண் (க்வோரம்), அக் கூட்டங்களில் வேலை நடந்தேறுவது ஆகிய இவைகளைப்பற்றியும் அக் கமிட்டிகளின் காரியம் நடப்பது சம்பந்தமான சகல விஷயங்களைப்பற்றியும் அரசாங்கத்தார் விதிகள் செய்யலாம்.

19. **பிராந்தீயக்குழுவின் காரியம் கிரமப்பிசகு காரணமாகச் சட்ட சம்மதமற்றதாய் விடாதென்பது.**—யாதொரு பிராந்தீயக் குழுவின் அமைப்பில் ஒரு குறைபாடு இருந்ததனால் மாத்திரமே அல்லது அதன் தலைவரோ யாதொரு அங்கத்தினரோ தமது உத்தியோகத்தை வகிக்கத் தகுதியற்றவராயிருந்தாரென்னும் அல்லது அவ்வுத்தியோகத்தை வகித்து வராமற் போய்விட்டாரென்னும் ஏதுவினால் மாத்திரமே அல்லது தலைவர் அல்லது டிடி குழுவைச் சேர்ந்த யாதொரு அங்கத்தினரின் உத்தியோகமதில் ஒரு காலி இடம் ஏற்பட்டிருந்த காலத்தில் பிராந்தீயக் குழுவின் ஒரு காரியம் செய்யப்பட்டதென்னும் காரணத்தினால் மாத்திரமே அக்காரியம் சட்ட சம்மதமற்றதாய் விட்டதாகக் கருதப்படமாட்டாது.

20. **பிராந்தீயக்குழு எடுத்துவிடப்படுவதன்பேரில் அதன் அலுவல்களைச் செய்வது.**—15-வது பிரிவைச் சேர்ந்த *(1)* உட்பிரிவில் கண்ட (c)—பகுதியின்படிப் பிராந்தியக் குழு ஒன்று எடுத்துவிடப்பட்டிருந்தால் அது எடுத்துவிடப்பட்டதிலிருந்து ஆறு மாதங்களுக்குள் புதிய பிராந்தீயக்குழு ஒன்றை அமைக்கவேண்டும்; அதுவரையில், அதனுடைய அதிகாரங்களையும் கடமைகளையும் சம்பந்தப்பட்ட உதவி ஆணையர் செலுத்தவும் செய்யவும் வேண்டும்.

21. **தஸ்தாவேஜுகளை வரவழைக்கவும் உத்தரவுகள் பிறப்பிக்கவும் ஆணையருக்குள்ள அதிகாரம்.**—*(1)* ஆணையர் எந்த நடவடிக்கை சம்பந்தமாய் வழக்குத் தொடரலாமென்று அல்லது ஒரு கோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொள்ளலாமென்று இச் சட்டத்தில் நிபந்தனை கண்டிருக்கிறதோ அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையாயிராமல், இச் சட்டத்தின் படிக்கான வேறு யாதொரு நடவடிக்கை கிரமமானதுதான் அல்லது அதில் பிறப்பிக்கப்பட்ட யாதொரு தீர்ப்பு அல்லது உத்தரவு சரியானதுதான் அல்லது சட்ட ரீதியானது தான் அல்லது நியாயமானதுதான் என்று தாம் சந்தேகமறத் தெரிந்துகொள்ளும் பொருட்டு, அந்த நடவடிக்கை விஷயமாய் யாதொரு பிராந்தீயக்குழுவின் துணை அல்லது உதவி ஆணையருடைய அல்லது ஒரு அறநிலையத்தின் யாதொரு தர்மகர்த்தா

வுடைய தஸ்தவேஜை வரவழைத்துப் பரிசீலனை செய்யலாம்.

(2) அப்படிப்பட்ட யாதொரு தீர்ப்பு அல்லது உத்தரவு துணை அல்லது உதவி ஆணையர் ஒருவரால் மடம். அல்லது ஒரு மடத்தோடு இணைக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கட்டளை, 46-வது பிரிவின்படிப் பிரசுரிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள அறநிலையமல்லாத வேறொரு நிலையத்தின் தர்மகர்த்தாவால் பிறப்பிக்கப்பட்டிருந்து, அத் தீர்ப்பையேனும் உத்தரவையேனும் மாற்றவேண்டுமென்றோ ரத்து செய்யவேண்டுமென்றோ நிராகரிக்க வேண்டுமென்றோ புனராலோசனைக்காகத் திருப்பி அனுப்பவேண்டுமென்றோ ஆணையர் கருதினால் அவர் அந்தப்பிரகாரமே உத்தரவு பிறப்பிக்கலாம்.

(3) (a) யாதொரு பிராந்தியக்குழுவால் அல்லது 46-வது பிரிவின்படிப் பிரசுரிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிற யாதொரு அறநிலையத்தின் தர்மகர்த்தாவால் அப்படிப்பட்ட ஒருதீர்ப்பு அல்லது உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தால், ஆணையர் தமக்குத் தகுதியாகத் தோன்றுகிற பட்சத்திலே, ஷை தீர்ப்பு அல்லது உத்தரவைப்பற்றி புனராலோசனை செய்வதற்காக ஷை விஷயம் சம்பந்தமாய் தமது அபிப்பிராயங்கள் சகிதமாக அவ் விஷயத்தை ஷை குழு அல்லது தர்மகர்த்தாவுக்குத் திரும்ப அனுப்பி, அது சங்கதியை ஆணையரால் இது விஷயமாக குறிப்பிடப்படும் காலத்துக்குள் அவருக்கு ரிப்போர்ட் செய்யலாம்.

(b) அப்படிப்பட்ட ரிப்போர்ட் வந்து சேர்ந்து அதைப்பற்றி ஆலோசனை செய்த பிறகு, ஆணையர் சந்தர்ப்பத்துக்கேற்றபடி அத் தீர்ப்பு அல்லது உத்தரவையாகிலும் மேற்சொன்னவாறு புனராலோசனை செய்த பிறகு மாற்றப்பட்டபடியுள்ள தீர்ப்பு அல்லது உத்தரவையாகிலும் மாற்றலாம், ரத்து செய்யலாம் அல்லது நிராகரிக்கலாம்.

(c) ஷை ரிப்போர்ட்டானது குறிப்பிடப்பட்ட காலத்துக்குள் அல்லது அதற்கு மேற்பட்டு ஆணையரால் அனுமதிக்கப்படக் கூடிய காலத்துக்குள் அவரிடம் வந்து சேரா விட்டால், ஆணையரானவர் சந்தர்ப்பத்துக்கேற்றபடி பிரஸ்தாப பிராந்தியக்குழுவின் அல்லது தர்மகர்த்தாவின் தீர்ப்பு அல்லது உத்தரவை மாற்றலாம், ரத்து செய்யலாம் அல்லது நிராகரிக்கலாம்.

(4) (a) இச்சட்டத்தின்படிக்கான (எந்த நடவடிக்கை சம்பந்தமாக இச்சட்டத்தில் வழக்கு அல்லது அப்பீலுக்கு ஏற்பாடு செய்யப்படவில்லையோ அத்தகைய நடவடிக்கையல்லாத) யாதொரு நடவடிக்கை சம்பந்தமாக, ஒரு மடம் அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கட்டளையின் யாதொரு தர்மகர்த்தாவுடைய ரெக்கார்டை அதில் பிறப்பிக்கப்பட்டுள்ள யாதொரு தீர்ப்பு அல்லது உத்தரவு சட்ட சம்மதமானதா எனச் சந்தேகமறத் தெரிந்து கொள்வதற்கு ஆணையர் வரவழைத்துப் பரிசீலனை செய்யலாம்.

(b) ஒரு மடம் அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கட்டளையின் தர்மகர்த்தாவால் சட்ட சம்மதமில்லாமல் யாதொரு தீர்மானம் அல்லது உத்தரவு, பிறப்பிக்கப்பட்டு, ஷை தீர்மானம் அல்லது உத்தரவு மாற்றப்படவேண்டும், ரத்து செய்யப்படவேண்டும், நிராகரிக்கப்படவேண்டும் அல்லது மீண்டும் ஆலோசனைக்காக அனுப்பப்பட வேண்டுமென ஆணையருக்குத் தோன்றினால் அவர் அவ்வாறே உத்தரவு பிறப்பிக்கலாம்.

(5) ஆணையர் யாதொரு கட்சிக்காரர் சொல்லிக்கொள்வதைக் கேட்காமல் அல்லது அவர் சொல்லிக்கொள்ள வேண்டியவற்றைச் சொல்லிக்கொள்ள அவருக்கு நியாயமான அவகாசம் ஏற்படுத்திக்கொடுக்காமல், (2) உட்பிரிவின்படியாவது (3) உட்பிரிவில் கண்ட (b) பகுதியின்படியாவது (c) பகுதியின்படியாவது அவருக்கு விரோதமாக எந்த உத்தரவையும் பிறப்பிக்கக்கூடாது.

(6) ஆணையர் (1) உட்பிரிவில் அல்லது (4) உட்பிரிவின் (a) பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிற தன்மையுள்ள யாதொரு தீர்ப்பு அல்லது உத்தரவு விஷயமாய் (2) உட்பிரிவின்படியாவது (3) உட்பிரிவின்படியாவது (4) உட்பிரிவின் (b) பகுதியின்படியாவது தமக்குள்ள அதிகாரங்களைச் செலுத்துகிறவரையில் அத்தீர்ப்பு அல்லது

உத்தரவு நிறைவேற்றப்படுவதை நிறுத்தி வைக்கலாம்.

(7) இப் பிரிவின்படித் தமக்குள்ள அதிகாரங்களைச் செலுத்துவதற்காக ஆணையருக்கு அனுப்பப்படுகிற ஒவ்வொரு விண்ணப்பமும், சம்பந்தப்பட்ட விண்ணப்பம் விஷயமான உத்தரவு அல்லது நடவடிக்கை விண்ணப்பதாரருக்கு அனுப்பப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் கொடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

22. **ஆணையருக்குள்ள இதர அதிகாரங்கள்.**—(1) ஆணையர் எந்தத் தசையிலாகிலும்—

(a) ஒரு துணை அல்லது உதவி ஆணையருக்குமுன் பைசலாகாமல் நடந்துகொண்டிருக்கிற யாதொரு நடவடிக்கையைத் தமது சொந்தக் கட்டுக்கு மாற்றிக்கொண்டு அதைத் தானே பைசல் செய்யவோ,

(b) பைசல் செய்யப்படுவதற்காக அதை மற்றொரு துணை அல்லது உதவி ஆணையருக்கு மாற்றவோ
அதிகாரமுடையவராவார்.

(2) ஒரு துணை அல்லது உதவி ஆணையர் செலுத்தியிருக்க வேண்டிய அல்லது செய்திருக்கவேண்டிய யாதொரு அதிகாரத்தை அவர் செலுத்தவோ அல்லது யாதொரு கடமையை அவர் செய்யவோ தவறிவிட்டிருக்கிறாரென்று ஆணையர் சந்தேகமறத் தெரிந்துகொண்டால், மேற்படி ஆணையர் தாமே அவ்வதிகாரத்தைச் செலுத்தலாம் அல்லது அந்தக் கடமையைச் செய்யலாம்.

(3) ஒரு பிராந்தியக் கமிட்டியார்—

(a) அவர்கள் செலுத்தியிருக்கவேண்டிய அல்லது செய்திருக்க வேண்டிய யாதொரு அதிகாரத்தைச் செலுத்தவோ, யாதொரு அலுவலைச் செய்யவோ தவறிவிட்டிருக்கிறார்களென்றாவது,

(b) எக் காரணத்தினாலேனும் யாதொரு அதிகாரத்தைச் செலுத்தவோ, யாதொரு கடமையைச் செய்யவோ முடியாதவர்களாயிருக்கிறார்களென்றாவது

ஆணையர் சந்தேகமறத் தெரிந்துகொண்டால், அவர் தாமே அவ் வதிகாரத்தைச் செலுத்தலாம் அல்லது அந்தக் கடமையைச் செய்யலாம் அல்லது அவ்வாறு செலுத்த அல்லது செய்ய உதவி ஆணையருக்கு அனுமதி கொடுக்கலாம்:

ஆனால், (a) பகுதியின்கீழ் வரும் விஷயங்களில், ஆணையர் அந்தப் பிராந்தியக் குழுவினர் மேற்படி அதிகாரத்தைச் செலுத்துவதற்காக அல்லது மேற்படி கடமையை நிறைவேற்றுவதற்காக முதலில் ஒரு கால அளவை நிச்சயிக்க வேண்டும்; மேலும் அவர் அவ்வாறு நிச்சயிக்கப்பட்ட கால அளவுக்குள் அந்தப் பிராந்தியக் குழுவினர் மேற்படி அதிகாரத்தைச் செலுத்தாவிட்டால் மாத்திரமே அல்லது மேற்படி கடமையை நிறைவேற்றாவிட்டால் மாத்திரமே, இவ்வுட்பிரிவில் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற உரிமையைச் செலுத்தவேண்டும்:

மேலும், (b) பகுதியின்படி நடவடிக்கை எடுக்கும் முன் ஆணையர், உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கையை ஏன் எடுக்கக்கூடாது என்பதற்குக் காரணம் காட்ட பிராந்தியக் குழுவினருக்கு ஒரு நியாயமான வாய்ப்பை அளிக்கவேண்டும்.

(4) இச் சட்டத்திலே என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஒரு துணை அல்லது உதவி ஆணையருடைய உத்தியோகம் காலியாயிருந்தால், ஆணையர் அந்தக் காலி இடம் பூர்த்தி செய்யப்படுகிறவரையில்—

(a) துணை அல்லது உதவி ஆணையருக்கு இச் சட்டத்தினால் அல்லது இதன்படிக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களைத் தாமே செலுத்தலாம், விதிக்கப்பட்டுள்ள கடமைகளைத் தாமே நிறைவேற்றலாம், அல்லது

(b) மேற்படி அதிகாரங்களைச் செலுத்தவும், மேற்படி கடமைகளைச் செய்யவும் மற்றொரு துணை அல்லது உதவி ஆணையருக்கு அனுமதி கொடுக்கலாம்.

(5) எந்த உத்தரவின்பேரில் ஒரு வழக்குத் தொடரலாமென்று அல்லது ஒரு கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளலாமென்று இச் சட்டத்தில் நிபந்தனை கண்

டிருக்கிறதோ அப்படிப்பட்ட ஓர் உத்தரவா யிராமல், (1) (a), (2), (3) அல்லது (4) (a) உட்பிரிவின்படி ஆணையரால் பிறப்பிக்கப் பட்ட ஓர் உத்தரவினுல் துன்பமடைந்திருக் கிற யாதொரு கட்சிக்காரர், அவ் வுத்தரவு தம்மிடம் வந்து சேர்ந்த தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குள் அரசாங்கத்தாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்:

ஆனுல், யாதொரு கட்சிக்காரரின் முறை யீடுகளைச் சொல்லிக் கொள்வதற்கான நியாய மான வாய்ப்பு அவருக்கு இருந்தாலன்றி அரசாங்கத்தார் அவருக்கு விரோதமாக எவ் விதமான உத்தரவையும் பிறப்பிக்கக் கூடாது.

அத்தியாயம் III

அற நிலையங்கள்

பொது ஷரத்துக்கள்

23. **மத சம்பந்தமான கட்டளைகள் விஷய மாக ஆணையருக்குள்ள அதிகாரங்களும் கடமை களும்.**—இச் சட்டத்தின் ஷரத்துக்களுக்குட் பட்டு, மத சம்பந்தமான கட்டளைகளின் பரி பாலனம், ஆணையரின் பொதுவான மேற் பார்வைக்கும் ஆதிக்கத்துக்கும் உட்பட்ட தாகும்; மேற்படி கட்டளைகள் சரிவரப் பரி பாலிக்கப்படுகின்றனவென்றும் அவைகள் எந்தக் காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட னவோ அல்லது ஏற்பட்டிருக்கின்றனவோ அக் காரியங்களுக்காக அவைகளின் வரு மானம் கிரமமாகச் செலவிடப்படுகின்றன வென்றும் நிச்சயித்தறிந்துகொள்ள அவசிய மென்று கருதப்படக்கூடிய எந்த உத்தரவை யேனும் பிறப்பிப்பதற்கான அதிகாரமும் அத்தகைய மேற்பார்வையிலும் ஆதிக்கத் திலும் அடங்கும்.

24. **அற நிலையங்களில் நுழைய அதி காரம்.**—(1) ஆணையரும், துணை ஆணையர் களும், உதவி ஆணையர்களும் இது விஷய மாய் ஆணையரிடமிருந்தாவது பிராந்தியக் குழுவினரிடமிருந்தாவது அதிகாரம் பெற் றிருக்கக்கூடிய இதர அதிகாரிகளும், இச் சட்டத்தினுல் அல்லது இதன்படிச் செய்யப் பட்ட விதிகளினுல் கொடுக்கப்பட்டிருக்கிற யாதொரு அதிகாரத்தைச் செலுத்துவதற் கேனும் விதிக்கப்பட்டிருக்கிற யாதொரு கடமையைச் செய்தற்கேனும் யாதொரு அற நிலையத்தின் வளவிலாகிலும் வழிபாட்டுக் குரிய யாதொரு இடத்திலாகிலும் பிரவேசிக்க அதிகாரமுடையவராவார்கள்.

(2) மேற்படி அதிகாரத்தைச் செலுத் துகையிலாவது மேற்படி கடமையைச் செய்கையிலாவது அப்படிப்பட்ட யாதொரு அதிகாரி தடுக்கப்பட்டால், அதிகார வரம் புள்ள மாஜிஸ்ட்ரேட்டானவர் அவ்வதிகாரி யிடமிருந்து எழுத்துமூலமான வேண்டு கோளை வரப்பெற்றுக்கொள்வதன்பேரில், ஸப்-இன்ஸ்பெக்டர் தகுதிக் குறையாத தகுதியுள்ள யாதொரு போலீஸ் அதிகாரிக்கு, மேற்படி அதிகாரத்தைச் செலுத்துவதற் கேனும் மேற்படி கடமையைச் செய்வதற் கேனும் அவ்வதிகாரிக்குத் தேவையாயிருக்கக் கூடிய உதவியைச் செய்யும்படிக் கட்டளை யிடவேண்டும்

(3) கர்ப்பக்கிரகம் அல்லது, பூசைக் கிரகம் அல்லது, ஒரு அறநிலையத்தின் அல் லது வழிபாடு செய்யுமிடத்தின் வளவுகளுக் குள், சிறப்பாகத் தெய்வீகம் பொருந்திய தாய் வைத்திருக்கப்படுகிற யாதொரு இதர பகுதியில் பிரவேசிக்கும் முன் (1) உட் பிரிவினுல் அல்லது அதன்படி அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் அல்லது (2) உட்பிரி வில் குறிப்பிடப்பட்ட போலீசு அதிகாரி மேற்படி நிலையத்தின் தர்மகர்த்தா அல்லது தலைவருக்கு நியாயமான அறிவிப்பு கொடுப் பதோடு மேற்படி நிலையத்தின் மத நட வடிக்கைகளுக்கு அல்லது வழக்கத்திற்குத் தகுந்த மரியாதை கொடுக்கவும் வேண்டும்.

(4) இந்த உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள வளவுகளிலாயினும் இடத்திலாயினும் அதன் யாதொரு பாகத்திலாயினும் பிரவேசிக்க இந்துவாயிராத ஒருவருக்கு இந்தப் பிரிவில் கண்டதெதனுலும் அதிகாரம் ஏற்படுவதாகக் கருதப்படமாட்டாது.

(தொடரும்)

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-6